விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: பதினாறு

Valampurii

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 தை 05 திங்கட்கிழமை (18.01.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 30

ரா ம் கோ

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

ஆசியாக் கண்டத்தில் முதலாந் தர தொழிற்சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது ராம்கோ சீமெந்து

RAMCO

# வன்முறை, போர்க் குற்றங்களில் இலங்கை அரசு ஈடுபட்டுள்ளது

## டப்ளின் விசாரணைக்குழு குற்றச்சாட்டு

(கொழும்பு)

இராணுவத்திற்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையில் இடம்பெற்ற இறுதி யுத்தத்தின் போது அரசாங்கம் போர்க் குற்றங்களை மேற்கொண்டுள்ளதாகவும் மனிதத்திற்கு எதிரான வன்முறை மற்றும் குற்றங்களில் ஈடுபட்டதாகவும் டப்ளினில் நிரந்தர மக்கள் நீதிமன்றம் குற்றஞ்சாட்டியுள்ளது. அத்தோடு இலங்கை அரசாங்கம் இனப்படுகொலையை மேற்கொண்டமை குறித்து மேலதிக விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் எனவும் அது தெரிவித்துள்ளது. (16 ஆம் பக்கம் பார்க்க)



## துப்பாக்கி வெடித்ததில் சந்திரநேரு எம்.பி. காயம்

(மட்டக்களப்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரகாந்தன் சந்திரநேருவின் கைத்துப்பாக்கி தவறுதலாக வெடித்ததில் காயமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நேற்று திருக்கோவில் பகுதியில் நடைபெற்ற இந்தச் சம்பவத்தில் மேற் கால் பகுதியில் காயமடைந்த சந்திரகாந்தன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

சந்திரகாந்தனின் (16 ஆம் பக்கம் பார்க்க)

# தபால் மூல வாக்களிப்பினால் வெற்றி உறுதியாகி விட்டது!

## ஜெனரல் பொன்சேகா தெரிவிப்பு

(கொழும்பு)

எனது வெற்றி தற்போது உறுதி செய்யப்பட்டு விட்டது. ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு தபால் மூல வாக்களிப்பில் 90 வீதமானவர்கள் எனக்கு வாக்களித்துள்ளனர் என ஜனாதிபதி வேட்பாளர் ஜெனரல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

நுவரெலியாவில் நேற்று இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு பேசியபோதே இவ்வாறு அவர் தெரிவித்தார். நுவரெலியா மாநகர மேயர் சந்தனலால் கருணாரத்ன ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்தத் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க, முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம், ஜன நாயக மக்கள் (16 ஆம் பக்கம் பார்க்க)

## யாழிலிருந்து கொழும்புக்குச் சென்ற மினிவான் கொக்குவெளியில் விபத்து

### ★ சாரதி உட்பட இருவர் உயிரிழப்பு ★

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கிச் சென்று கொண்டிருந்த மினிவான் ஒன்று கட்டுப்பாட்டை இழந்து மரத்துடன் மோதி விபத்துக்குள்ளானதில் சாரதி உட்பட இருவர் பலியாகினர். மேலும் 8பேர் படுகாயமடைந்தனர்.

இச்சம்பவம் நேற்று வவுனியா கொக்குவெளிப்பகுதியில் இடம்பெற்றுள்ளது.

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு வந்து திரும்பும் வழியிலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

விபத்துக்குள்ளான வாகனத்தில் பலர் இருந்ததாகவும் இவர்களில் சாரதியும் பயணி ஒருவரும் சம்பவ (15 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழகத்திலுள்ள ஈழ அகதிகள் மீளக் குடியமர்த்தப்படுவார்கள்

### ஜயலத் எம்.பி. சென்னையில் தெரிவிப்பு

(சென்னை)

எதிர்க்கட்சிகளின் பொதுவேட்பாளர் ஜெனரல் சரத் பொன்சேகா தேர்தலில் வெற்றி பெற்றதும் தமிழகத்தில் உள்ள இலங்கை அகதிகள் மீள அழைக்கப்படுவார்கள் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன தெரிவித்துள்ளார்.

இந்தியாவுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் சென்னையில் நடத்திய செய்தியாளர் மாநாட்டின்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தமிழகத்திலுள்ள இலங்கை அகதிகளுக்குக் கௌரவமான (15 ஆம் பக்கம் பார்க்க)

# ஐக்கிய இலங்கைக்குள் தீர்வுத் திட்டம் என்பதே கூட்டமைப்பின் நிலைப்பாடு



## விளக்குகிறார் சம்பந்தன்

(கொழும்பு)

ஐக்கிய இலங்கைக்குள் தீர்வுத் திட்டம் என்பதே தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக் கட்சியின் நிலைப்பாடு என கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

பிளவுபடாத இலங்கை என்ற கொள்கையின் அடிப்படையிலேயே தாம் செயற்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அவர் நேற்று முன்தினம் வெளியிட்ட அறிக்கை வருமாறு,

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க்கட்சிகளின் பொதுவேட்பாளரான ஜெனரல் சரத் பொன்சேகாவை ஆதரிப்பதாக அறிவித்துள்ளது.

அதன் பின்பு ஊடகங்களில் இவ் ஆதரவு எந்த அடிப்படையில் வழங்கப்படுகின்றது என்பதையிட்டுப் பலவிதமான ஊகங்கள் எழுந்துள்ளன.

இவ் விடயம் தொடர்பாக பல உண்மையற்ற பிரசாரங்களும் நடைபெற்று வருகின்றன. எந்த அடிப்படையில் இவ் ஆதரவு வழங்கப்படுகின்றது என்பதைப் பற்றி நான் எந்தவொரு ஊடகத்திற்கும் எவ்விதமான பேட்டியும் கொடுக்கவில்லை. 2010 ஆம் ஆண்டு தை மாதம் ஆறாம் திகதி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் (02 ஆம் பக்கம் பார்க்க)

# பூநகரிக்குச் சென்ற ஆனந்தசங்கரி அங்குள்ள நிலைகுறித்து ஆராய்வு

தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் வீ.ஆனந்தசங்கரி தலைமையில் அவரின் செயலாளரும் யாழ்.மாநகர சபை உறுப்பினருமான இரா.சங்கையா உட்பட பூநகரிப் பிரதேசத்தைச் சேர்ந்த கட்சியின் முக்கிய பிரமுகர்கள் அடங்கிய குழுவினர் நேற்று முன்தினம் பூநகரிப் பிரதேசத்தில் மீளக்குடியமர்த்தப்பட்ட மக்களைப் பார்வையிட்டுள்ளனர்.

இது தொடர்பில் தமிழர் விடுதலைக் கூட்டணி வெளியிட்ட குறிப்பு வருமாறு,

தலைவர் ஆனந்தசங்கரி, தமது மிக நெருங்கிய நண்பர்கள் பலரை சந்தித்து உரையாடினார். கறுக்காய்தீவு, ஞானிமடம், நாகதேவன்துறை, வில்லடி, வாடியடி, பள்ளிக்குடா, 4ஆம் கட்டை, கிராஞ்சி, வேரவில், வலைப்பாடு பகுதிகளை குழுவினர் பார்வையிட்டனர். ஆயிரத்து 322குடும்பங்களைச் சேர்ந்த 4ஆயிரத்து 647பேர் இப்பகுதிகளில் மீளக்குடியேற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன் சங்குப்பிட்டி பாலத்தை பார்வையிட்ட குழுவினர் அதன் தற்போதைய நிலை பற்றி இராணுவ உயர் அதிகாரிகளுடன் கலந்துரையாடினார். வாடியடியில் இருந்து ஒரு நாளைக்கு மூன்று தடவையே பஸ் சேவையே நடைபெறுகின்றது. எனினும் யாழ்ப்பாணத்திற்கான சேவை நடைபெறுவதில்லை.

யாழ்ப்பாணம் செல்லும் மக்கள் பெரும் அவதிக்குள்ளாவதை பொதுமக்கள் எமது குழுவினரிடம் சுட்டிக்காட்டினார்கள். அத்துடன் கிராஞ்சி, வேரவில், வலைப்பாடு ஆகிய பகுதிகளில் இருந்து ஒரு நாளைக்கு ஒரேயொரு முறையே பஸ் போக்குவரத்து சேவையில் ஈடுபடுகிறது. இதனால் பெரும் கஷ்டத்தை அனுபவிப்பதை எடுத்துக்கூறி இதை உடனடியாக நிவர்த்தி செய்து போக்குவரத்து சேவையை சீர்செய்துதரும்படி வேண்டினார்கள்.

எந்தப் பகுதிக்குச் சென்றாலும் மக்கள் போக்குவரத்துப் பிரச்சினையையே முன்வைத்தார்கள். இதேவேளை வைத்தியர்கள் பற்றாக்குறையும் அதனால் மக்கள் பெரும் சிரமத்திற்குள்ளாவதையும் நேரடியாகவே அவதானிக்க முடிந்தது. பொது மக்களால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் அனைத்தையும் மிக அவதானமாக கேட்டறிந்த தலைவர் திரு வீ.ஆனந்தசங்கரி சம்பந்தப்பட்ட அதிகாரிகள், அமைச்சர்கள், வெளிநாட்டு தூதுவர்கள் ஆகியோரிடம் இது பற்றி எடுத்துக்கூறி ஆவன செய்வதற்கு முயற்சிகள் மேற்கொண்டுள்ளார் என்றுள்ளது. (சு)

## மினிவானுடன் மோதி யுவதி படுகாயம்

(யாழ்ப்பாணம்)

மினிவானும் சைக்கிளும் மோதி விபத்துக்குள்ளானதில் யுவதி ஒருவர் படுகாயமடைந்து யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இச் சம்பவம் நேற்று நண்பகல் கொக்குவில் சந்தியில் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் சுதுமலை வடக்கு மானிப்பாயைச் சேர்ந்த சிவராசா நித்தியா (வயது 23) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

பயணிகளை ஏற்றிக் கொண்டு யாழ். நோக்கி வந்த மினி வானுடன் தனியார் கல்வி நிலையமொன்றிலிருந்து வீடுநோக்கி சென்ற யுவதி கொக்குவில் சந்தியை தாண்ட முற்பட்ட போது மோதி விபத்துக்குள்ளானதாக தெரிவிக்கப்படுகிறது. (ச-30)

## 'சவால்கள் சாதனைகள் சாந்தி' நூல்வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி இ.த விக்னராஜாவின் வாழ்க்கைத் துணைவி திருமதி சாந்திகுமாரி விக்னராஜாவின் குடும்பத்தினர் தொகுத்த 'சவால்கள் சாதனைகள் சாந்தி' நினைவேடு வெளியீட்டு நிகழ்வு இன்று பிற்பகல் 3 மணிக்கு யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக உயர்நீதி மன்ற நீதியரசர் க.ஸ்ரீபவன் கலந்து கொள்ளவுள்ளார். முதல் பிரதியினை வண. கலாநிதி யஸ்ரின் ஞானப்பிரகாசம் பெற்றுக் கொள்வார். (ச-3)


MICRO PC SYSTEMS

இடமாற்ற அறிவித்தல்

யாழ். நகரில் முன்னணிக் கணனி நிறுவனமாகிய **Micro PC Systems (Pvt) Ltd, 175/3, Kasthurijar Road, Jaffna** என்ற விலாசத்தில் இருந்து 16.01.2010 சனிக்கிழமை முதல் **218, Hospital Road (House of VSRP)** எனும் புதிய கட்டிடத்துக்கு இடமாற்றப்பட்டுள்ளது என்பதை எமது அன்புக்குரிய வாடிக்கையாளர்களுக்குத் தெரிவித்துக் கொள்கின்றோம். உங்கள் தேவைக் கேற்ற கணனிகளையும் கணனித் தொகுதிகளையும் மலிவு விலையில் பெற்றுக் கொள்வதற்கும், கணனி சம்பந்தமான திருத்த வேலைகள், பராமரிப்புச் சேவை என்பவற்றையும் எம்மிடம் நம்பிக்கையுடன் பெற்றுக் கொள்ளலாம்.

**Micro Pc Systems (Pvt) Ltd**




House of VSRP Building
218, Hospital Road,
Jaffna.
T.P.: 021 222 5893, 021 791 3020
077 3126712, 077 396 3280

(C-4241)


# லொறிச் சில்லினுள் சிக்கி குடும்பப் பெண் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

துவிச்சக்கரவண்டியில் சென்று கொண்டிருந்த குடும்பப் பெண்ணொருவர் லொறிச் சில்லினுள் சிக்குண்டு படுகாயமடைந்த நிலையில் சம்பவ இடத்திலிருந்து மீட்கப்பட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்றுக் காலை 9.30 மணியளவில் நாவாந்துறையிலுள்ள மாதா தேவாலயத்திற்கு சமீபமாக இடம்பெற்றுள்ளது.

படுகாயமடைந்தவரான காக்கைதீவைச் சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தாயான ரசிந்திரன் யோகராணி (வயது 32) இவர் அலுவல்கள் நிமித்தம் யாழ்ப்பாணம் நோக்கிச் சென்று கொண்டிருந்தபோது அருகில் வந்த மோட்டார் சைக்கிளில் தட்டுப்பட்ட நிலையில் லொறிச் சில்லினுள் சிக்குண்டார்.

யாழ்ப்பாணம் நோக்கி கல் ஏற்றிவந்த லொறியின் பின் சில்லினுள் குறித்த பெண்ணின் இடது முழங்கால் பகுதி நசியுண்ட நிலையில் அவ்விடத்திலிருந்து மீட்கப்பட்டு வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். சம்பவ இடத்திற்கு பொலிசார் விரைந்து சென்று விசாரணைகளை மேற்கொண்டனர். (30-2)

# ஐக்கிய இலங்கைக்குள் தீர்வு...

நடத்தப்பட்ட பத்திரிகையாளர் மாநாட்டிலும் வெளியிடப்பட்ட அறிக்கையிலும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவால் மீண்டும் தனது ஆட்சிக் காலத்தை நீடிப்பதற்கு அவர் மக்களிடம் கேட்டிருக்கும் ஆணையை ஏன் ஆதரிக்க முடியாது என்பதையிட்டுத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது நிலைப்பாட்டை மிகவும் தெளிவாக விளக்கியுள்ளது.

குறிப்பிட்ட அறிக்கையிலிருந்து எதிர்க் கட்சிகளின் பொதுவேட்பாளரும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பிரதம எதிர்வேட்பாளருமாகிய ஜெனரல் சரத் பொன்சேகாவை ஆதரிப்பதற்கான காரணம் தெளிவாகின்றது.

இருந்தபோதிலும் கீழ்க் காணும் தெளிவுபடுத்தலை நான் முன்வைக்க விரும்புகின்றேன். தை மாதம் 6 ஆம் திகதி வெளியிட்ட அறிக்கையில் கூறிய பிரகாரம் நாங்கள் 2 முக்கியமான ஜனாதிபதி வேட்பாளர்களுடனும் பேச்சுவார்த்தை நடத்தியிருந்தோம்.

அவர்களுடன் தமிழ் மக்களுடைய உடனடித் தேவைகள் சம்பந்தமாகவும் வட கிழக்கில் வாழுகின்ற தமிழ்பேசும் மக்களினுடைய- தமிழ் மக்களுடையதும், முஸ்லிம் மக்கள் உடையதுமான அரசியல்தீர்வு தொடர்பாகவும் நாம் பேசியிருக்கின்றோம்.

நீண்ட காலமாக இவ் விடயம் சம்பந்தமாக நாட்டிலுள்ள ஏனைய அரசியல் கட்சிகள் விசேடமாக சிறிலங்கா சுதந்திரக் கட்சி, ஐக் கிய தேசியக் கட்சி, இலங்கை தமிழரசுக் கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, சிறிலங்கா முஸ்லிம் காங் கிரஸ், இடதுசாரி கட்சிகள் போன்றவைகளின் விரிவான பேச்சுவார்த்தைகள் சகலதும் எந்த ஓர் அரசியல் தீர்வும் ஒருமித்த பிரிக்கப்படாத இலங்கைக்குள் அமைய வேண்டும் என்ற அடிப்படையில் தான் இடம்பெற்றிருக்கின்றன.

இந்த நிலைப்பாட்டிற்கும் நாடாளுமன்றத்திற்கு உள்ளேயும் வெளியேயும் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணி ஏனைய தமிழ்க் கட்சிகளின் கூட்டணி யாகிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தனது உறுதியான நிலைப்பாட்டை வெளிப்படுத்தியுள்ளது.

இவ் விடயம் சம்பந்தமான 2006 ஆம் ஆண்டு ஆடி மாதம் 11 ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்களால் நியமிக்கப்பட்ட சர்வகட்சி நாடாளுமன்ற பிரதிநிதிகள் குழுவினதும் இக் குழுவுக்கு உதவ ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட நிபுணர்கள் குழுவினதும் ஆரம்பக் கூட்டத்தில் ஜனாதிபதி ஆற்றிய உரையில் கூறப்பட்டிருக்கும் சில விடயங்களைக் குறிப்பிடவேண்டியது எனது கடமை எனக் கருதுகின்றேன்.

2006 ஆம் ஆண்டு ஆடி மாதம் 12 ஆம் திகதி டெய்லி நியூஸ் பத்திரிகையில் ஜனாதி பதி உரை முழுமையாக இடம்பெற்றிருந்தது. குறிப்பிட்டிருந்த தலைப்புக்களின் கீழ் ஓர் அரசியல் தீர்வை ஏற்படுத்துவதற்காக நியமிக்கப்பட்ட அமைப்பிற்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்களால் தெளிவாகக் கூறிய கருத்துக்களை நான் சரிவர சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

**ஐக்கியம் ஆட்புல ஒற்றுமைப்பாடு**

எமது நாட்டினுடைய ஐக்கியம் ஆட்புல ஒருமைப்பாடு, இறையாண்மை பாதுகாக்கப்பட வேண்டும். இதில் பேரம்பேசுவதற்கு இடமில்லை. எமது இந்த நிலைப்பாட்டை சர்வதேச சமூகம் பரவலாக ஏற்றுக் கொண்டிருக்கின்றது.

விசேடமாக இந்தியாவும் இணைத் தலைமை நாடுகளும் நாட்டினுடைய பிரிவினையை முற்றாக நிராகரித்துள்ளன. பிரிக்கப்படாத இலங்கைக்குள் ஒரு நியாயமான தீர்வைக் கட்டியெழுப்புவதே எமது குறிக்கோளாக அமைய வேண்டும்.

தேசிய பிரச்சினைக்கு இங்கே கூடியிருக்கும் ஒவ்வொரு கட்சியும் தமது சொந்தத் தீர்வை வைத்திருக்கும். நாங்கள் கூடிப்பேசி வேறுபட்ட கருத்துக்களிலிருந்து எமது நாட்டிற்கு பொருத்தமான வடிவத்தைத் தேர்ந்தெடுப்போம்.

பண்டாரநாயக்க-செல்வநாயகம் ஒப்பந்தம் தொடக்கம் முன்னர் எடுக்கப்பட்ட சகல முயற்சிகளும் எம்மால் ஆராயப்பட வேண்டும். ஏனைய நாடுகளின் அனுபவத்திலிருந்து நாம் தக்க பாடங்களைக் கற்றுக் கொள்ள வேண்டும்.

நான் நாட்டின் மீது ஒரு தீர்வை திணிக்க மாட்டேன். ஆனால் உங்களுடைய ஆலோசனைகளின் மூலம் தேசிய பிரச்சினைக்கு ஒரு தீர்வைக் காணுவீர்கள்.

மேலும் முடிபுக்கு வரும் சில சிந்தனைகள் என்ற தலைப்பில் ஜனாதிபதி மகிந்த ராஜ பக்ஷ கூறியது பின்வருமாறு;

மோதலின் பின்னணி காரணிகளை மனதில் கொண்டு நாட்டின் இறையாண்மையை விட்டுக் கொடுக்காமல் எந்தவோர் அரசியல் தீர்வும் அதியுயர்ந்த அதிகாரப் பகிர்வை அடையக் கூடியதாக அமைய வேண்டும் என்றார்.

ஆனால் துரதிர்ஷ்டவசமாக இந்த ஆலோசனைகளில் பங்குபற்றிக் கொள்வதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்களால் கூறப்பட்ட மேல்குறிப்பிடப்பட்டிருக்கும் கருத்துக்களின் அடிப்படையில்தான் அரசியல் தீர்வு சம்பந்தமாக இரு பிரதான ஜனாதிபதி வேட்பாளர்களுடனும் எனது பேச்சுவார்த்தைகள் அமைந்திருந்தன.

ஒரே விடயங்கள் சம்பந்தமாகத்தான் எனது பேச்சுவார்த்தைகள் இரு பிரதான வேட்பாளர்களுடனும் நடைபெற்றது. இந்த விடயங்களில் எதுவும் நாட்டினுடைய பிரிவினைக்கு வழிவகுக்கக் கூடிவை எனக் கூற முடியாது.

குறுகிய அரசியல் இலாபத்திற்காக உண்மைகளைத் திரித்துக் கூறி இனவாதக் கருத்துக்களைப் பரப்பியதனால் நாட்டு மக்கள் போதிய துன்பங்களை அனுபவித்து விட்டார்கள்.

அவர்கள் கௌரவமான, நிரந்தரமான சமாதானத்திற்கு உரித்துடையவர்கள். யுத்தத்தின் முடிபு அவ்விதமான ஒரு சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு எமக்கு ஒரு சந்தர்ப்பத்தை ஏற்படுத்தியுள்ளது.

இவ்வாறான தன்னலம் கொண்ட உண்மைக்குப் புறம்பான பிரசாரத்தினால் நாட்டு மக்கள் ஏமாற்றப்படக் கூடாது என நான் கேட்டுக் கொள்கின்றேன் என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)


புதிய பிரிவுகள் ஆரம்பம் MIS
(341) Tamil / English Medium ICT - 10 /11
100% practical R.Kumaran - B.Sc.
# 74, Sabapathy Lane, Jaffna. TPNO: 0213216083



வேலை ஆட்கள் உடன் தேவை

யாழ்.நகரில் இயங்கும் பிரபல்யமான புடைவை வியாபார நிலையத்துக்கு ஆண், பெண் அனுபவமுள்ள, அனுபவமற்ற இரு பாலாரும் மாநகர எல்லைக்குள் உள்ளவர்கள் கூடுதலாக விரும்பத்தக்கது.

உடன் தொடர்பு கொள்ளவும்:-
T.P:- 021 222 9286

(367)

# இன்று ஒரு தகவல்

## குறிக்கோள் தேவையா?

ஒரு நண்பர் வந்தார்.

அவர் கொஞ்சம் விபரம் தெரிந்தவர்.

அவர் என்னைப் பார்த்து ஒரு கேள்வி கேட்டார்.

"உங்கள் இலட்சியம் என்ன?"

இது தான் அவர் கேட்ட கேள்வி.

இதற்கு நான் சொன்ன பதில்:

"இலட்சியம் இல்லாமல் வாழவேண்டும் என்பது தான் என் இலட்சியம்"

இந்தப் பதிலைக் கேட்டு அவர் அசந்து போனார்.

"என்ன இப்படிச் சொல்றீங்க?" என்றார்.

"இலக்குகளை நிர்ணயித்துக் கொண்டதால் வாழ்க்கை இறுக்கமாகி விடும். அதன் பின் வாழ்க்கையின் எல்லாப் பாகங்களையும் முழுமையாக அனுபவிக்கமுடியாது. குதிரைகளுக்குச் செய்வது போல் ஆகிவிடும். இடது பக்கம் - வலது பக்கம் பார்வைக்குத் தெரியாது. ஒரே நேர்கோட்டில் ஓடிக்கொண்டிருப்போம். அவ்வளவுதான்" என்றேன்.

"வாழ்க்கையில் தவறுகள் செய்யாமல் இருப்பதற்கு இலட்சியம் அவசியம்" என்றார்.

"அப்படியா சொல்றீங்க?" என்றேன்.

"நான் சொல்லவில்லை. சுவாமி விவேகானந்தர் சொல்கிறார்" என்றார்.

"என்ன சொல்கிறார்?"

"வாழ்க்கையில் இலட்சியம் கொண்டிருப்பவன் ஆயிரம் தவறுகள் செய்தால்... இலட்சியம் இல்லாதவன் ஐம்பதாயிரம் தவறுகள் செய்வான்" என்கிறார் சுவாமி விவேகானந்தர்.

இப்படிச் சொன்ன அந்த நண்பர் அதை விளக்குவதற்கு ஒரு கதையும் சொன்னார்.

ஓர் ஆச்சிரமம்.

அதனைச்சுற்றி ஏராளமான மரம் , செடி , கொடிகள்.

நிறைய மாமரங்கள்.

அவற்றில நிறைந்த கனிகள்.

அந்த ஆச்சிரமத்தைக் கடந்து சென்றால் அங்கே ஒரு பள்ளிக்கூடம்.

தினமும் அந்த ஆச்சிரமத்தின் வழியாகத்தான் பிள்ளைகள் போவார்கள், வருவார்கள். காலையில் அந்த வழியாக மாணவர்கள் போவதையும் மாலையில் அந்த வழியாக அவர்கள் திரும்புவதையும் ஆச்சிரமத்தில் இருந்த அந்த சந்நியாசி கவனித்துக் கொண்டிருப்பது வழக்கம்.

அந்த சந்நியாசிக்கு ஓர் ஆச்சரியம்.

மாணவர்கள் காலையில் அந்த வழியாகப் போகும் பொழுது அங்கே இருந்த மாமரத்தைத் திரும்பிக் கூடப் பார்ப்பதில்லை. ஒழுங்காகப் போவார்கள்.

ஆனால் மாலையில் திரும்பும் பொழுது அப்படியில்லை. அந்தச் சமயத்தில் அவர்களுடைய குணம் முற்றிலும் மாறிவிடும்.

மாமரத்தைப் பார்ப்பார்கள். அதில் இருக்கும் கனிகளைக் கவனிப்பார்கள். ஆளுக்கொரு கல்லைக் கையில் எடுத்துக் கொள்வார்கள். மாம்பழங்களைக் குறி வைத்து எறிவார்கள். பழங்கள் கீழே விழும். ஓடிப்போய் பொறுக்கிக் கொள்வார்கள்.

ஒரே சிரிப்பும் கும்மாளமுமாக இருக்கும்.

சந்நியாசி யோசிக்க ஆரம்பித்தார்.

காலையில் ஒழுங்காகப் பள்ளிக்கு போகும் மாணவர்கள் மாலையில் மட்டும் ஏன் இப்படிக் குறும்புக்காரர்களாக மாறி விடுகிறார்கள்.

அவருக்குப் புரியவில்லை.

ஒருநாள் ஒரு மாணவரைக் கூப்பிட்டார்.

அவன் வந்தான்.

"தம்பி! காலையில் ஒழுங்காக அமைதியாகப் போகிறீர்கள். மாலையில் மட்டும் இப்படிக் கல்லெறிந்து குறும்பு செய்கிறீர்களே... ஏன்?" என்று கேட்டார்.

அந்தச் சிறுவன் சொன்னான்.

"காலையில் நாங்கள் சரியான நேரத்துக்குப் பள்ளிக்கூடம் போகா விட்டால் வாத்தியார் அடிப்பார். ஆனால் மாலையில் அப்படியில்லை. வீட்டுக்கு எப்பொழுது வேண்டுமானாலும் போகலாம். அதனால் மாம்பழத்தை பறித்துக் கொண்டு வீட்டுக்குப் போகிறோம்" என்று சொல்லி விட்டு சென்றான்.

சந்நியாசி சிந்தித்தார். அவருக்கு ஓர் உண்மை வெளிச்சத்துக்கு வந்தது.

"இந்தப் பிள்ளைகள் காலையில் இந்த வழியாகப்போகும் போது... அவர்களுக்கு முன்னால் ஒரு நோக்கம் இருந் தது. இலட்சியம் இருந்தது. அதை அடைவதற்காக அவர்கள் செல்கிறார்கள். மாணவர் திரும்பும் போது அது இல்லை. அதனால் இப்படி நடந்து கொள் கிறார்கள்"

நண்பர் சொன்ன கதை இதுதான்.

இது சிறியவர்களுக்கு மட்டுமல்ல... பெரியவர்களுக்கும் பொருந் தும்.

வாழ்க்கையில் ஒரு குறிக்கோள் இல்லையென்றால் சிறியவர்கள் மட்டுமல்ல, பெரியவர்களும் பல தவறுகளைச் செய்து விடுகிறார்கள்.

இப்பொழுது விவேகானந்தர் சொன்ன வார்த்தைகளை மறுபடியும் யோசித்துப் பாருங்கள்.


"வாழ்க்கையில் இலட்சியம் கொண்டிருப்பவன் ஆயிரம் தவறுகளைச் செய்தால்... இலட்சியம் இல்லாதவன் ஐம்பதாயிரம் தவறுகளைச் செய்வான்" இதுதான் சுவாமி விவேகானந்தர் சொன்னது.

இந்தக் கருத்தை நான் என் நண்பன் ஒருத்தனிடம் சொல்லி விட்டு, "அதனால் இனிமேல் இலஞ்சம் வாங்கும் பழக்கத்தை விட்டு விடு" என்றேன்.

"அதெப்படி விடமுடியும்? அது தானே என் இலட்சியம்" என்கிறான்.

இவனெல்லாம் எந்தக் காலத்தில் திருந்துவது.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*



யாழ்.வண்ணை வைத்தீஸ்வரன் சிவன் கோயிலில் தைப்பொங்கலன்று நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் ஆலய தர்மகர்த்தா வை.ரமேஸ் வை.கோபாலகிருஷ்ணனுக்கு பரிசில் வழங்குவதையும், அருகில் பிரதமகுருக்கள் விக்னேஸ்வரன் நிற்பதையும், பஜனைக் குழுவில் கலந்துகொண்டவர்களையும் படங்களில் காணலாம்.

# மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளை மேம்படுத்த வேண்டும் -ஆளுநர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வன்னியிலிருந்து இடம்பெயர்ந்து யாழ்ப்பாணம் வந்துள்ள மாணவர்களுக்கு துவிச்சக்கர வண்டி வழங்கும் நிகழ்வு நேற்றுக் காலை சென்ஜோன்ஸ் பாடசாலை மைதானத்தில் நடைபெற்றது.

இங்கு கருத்து தெரிவித்த வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி எமது மாணவர்களின் எதிர்கால கல்வி நடவடிக்கைகளை மேம்படுத்தும் நோக்குடன் இச்செயற்பாடுகளை தாம் மேற்கொள்வதன் நோக்கம் கூடுதலான மாணவர்கள் செட்டிக்குளம் பகுதியில் இடம்பெயர்ந்து தங்கியிருந்த நிலையில் யாழ்ப்பாணம் வந்துள்ள இவர்களின் கல்வி நடவடிக்கைகளை மேன்மேலும் ஊக்குவிக்கப்பட வேண்டும் என்றார்.

மேலும் மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளுக்கு இடையூறாக இருப்பதில் முக்கியமானது போக்குவரத்துப் பிரச்சினை. இதற்காகவே துவிச்சக்கரவண்டிகளை வழங்குகின்றோம்.

தற்போது இடம்பெயர்ந்து யாழ். குடாநாட்டிற்கு வந்தவர்களுக்கு 1500 க்கு மேற்பட்ட துவிச்சக்கர வண்டிகள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன.

அதேபோல் மேலும் 1000 துவிச்சக்கர வண்டிகளை பகிர்ந்தளிக்க உள்ளோம். அத்துடன் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் யாழ். மாநகர முதல்வர் ஆகியோரின் உதவியுடன் நூலகத்தில் சிறுவர்கள் நூல்களின் தட்டுப்பாட்டை நீக்க தரமான ஆங்கில நூல்களை வழங்கவுள்ளோம் என்றார்.

தற்போது மாணவர்களுக்கு வழங்குகின்ற சலுகை வசதிகள் யாவும் வடக்கின் வசந்தம் திட்டத்திற்கு அமையவே வழங்கப்படுகின்ற தென்றும் மேலும் மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளுக்கு உறுதுணையாக விளங்குகின்ற ஆசிரியர்கள், பெருந்தகைகள் அனைவருக்கும் சிரம்தாழ்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதாகவும் வடமாகாண ஆளுநர் மேலும் தெரிவித்துள்ளார்.

(2-30)

## இராசி பலன்

18-01-2010

(தை 05 திங்கட்கிழமை)

திருதியை முன்னிரவு 7.11 மணிவரை

அவிட்டம் நண்பகல் 12.01 மணிவரை

இராகுகாலம் 8.05-9.35 மணிவரை

சுபநேரம் 12.35 - 2.05 மணிவரை

| | |
|---|---|
| மேடம் | குடும்பமகிழ்ச்சி, நிலை மாற்றம், கீர்த்தி, பொருள்சேர்க்கை |
| இடபம் | கடின முயற்சி, சுபநிகழ்வு, நண்பர்கள் உதவி, போசன நன்மை |
| மிதுனம் | சரீரப் பிரயாசை, பிரயாணம், கௌரவக்குறைவு, கட்டுப்பாடு |
| கடகம் | எதிர்பாராத பகை, ஆரோக்கியக்குறைவு, முயற்சி தாமதம், போசனசுகம் |
| சிங்கம் | மனோ தைரியம், செய்தொழில் விருத்தி, நண்பர்கள் சந்திப்பு, பொருள் சேர்க்கை |
| கன்னி | சத்துரு ஜெயம், தடைப்பட்ட காரியம் கைகூடும், போசன நன்மை, தேகநலன் |
| துலாம் | பணக்குறைவு, வேலைச்சுமை, தாழ்ந்த சுபாவம், போசனசுகக் குறைவு |
| விருச்சிகம் | மனச்சஞ்சலம், தொழில் நன்மை, தனவிரயம், ரோகநிலை |
| தனுசு | நற்கீர்த்தி, உறவினர் வருகை, காரிய அனுகூலம், தனதானிய சேர்க்கை |
| மகரம் | உடல்நலக்குறைவு, எடுத்த காரியம் தாமதமாகும், சிந்தனை மிகுதி, தனவிரயம் |
| கும்பம் | வெகுமானம், மாதர் நட்பு, நல்லமுயற்சி, போசனசுகம் |
| மீனம் | சோம்பல் நிலை, பெரியோர் உதவி, முயற்சி தாமதம், சுப செலவு |

வளவன்

## சிகிச்சை பெற்றோர் விபரம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி ஆதாரவைத்தியசாலையில் கடந்த வருடம் ஒரு இலட்சத்து 40ஆயிரம் நோயாளர்கள் சிகிச்சை பெற்றுள்ளதாக வைத்தியசாலை புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.

இதில் வெளிநோயாளர்கள் பிரிவில் ஒரு இலட்சத்து 17 ஆயிரத்து 17 பேரும் விடுதிகளில் தங்கி 17 ஆயிரத்து 738 பேரும் பொது மருத்துவம், நீரிழிவு கிளினிக்குகளில் ஆயிரத்து 600 பேரும் சிகிச்சை பெற்றதுடன் மாதாந்தம் நடைபெறும் மனநோய், மார்பு நோய், சத்திரகிசிச்சை ஆகிய கிளினிக்குகளிலும் கணிசமான நோயாளர்கள் சிகிச்சை பெற்றுக் கொள்வதாக தெரிவிக்கப்படுகிறது.

மேலும் நலன்புரி நிலையங்களில் உள்ள ஆயிரக்கணக்கான நோயாளர்களுக்கு விடேச மருத்துவக் குழுவினரும் சிகிச்சையளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-29)

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 240 | 260 | 140 |
| உருளைக்கிழங்கு | 60 | 70 | 60 |
| பச்சைமிளகாய் | 180 | 200 | 200 |
| தக்காளி | 100 | 120 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 50 | 40 |
| கோவா | 80 | 100 | 100 |
| கரட் | 150 | 160 | 140 |
| பூசணி | 40 | 50 | 40 |
| புடோல் | 100 | 120 | 60 |
| வாழைக்காய் | 70 | 80 | 60 |
| சின்ன வெங்காயம் | 100 | 120 | 110 |
| பெரிய வெங்காயம் | 80 | 100 | 80 |
| பாகற்காய் | 200 | 220 | 160 |
| வெண்டிக்காய் | 140 | 160 | 60 |
| கரணைக்கிழங்கு | 35 | 35 | 40 |
| பயிற்றங்காய் | 160 | 180 | 140 |
| லீக்ஸ் | 140 | 150 | 100 |
| பீற்றூட் | 140 | 150 | -- |
| கறிமிளகாய் | 300 | 300 | -- |
| முருங்கைக்காய் | -- | -- | -- |
| போஞ்சி | 110 | 120 | 120 |
| கத்தரி தம்புள்ள | 160 | 180 | 120 |
| கீரை - 1 பிடி | 40 | 40 | 30 |
| தேசிக்காய் | 80 | 100 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 40 | 30 |


# இலங்கை - இந்தியத் தொடர்புகளை

# கல்லூரி மாணவர்கள் அறியவேண்டும்

## தொல்லியல் ஆய்வாளர் ராஜன் வேண்டுகோள்

தமிழகத்துக்கும் இலங்கைக்கும் இடையேயான வரலாற்று சிறப்புமிக்க தொடர்புகளைப் பள்ளி, கல்லூரி மாணவர்கள் அறிய வேண்டும் என தொல்லியல் ஆய்வாளர் ராஜன் கூறினார்.

இலங்கையில் பண்டைய தமிழர் நாகரிகம் என்ற தொல்லியல் கண்காட்சி தேனாம்பேட்டையில் உள்ள ஸ்ரீபார்வதி ஆர்ட் கேலரியில் நேற்று முன்தினம் ஆரம்பமாகியது. கண்காட்சியை வரலாற்று அறிஞர் முத்தையா ஆரம்பித்துவைத்தார். இக்கண்காட்சி குறித்து இந்தியன் சயன்ஸ் மொனிட்டர் அமைப்பின் இயக்குனர் டி. கே. வி. ராஜன் நிருபர்களிடம் கூறியதாவது, இந்தியாவிற்கும், குறிப்பாக தமிழகத்திற்கும் இலங்கைக்கும் இடையே 2 ஆயிரம் ஆண்டுகளுக்கும் மேலாக அரசியல், வணிகம், கலை மற்றும் பண்பாடு ரீதியான தொடர்புகள் இருந்து வந்துள்ளன என்பதை தொல்லியல் சான்றுகள் உணர்த்துகின்றன.



சேரன் செங்குட்டுவன் வஞ்சி மாநகரில் கண்ணகிக்கு சிலை எடுத்தபோது, அவ்விழாவில் இலங்கையை ஆண்ட அரசர் கஜபாகுகாமினி, சிறப்பு விருந்தினராக பங்கேற்றதற்கான சான்று, சிலப்பதிகாரத்தில் உள்ளது. தினமலர் நாளிதழ் ஆசிரியர் டாக்டர் இரா. கிருஷ்ணமூர்த்தி, கொழும்பு அருங்காட்சியகத்தில் உள்ள கி. மு. மூன்றாம் நூற்றாண்டைச் சேர்ந்த சங்ககால நாணயங்களை ஆய்வு செய்து, சங்ககால அரசனான, பெருவழுதி என்பவரின் பெயர் அந்நாணயங்களில் பொறிக்கப்பட்டிருப்பதை கண்டறிந்தார். இதன் மூலம் தமிழகத்திற்கும் இலங்கைக்கும் இடையே சங்க காலத்திலேயே வாணிபத் தொடர்பு இருந்தது உறுதி செய்யப்படுகிறது.

அனுராதபுரத்திற்கு அருகில் உள்ள குமாரகணத்துப் பேரூரார், நான்கு நாட்டார் இடங்களில் கண்டெடுக்கப்பட்ட கல்வெட்டுக்களில் தமிழகத்தைச் சேர்ந்த சேக்கிழான் செட்டிரங்கன், சேக்கிழான் சென்னை ஆகிய வணிகர்களின் பெயர்கள் இடம்பெற்றுள்ளன. நெல்லைக்கு அருகில் உள்ள ஆதிச்சநல்லூர் மற்றும் இலங்கையின் பொம்பரப்பில் கண்டறியப்பட்ட பானை ஓடுகளின் அமைப்பு ஒன்றாகவுள்ளது.

மேலும் இலங்கையில் படமோம்பாபேனா என்ற இடத்தின் கற்கால மனிதர்கள் வாழ்ந்த குகைகள், திருவள்ளூர் மாவட்டம், குடியத்தில் கண்டறியப்பட்ட குகைகளோடு ஒத்துள்ளன. இலங்கை – இரணைமடுவில் வாழ்ந்த கற்கால மனிதர்கள் பயன்படுத்திய கற்கோடாரிகளை, திருவள்ளூர் மாவட்டம், அத்திரம்பாக்கத்தில் கிடைத்துள்ள கற்டோரிகளோடு ஒப்பிடலாம். அனுராதபுரத்தில் உள்ள தமிழ் கல்வெட்டுக்கள், இலங்கை – தமிழ் இலக்கிய வரலாற்றின் மிக முக்கிய ஆவணம். இக்கல்வெட்டில், தருமபாலர் என்ற பௌத்த துறவி குறித்த தமிழ்ப் பாடல் இடம்பெற்றுள்ளது.

அனுராதபுரத்திற்கு அருகில் உள்ள யாப்பஹூவ மலையில் இடம்பெற்றுள்ள பரத நாட்டிய நடன மங்கையின் சிற்பம், தஞ்சை பிரகதீஸ்வரர் கோவில் சிற்பங்களை நினைவூட்டுகின்றன.

கி.பி. 12ஆம் நூற்றாண்டில் பராக்கிரமபாகு ஆட்சியில் தமிழ், சிங்கள சிற்பிகளால் பொலன்னறுவையில் அமைக்கப்பட்ட தூபிக்கு, தமிழ் தூபம் எனப் பெயரிடப்பட்டது. இலங்கையில் புத்தமதம் ஏற்படுத்திய தாக்கத்தை கந்தரோடை, வல்லிபுரம், நிலாவரை, கன்னரகம் ஆகிய இடங்களில் கிடைத்துள்ள புத்தர் சிலைகள் மூலம் அறியலாம். தமிழகத்திற்கும் இலங்கைக்கும் இடையே யான வரலாற்று சிறப்புமிக்க தொடர்புகள் குறித்து இளம் தலைமுறையினர் அறிய வேண்டும். இவ்வாறு ராஜன் கூறினார்.

## சிறந்த சுற்றுலா மையம்

(கொழும்பு)

உலகில் சிறந்த சுற்றுலா கேந்திர நிலையம் இலங்கையாகும் என்று நியூயோர்க் ரைம்ஸ் பத்திரிகை சுட்டிக்காட்டியுள்ளது.

சுற்றுலா பயணிகளுக்குப் பொருத்தமான உலக நாடுகள் வரிசையில் இலங்கை 31ஆவது இடத்தை வகிப்பதாக இந்தப் பத்திரிகை குறிப்பிட்டுள்ளது.

தற்போது நிலவும் சுமூகமான சூழ்நிலை இதற்கு காரணமாகும். இந்த வருடத்தில் 5 இலட்சம் சுற்றுலா பயணிகளின் வருகையை இலங்கை அரசாங்கம் எதிர்பார்க்கின்றது என்று அது தெரிவித்துள்ளது. (2-4)

## ஓய்வூதியத் திட்டம்

(சாவகச்சேரி)

யாழ். மாவட்ட சமூக பாதுகாப்பு சபையின் ஓய்வூதியத் திட்டத்தில் தென்மராட்சிப் பிரதேச செயலாளர் பிரிவில் 2 ஆயிரத்து 365 பேர் இணைந்துகொண்டுள்ளதாகத் தெரிவிக்கப் படுகிறது.

வறுமைக்கோட்டின் கீழ் உள்ள குடும்பத்தினரை மட்டும் இணைக்கும் இத்திட்டம் சமூக நலத்துறை மற்றும் சமூக சேவைகள் அமைச்சின் கீழ் உள்ள சமூக பாதுகாப்பு சபையின் ஓய்வூதியத் திட்டமாகும். (2-4-29)


## கலை இலக்கியப் போட்டிகளில் நல்லூர் மங்கையற்கரசி வித்தியாலயம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச செயலகப் பிரிவு கலை இலக்கியப் பெருவிழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டிகளில் யாழ். நல்லூர் மங்கையற்கரசி மகாவித்தியாலய மாணவர்கள் கனிஷ்ட பிரிவு கவிதையாக்கத்தில் முதல் மூன்று இடங்களைப் பெற்றுள்ளனர்.

இதில் முதலாம் இடத்தை கு. தாட்சாயினியும், இரண்டாம் இடத்தை பு. ரிஷிகேசனும் மூன்றாம் இடத்தை அ. மதுரிகாவும் பெற்றுள்ளனர்.

மேலும் இப்பாடசாலையில் வன்னியிலிருந்து இடம்பெயர்ந்து வந்து கல்வி கற்கின்ற ஆரம்ப இடை நிலைப் பிரிவுக்குரிய மாணவர்களுக்கான தளபாடங்களை யூனிசெவ் நிறுவனம் வழங்கியுள்ளதாக வித்தியாலய அதிபர் தெரிவித்துள்ளார். (2-4)




## பொறுப்பானவர்கள் சட்டங்களை மதிக்கவில்லை

## தேர்தல்கள் ஆணையாளர் குற்றச்சாட்டு

(கொழும்பு)

தேர்தல் விதிமுறைகளையும் சட்டதிட்டங்களையும் கடைப்பிடிக்குமாறு சம்பந்தப்பட்ட அனைத்து அரசியல் கட்சியின் பொறுப்பு வாய்ந்தவர்களுக்கு எடுத்துரைத்து அதனை எவருமே கடைப்பிடித்ததாகத் தெரியவில்லை. தேர்தல் சம்பந்தமான விதிமுறைகள், சட்டதிட்டங்கள் இவர்களுக்கு ஏட்டுச் சுரக்காயாகவே உள்ளதாகத் தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்க தம்மைச் சந்தித்த சர்வமதத் தலைவர்களிடம் தெரிவித்துள்ளார்.

தேர்தல் வன்முறைகளைத் தவிர்க்க சர்வமத குழுக்களின் அங்கத்தவர்கள் கடந்த வியாழக்கிழமை தேர்தல்கள் ஆணையாளரை நேரடியாகச் சந்தித்து தற்போது நாட்டில் பெருகிவரும் தேர்தல் வன்முறைகளைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரும் நோக்குடன் செயற்படவேண்டுமென வலியுறுத்தியுள்ளனர்.

சர்வமத குழு அங்கத்தவர்களின் ஆலோசனையை ஏற்ற ஆணையாளர் தற்போது இடம்பெற்றுவரும் அரசியல் வன்முறைகள் ஆரோக்கியமானதாகத் தென்படவில்லை. அவை பல அழிவுகளையே கொண்டு வந்துள்ளன.


தேர்தல் தொடர்பில் அவர் தொடர்ந்து கூறுகையில், எதிர்வரும் 26ஆம் திகதி காலை 7 மணிக்கு ஆரம்பமாகும் வாக்களிப்பு நடவடிக்கைகள் மாலை 4 மணிக்கு முடிவடைய வேண்டும். நாடெங்கிலும் அமைக்கப்பட்டுள்ள எந்தவொரு வாக்கு நிலையத்திலும் வாக்களிப்பு விதிமுறைகள் மீறப்படும் பட்சத்தில் அந்த வாக்கு நிலையத்தின் வாக்குகள் செல்லுபடியற்றதாகக் கணிக்கப்பட்டு அவை நிராகரிக்கப்படும்.

தேர்தல் பெறுபேறுகள் உரிய நேரத்தில் வெளியிடப்பட வேண்டுமாயின் தேர்தல் விதிமுறைகள் சட்டதிட்டங்களை உரிய முறையில் கடைப்பிடித்தால் மட்டுமே சாத்தியமாகும். வாக்களிப்பு நடவடிக்கைகளைக் குழப்ப எத்தனித்தால் பெறுபேறுகள் வெளியிடுவதில் ஏற்படப்போகும் தாமதத்தைத் தவிர்க்க முடியாது என்றார்.

உங்கள் வலம்புரி இணையத்தளத்தில்...
www.valampurii.com
குறிப்பு:- மரண அறிவித்தல்கள் மேலதிக கட்டணம் எதுவுமின்றி இணையத்தளத்தில் பிரசுரிக்கப்படும்.

# நாயக்கர் கால சிற்பக்கலை

105



ஆயிரங்கால் மண்டபத்தில் பல உருவங்கள் உள்ளன. அதிலுள்ள முதலாவது தூணிலே அகோர வீரபத்திரரின் உருவம் அமைந்திருக்கின்றது. தோற்றம் பயங்கர மானது.தொங்கும் மீசையும் நீண்ட கோரப் பற்களுங் காணப்படுகின்றன. ஜடா மகுடத்திலே இலிங்கத்தின் உருவம் நடுவில் அமைந்திருக்கின்றது.

சிகைக் சக்கரத்தில சிங்கமும் காணப்படுகின்றது. இடது கரத்திற் கேடயமும் வலது கரத்தில் வாளின் கைபிடியும் காணப்படுகின்றன.

கழுத்திலே தொங்கும் கபாலமாலையின் உருவம் தெரிகின்றன. கால்கள் இரண்டும் மனிதவடிவம் ஒன்றை உழக்கும் கோலத்தில் அமைந்திருக்கின்றன. அது தக்ஷனுடைய உருவமாகும். கம்பத்தடி மண்டபத்திலும் அகோர வீரபத்திரர், அக்கினி வீரபத்திரர் ஆகியோரின் உருவங்கள் காணப்படுகின்றன.


### 23.அஷ்ட சக்திகள்

சக்திகள் எண்மரின் உருவங்கள் அஷ்ட சக்தி மண்டபத்தில் அமைந்துள்ளன. இடைவெளியின் இரு பக்கங்களிலும் அவை காணப்படுகின்றன. யக்ஞரூபினி, சியாமளை, மகேஸ்வரி,மனோன்மணி ஆகியோரின் படிமங்கள் வடக்குப் பக்கத்திலும் கௌமாரி, ரௌத்திரி, வைஷ்ணவி, மகாலக்ஷ்மி என்போரின் உருவங்கள் தெற்குப் பக்கத்திலும் அமைந்துள்ளன. எல்லாச் சிற்பங்களும் ஏறக்குறைய ஐந்து அடி உயரமானவை.

சமபங்கு நிலையில் தூண்களிலே அவை செதுக்கப்பட்டுள்ளன. ரௌத்திரி, மனோன்மணி ஆகியோர் தவிர்ந்த ஏனையோரின் முன்கரங்கள் அபயமாகவும் வரதமாகவும் உள்ளன.

மனோன்மணி, ரௌத்திரி நீங்கலாக உள்ள சக்திகளின் முடிகள் கிரீட மகுடங்களாகவும். யக்ஞ ரூபினியின் பின்வலக் கரத்திலே சுருவமும் பின்னுள்ள இடக் கரத்திலே மலர்வடிவமும் அமைந்துள்ளன. சியாமளையின் கரங்கள் தாமரை, நீலோற்பலம் ஆகியவற்றை ஏந்தியுள்ளன. மகேஸ்வரியின் கரங்களிலே தாமரை மலரும் பாசமும் தெரிகின்றன.

மனோன்மணியினுடைய சின்னமுத்திரையில் அமைந்த வலக்கரத்தில் அக்ஷமாலை தெரிகின்றது. முன் இடக்கரத்தில் நீலோற்பலம் அமைந்துள்ளது. மற்றக் கரங்களில் தாமரை மலர்கள் உள்ளன. முடி





ஜடாமகுடமாக அமைந்துள்ளது. கௌமாரியின் பின்கரங்கள் இரண்டும் சக்தி, வச்சிராயுதம் ஆகியவற்றை ஏந்திய வண்ணமாயுள்ளன.

ரௌத்திரியின் ஜடாமகுடம் அக்கினிச் சுவாலைகளினால் அமைந்தது . உதடுகளின் ஓரங்களிலே கோரமான பற்கள் தெரிகின்றன. முன் வலக்கரத்திற் சூலமும் இடக் கரத்திற் கபாலமும் அமைந்துள்ளன. பின் வலக்கரத்தில் டமருகமும் இடக்கரத்திற் சங்கும் காணப்படுகின்றன. வைஷ்ணவியின் முடி கீரிட மகுடமாகும். நெற்றியிலே திரிபுண்டரம் தெரிகின்றது. பற்கள் கோரமானவை.

பின் வலக்கரம் சக்கரம் ஏந்தியுள்ளது. பின் இடக்கரத்தில் சங்கு அமைந்துள்ளது. மகாலக்ஷ்மியின் பின் கரங்கள் தாமரை மலர்களை ஏந்திய கோலமானவை.

### 24.விநாயகர்

விநாயகரின் படிமங்கள் காணப்படுகின்றன. கோயில் வளாகத்திலே விநாயகர் கோட்டங்களும் அமைந்துள்ளன. கிளிகட்டி மண்டபத்து சித்தி விநாயகர் சந்நிதி தல விநாயகருக்கு உரியதாகும். சுந்தரேஸ்வரரர் கோவிலின் நடுக்கட்டுக் கோபுரத்திற்கு முன்னால் முக்குறுணிப் பிள்ளையாரின் பெருவடிவம் அமைந்திருக்கின்றது. அதிலே நான்கு கரங்கள் காணப்படுகின்றன. முன் வலக்கரத்தில் தந்தமும் பின் வலக்கரத்தில் அங்குசமும் அமைந்துள்ளன.

முன் இடக் கரத்தில் மோதகமும் மற்றக் கரத்திலே பாசமும் அமைந்திருக்கின்றன. உருவம் பத்மாசன நிலையில் அமைக்கப்பட்டுள்ளது.

அஷ்டசக்தி மண்டபத்தில் எலி வாகனத்தில் அமர்ந்த பிள்ளையாரின் வடிவம் மிகுந்த வனப்புடன் அமைக்கப்பட்டுள்ளது. இடப்பக்கத்திலே தேவியின் உருவம் தெரிகின்றது. படிமத்திலே பத்துக்கரங்கள் அமைந்துள்ளன. அங்குசம், தந்தம், சக்கரம் ஆகியவை வலக்கரங்கள் மூன்றில் அமைந்துள்ளன. இடக்கரங்களிலுள்ள உருவங்களில் தாமரை, கரும்பு, வில்,பாசம் என்பனவே தெளிவாகத் தெரிகின்றன. முன் இடக்கரம் தேவியை அணைத்த வண்ணமாயுள்ளது. துதிக்கையிலே கலசம் அமைந்திருக்கின்றது. ஆயிரங்கால் மண்டபத்திலும் மகாகணபதியின் சிற்பம் ஒன்று செதுக்கப்பட்டுள்ளது.

### 25. குமாரக்கடவுள்

நான்கு கரங்கள் பொருந்திய சுப்பிரமணியரின் வடிவம் ஆயிரங்கால் மண்டபத்தில் அமைந்திருக்கின்றது. மயில் வாகனராகி அவர் காட்சியளிக்கின்றார். பின் கரங்களில் சக்தி, வச்சிராயுதம் ஆகியவை அமைந்திருக்கின்றன. முன் வலக்கரம் அபயகரமாக அமைந்துள்ளது.

முன்இடக்கரம் மயிலைப் பிடித்த கோலத்திலே தெரிகின்றது.அக்ஷ்டசக்தி மண்டபத்தில் ஆறுமுகக் கடவுளின் வடிவம் அமைந்திருக்கின்றது. அதிலே பன்னிரண்டு கரங்கள் உள்ளன. முன்கரங்கள் இரண்டும் அபயமாகவும், வரதமாகவும் உள்ளன. மணி,அம்பு, வாள், சக்கரம், பாசம் ஆகியன வலக்கரங்களில் அமைந்திருக்கின்றன. இடக்கரங்கள் வேல், வில், கேடயம், மலர், கோழி ஆகியவற்றைப் பிடித்த வண்ணமாய் உள்ளன. கோபுரங்கள் சிலவற்றிலும் குமாரக் கடவுளின் உருவங்கள் காணப்படுகின்றன.

### 26.சரஸ்வதி

ஆயிரங்கால் மண்டபத்திலே உன்னதமான வேலைப்பாடுகளுடன் கூடிய சரஸ்வதியின் படிமம் செதுக்கப்பட்டுள்ளது. கைகளிலே வீணையின் உருவம் அமைந்திருக்கின்றது. அங்கலசக்ஷணங்களும் அபிநயங்களும் மிகுந்த வனப்புடன் அமைக்கப்பட்டுள்ளன. தலையிலே கிரீடம் அமைந்திருக்கவில்லை.

### 27. கங்காள மூர்த்தி

ஆயிரங்கால் மண்டபத்தில் அமைந்துள்ள கங்காள மூர்த்தியின் வடிவம் ஆகமங்களிலே சொல்லப்படும் அமைப்பில் இருந்து சில அம்சங்களில் வேறுபட்டதாகும். மூர்த்தியினுடைய முன் வலக்கரம் மானைத் தொடுங் கோலத்தில் அமைந்துள்ளது. பின் வலக்கரம் டமருகம் ஏந்தியுள்ளது.முன் இடக் கரத்தில் கபாலம் அமைந்துள்ளது. சூல தண்டம் பின் இடக்கரத்தில் அமைந்துள்ளது. கங்காளர் வஸ்திர தாரணராகக் காட்சியளிக்கின்றார்.பாதங்களிலே அணிகள் தெரிகின்றன.

### 28. ரதியும் மன்மதனும்


ரதி,மன்மதன் ஆகியோரின் உருவங்கள் ஆயிரங்கால் மண்டபத்திலே அமைக்கப்பட்டுள்ளன. மன்மதனுடைய உருவம் சிதைவுற்றுள்ளது.கைகள் இரண்டும் உடைந்து விட்டன. கையில் ஏந்திய கரும்பு, வில்லின் ஒரு சிறிய துண்டமே எஞ்சியுள்ளது. ரதியின் வடிவம் நன்கு பேணப்பட்ட நிலையிலே காணப்படுகின்றன. ரதியை அழகின் உருவமாக வியக்கத்தக்க வண்ணம் கலைஞர் வடிவமைத்துள்ளமை போற்றுதற்குரிய சாதனை யாகும். அன்னப் பறவையின் மேல் அமர்த்திருக்குங் கோலத்தில் வடிவம் தெரி கின்றது. பக்கத்திலே அமைந்திருக்கும் சாமரை வீசும் உருவம் அற்புதக் கோலமானது.

மண்டபத்தூண்களிலே நாயக்க மன்னர்களின் உருவங்களும் அவர்களின் தேவியரின் வடிவங்களும் திருப்பணி செய்த பிரதானிகளின் உருவங்களும் பல இடங்களிலே காணப்படுகின்றன. எல்லா நாயக்க மன்னர்களின் வடிவங்களும் மண்டபங்களிலே அமைக்கப்பட்டிருக்கின் றமை ஒரு சிறப்பம்சமாகும். கற் சிற்பங்கள் இயல்பான தோற்றங் கொண்டனவாகவும் உயிரோட்டம் உள்ளனவாகவும் அமைந்திருக்கின்றன. அவர்களுக்குரிய வஸ்திர அலங்காரங்களும் பதவிச் சின்னங்களான அணிகலன்களும் மிகுந்த வனப்புடன் அமைக்கப்பட்டுள்ளன.


பேராசிரியர் சி.பத்மநாதன்

ஆயிரங்கால்மண்டபத்திலே காணப்படும் குறவன், குறத்தி,வேடன்,அரண்மனைப் பணிப்பெண்முதலியோரின் உருவங்கள் வேலைப்பாட்டிற்கு சாலவுஞ் சிறந்தவை. இவற்றைப்போன்ற யதார்த்த பூர்வமான மனித உருவங்களின் மாதிரி வடிவங்களைக் காணல் அரிது. மதுரைக் கோயில் விஜய நகர நாயக்கர் காலச் சிற்பக்கலையின் அருங் காட்சியகமாக விளங்குகின்றது. அங்குள்ள வடிவங்கள் தமிழகத்து கட்டட,சிற்பக் கலை வளர்ச்சியின் உன்னத கட்டத்தைப் பிரதி பலிக்கின்றன.

(தொடரும்)



**"விஜயநகரப் பேரரசும் கலாசார மறுமலர்ச்சியும்" ஆய்வுத் தொடரில் நாளை பேராசிரியர் சி.பத்மநாதனின் "விஜயநகர காலத்து ஓவியங்கள்" ஆய்வுக் கட்டுரை பிரசுரமாகும்.**



பருத்தித்துறை மாவட்ட நீதிபதியாகப் பணியாற்றி மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்திற்கு இடமாற்றம் பெற்ற மாவட்ட நீதிபதி கே.அரியநாயகத்திற்கு பருத்தித்துறை நீதிமன்ற உத்தியோகத்தர்களால் நடத்தப்பட்ட பிரிவுபசார விழாவில் நீதிமன்றத்திற்கு அண்மையில் உள்ள ஆலயத்திலே இடம்பெற்ற விசேட பூசைகளையடுத்து ஆலயக்குரு மாவட்ட நீதிபதிக்குக் காளாஞ்சி வழங்குவதையும், திருமதி அரியநாயகம் மங்கல விளக்கேற்றுவதையும், மாவட்ட நீதிபதி உரையாற்றுவதையும், அருகில் நீதிமன்றப் பதிவாளர் வி.சிவராஜசிங்கம் அமர்ந்திருப்பதையும் படங்களில் காணலாம்.

## கால்கோள் விழா

(இருபாலை)

இருபாலை சி.சி.தமிழ்க்கலவன் பாடசாலையின் தரம் 1 மாணவர்களை வரவேற்கும் கால்கோள்விழா இன்று திங்கட்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு அதிபர் திருமதி க.சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.கல்வி வலயப் ஆரம்பக்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் பூ.குகதாசன் கலந்து கொள்ளவுள்ளார். (6-4)

✠✠✠

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் இந்து ஆரம்பப்பாடசாலையின் தரம் 1 மாணவர்களுக்கான கால்கோள் விழா இன்று திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு பாடசாலை அதிபர் திருமதி சகாதேவன் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக கோட்டக் கல்விப் பணிப்பாளர் மாணிக்கராஜா கலந்து சிறப்பிக்கவுள்ளார். (2-36)

## ஒன்று கூடல்

(யாழ்ப்பாணம்)

வன்னித் தொண்டர் ஆசிரியர்களுக்கான ஒன்றுகூடல் நிகழ்வு எதிர்வரும் 22ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு ஆரியகுளம் சந்திக்கருகாமையில் அமைந்துள்ள புதிய உயர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இவ் ஒன்றுகூடலில் சகல வன்னித் தொண்டர் ஆசிரியர்களையும் கலந்து கொள்ளுமாறு மேற்படி ஒன்றியச் செயலாளர் பொன். சிவகரன் கேட்டுள்ளார். (2-4)

## பட்டாசு வெடித்ததில் இளைஞர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

சீனவெடி கொளுத்தி விளையாடிக் கொண்டிருந்த இளைஞர் மீது வெடி பதம் பார்த்ததில் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளார்.

புத்தூரைச் சேர்ந்த பாஸ்கரமூர்த்தி வசீகரன் (வயது - 20) என்ற இளைஞர் நேற்று முன் தினம் காலை தனது வீட்டில் வைத்து குழாயினுள் வெடிமருந்தை அடைத்துவிட்டு தீமூட்டிய போது இச்சம்பவம் இடம்பெற்றதாகக் கூறப் படுகின்றது.

தலை, கை, கால் ஆகிய பகுதிகளில் படுகாயமடைந்தவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (2-30)

## மதர் ஸ்ரீலங்கா போட்டி

(சாவகச்சேரி)

தென்மராட்சி வலயப் பாடசாலைகளிடையே நடத்தப்படும் மதர் ஸ்ரீலங்கா போட்டி நிகழ்வு நாளை மறுதினம் புதன்கிழமை காலை 8.30 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இதில் பங்குபற்ற உள்ள பாடசாலைகள் உரிய நேரத்திற்கு வருகை தந்து நிகழ்வுகள் சிறப்புற நடைபெற ஒத்துழைக்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் அறிவித்துள்ளார். (2-29)

## டெங்கு ஒழிப்பு பிரசாரம்

(காரைநகர்)

பாலாவோடை இந்து இளைஞர் மன்றம் டெங்கு ஒழிப்பு பிரசார நடவடிக்கைகளில் தீவிரமாக செயற்பட்டு வருகின்றது.

இதற்கமைய காரைநகர் பிரதேச பொதுச் சுகாதாரப் பரிசோதகரின் வழிகாட்டலின் கீழ் சுமார் ஐம்பதிற்கும் மேற்பட்ட இளைஞர்கள் இரு பகுதிகளாக பிரிந்து வீதிகளில் உள்ள குப்பை கூழங்கள் மற்றும் நீர்தேங்கி நிற்கக் கூடிய தகரப் பேணிகள். பிளாஸ்ரிக் போத்தல்கள் உள்ளிட்டவற்றினை வாகனங்களில் ஏற்றி அப்புறப்படுத்தி வருகின்றனர்.

மேலும் ஒலிபெருக்கி வாகனங்கள் மூலம் பொதுமக்களிற்கு டெங்கு ஒழிப்பு சம்பந்தமான விழிப்புணர்வு அறிவுறுத்தல்களையும் வழங்கி வருகின்றனர். (2-246)

## களவாடப்பட்டு வரும் இரும்புப் பொருட்கள்

(காரைநகர்)

காரைநகர் சீனோர் தொழிற்சாலையின் கட்டடத்தில் இருந்த பழைய இரும்புகள் களவாடப்பட்டு வருவதாக பொதுமக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

காரைநகர் துறைமுகத்திற்கு அண்மையில் அமைந்துள்ள சீனோர் தொழிற்சாலை உள்ளிட்ட உயர் பாதுகாப்பு வலயப் பகுதி பொதுமக்கள் பாவனைக்கென விடப்பட்டது. அதனைத் தொடர்ந்து அப்பகுதிக்கு சென்ற சிலர் கடந்த இருபத்தைந்து வருடமாக யுத்தத்தினால் சேதமடைந்திருந்த சீனோர் தொழிற்சாலையில் உள்ள இரும்புத் தூண்களை களவாடி விற்பனை செய்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இச் சீனோர் கட்டடத்தை பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் சென்று பார்வையிட்டு எஞ்சியுள்ள பகுதியையாவது பாதுகாக்க முன்வர வேண்டும் என்றும் இப் பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். (2-246)

## பெயர்ப்பலகைகள் இடப்படாததால் உல்லாசப் பிரயாணிகள் தடுமாற்றம்

(காரைநகர்)

காரைநகர் கசூர்னாக் கடற்கரைக்கு செல்லும் விளம்பர பெயர்ப் பலகை இடப்படாததனால் பெருமளவிலான உல்லாசப் பயணிகள் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது யாழ்.குடாநாட்டில் A- 9 பாதைத் திறப்பிற்கு பின்னர் பெருமளவான உல்லாசப் பயணிகள் யாழ்.குடாநாட்டிற்கு வருகைதந்த வண்ணமுள்ளனர்.

அவர்களில் பெரும்பாலானோர் காரைநகர் கசூர்னாக் கடற்கரைக்கும் வந்து செல்கின்றனர். கசூர்னாக் கடற்கரையில் உல்லாசப் பயணிக்களிற்கான அடிப்படை வசதிகள் சில செய்யப்பட்டிருந்தும், கசூர்னாக் கடலுக்குச் செல்லும் பாதைகளில் எந்த இடத்திலும் பெயர்ப்பலகை இடப்படவில்லை.

இதனால் வெளிநாட்டு உல்லாசப் பயணிகள் உள்ளிட்ட தென்னிலங்கை உல்லாசப் பயணிகள் கசூர்னாக் கடற்கரை பாதை தெரியாது காரைநகரிற்குள்ளே தடுமாறித் திரிவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கசூர்னாக் கடற்கரையை பராமரிக்கும் காரைநகர் பிரதேச சபை பிரதான வீதியான வலந்தலைச் சந்தியிலும், புதுவீதிச் சந்தி ஆகிய இரு வீதிகளிலாவது வீதிக்கான பெயர்ப்பலகையை தற்காலிகமாகவேனும் உடனடியாக இடப்படல் வேண்டும். இதன் மூலம் உல்லாசப் பயணிகளின் பல மணி நேர விரயத்தினை தவிர்க்க முடியும் என்று உல்லாசப் பயணிகள் தெரிவித்துள்ளனர். (2-246)

## சிறப்பாக இடம்பெற்ற திறப்புவிழாவும் சிறப்பு நிகழ்வும்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை இந்து மாமன்றத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற யாழ். சைவ ஆராய்ச்சி நிலைய நூலக திறப்புவிழாவும் சிறப்பு நிகழ்வுகளும் நேற்று முன்தினம் காலை இந்துமாமன்ற யாழ்.பிராந்திய அலுவலக கட்டடத்தில் நடைபெற்றது.

செஞ்சொற்செல்வர் ஆறுதிருமுருகன் தலைமையில் இடம்பெற்ற இவ்விழாவில் ஆசியுரையை நல்லை ஆதீன முதல்வர் சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள் வழங்கினார்.

நிகழ்வில் சிறப்பு விருந்தினராக லண்டன் ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் ஆலய அறங்காவலர் சபையைச்சேர்ந்த அ.தேவசகாயம் கலந்து சிறப்பித்தார். நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் நா. சண்முகலிங்கன் கலந்துகொண்டு நூலகத்தின் இணையத்தளத்தை ஆரம்பித்து வைத்தார்.

இவ் வைபவத்தில் லண்டன் ஸ்ரீ கனக துர்க்கை அம்மன் ஆலய அறங்காவலர் சபையும் மாமன்றத்தின் மனிதநேய நிதியுதவியையும் பயன்படுத்தி வன்னியிலிருந்து இடம்பெயர்ந்து வவுனியா நலன்புரி முகாம்களில் தங்கியிருந்து யாழ். பல்கலைக்கழகம் வந்துள்ள 280 மாணவர் களில் 4ஆம் கட்டமாக ஒரு மாணவருக்கு தலா 10 ஆயிரம் ரூபா வீதம் 70 மாணவர்களுக்கு வழங்கப் பட்டது. (2-30)

## சமய தீட்சை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையின் அனுசரணையுடன் யா/ திருநெல்வேலி முத்துத்தம்பி மகாவித்தியாலய மண்டபத்தில் எதிர்வரும் 21 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8 மணி தொடக்கம் சிவஸ்ரீ கைலாசநாதக் குருக்கள் தலைமையில் சமயதீட்சை வழங்கும் நிகழ்வு இடம்பெறும் என்று மேற்படி சபையின் உதவிச் செயலாளர் தி.மாணிக்கவாசகர் தெரிவித்துள்ளார். (2)

## மஹா கும்பாபிஷேகம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி வடக்கு மீசாலை இலுவம் செல்வவிநாயகர் தேவஸ்தான மஹா கும்பாபிஷேகம் எதிர்வரும் 22ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 9.45 மணிக்கு நடைபெறவுள்ளது.

இதற்கமைய இன்று திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஆரம்பமாகும் கிரியைகளைத் தொடர்ந்து 21 ஆம் திகதி வியாழக்கிழமை பக்தர்கள் எண்ணெய்க்காப்பு சாத்தும் நிகழ்வும் நடைபெறும்.மறுநாள் 22ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 9.45 மணி தொடக்கம் 10.50 மணிவரையுள்ள சுப முகூர்த்தத்தில் மஹா கும்பாபிஷேகம் சிவப் பிரம்மஸ்ரீ க.பரராஜசேகரம் குருக்கள் தலை மையில் நடைபெறவுள்ளதாக ஆலயப் பிரதம குரு பிரம்மஸ்ரீ செ.தெட்சணாமூர்த்தி சர்மாவும் ஆலயப் பரிபாலன சபையினரும் தெரிவித்துள்ளனர். (2-29)




## வரவேற்பு வைபவம்

(யாழ்ப்பாணம்)

யாழ். வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் தரம் 6இல் புதிதாக இணையவுள்ள 220 மாணவிகளை வரவேற்கும் வைபவம் இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை அதிபர் திருமதி க.பொன்னம்பலம் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இவ்விழாவில் மாணவிகளுக்கு பருத்தித்துறை ஸ்ரீராமகிருஸ்ண சாரதா சேவாச்சிர மத்தினர் சுவையூட்டிய பால் பைக்கற்றுகளை வழங்கி சிறப்பிக்கவுள்ளதாக மேற்படி ஆச்சிரமத்தினர் தெரிவித்துள்ளனர். (2)

## கத்தி வெட்டுக்கிலக்காகி இளைஞர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

அயல்வீட்டுடன் ஏற்பட்ட சண்டை காரணமாக கத்தியால் வெட்டுண்ட நிலையில் இளைஞர் ஒருவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.


மேற்படி காரைநகரைச் சேர்ந்த க.கேதீஸ் (வயது 19) என்பவர் வீட்டின் முன்புறம் நின்ற வேளை கடந்த வெள்ளியன்று இரவு 7.30 மணியில் அயலவருடன் இடம் பெற்ற சச்சரவினாலேயே கத்திவெட்டுக்கிலக்காகி தலையில் படுகாயமடைந்த நிலையில் காரைநகர் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப் பட்டுள்ளார். (2-30)

# பிறருக்காக கழிவிரக்கப்படும் பெருந்தகை திருமதி சாந்திகுமாரி விக்னராஜா

அழகிய புன்முறுவல், அன்பிலே தோய்ந்த வார்த்தைகள், கணீரென்ற குரலிலே கம்பீரமான ஆங்கிலம், அறிமுகமில்லாதவர்களாயினும் அமருங்கள் என்று உபசரிக்கும் பண்பு, அமர்ந்தவரை அடுத்த கணமே அளந்துவிடும் புத்திக்கூர்மை, உள்ளத் தெளிவு, அத் தெளிவினால் வெளிப்படும் கட்டுக்கோப்பான உரையாடல், நேருக்கு நேர் முகம் நோக்கி உண்மையை உரைத்துவிடும் தற்துணிவு, உண்மைக்கும் நேர்மைக்குமாய் உறுதியுடன் இறுதிவரை வாதாடும் திறன், திறமையை இனங்காணும் ஆற்றல், இனங்கண்டவற்றை மனம் திறந்து பாராட்டும் பெருந்தன்மை. இவை மட்டுமா? இன்னும் பற்பல. வார்த்தைகளில் விளங்க வைக்க முடியாத நற்பண்புகளின் ஒன்றிணைந்த சங்கமமாகிய இந்த ஆளுமைதான் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் ஆங்கிலமொழிப் போதனா அலகின் தலைமைப்பீடத்தை பல்லாண்டு காலம் அலங்கரித்து இன்று அமரத்துவடைந்துவிட்ட திருமதி சாந்திகுமாரி விக்னராஜா அவர்கள்.

நிமிர்ந்த நன்நடையும் நேர்கொண்ட பார்வையுமாய் பாரதி கண்ட புதுமைப் பெண்ணாய் நம் மத்தியில் வலம் வந்த திருமதி சாந்திகுமாரி விக்னராஜா அவர்களின் மறைவானது ஆங்கில மொழி கற்றல் /கற்பித்தல் என்ற கல்விப்புலத்தில் ஈடுசெய்யமுடியாத பேரிழப்பு என்று கூறினால் அதில் மிகைப்படுத்தல் ஏதுமில்லை. தூய்மையும் பெருகுமேறிய அவரது ஆங்கிலப்புலமை பலராலும் போற்றப்பட்ட அதேவேளையில், தான் அறிந்ததை மற்றவர்களும் அறிந்துகொள்ள வேண்டும் என்று தன்னையே வருத்தி அதைக் கற்பிக்கும் பாங்கானது எவராலும் மறக்கவோ, மறுக்கவோ முடியாதொன்று. ஆங்கிலப் பரீட்சையிலே சித்தியடைந்து விட்டால் போதும் என்று மாணவரும், அந்த ஒரேயொரு நோக்கத்தை நிறைவேற்றி விட்டால் போதும் என்று ஆசிரியர்களும் இலகுவழிகளில் இலக்கை அடைய நினைக்கும் இன்றைய காலகட்டத்தில் ''சாந்தி மிஸ்'' வித்தியாசமானவர். பரீட்சை என்பது ஒருவரது நிலையை அளவிடும் கருவியேயன்றி அவரது முழுத்திறமையையும் வெளிப்படுத்தும் கண்ணாடி அல்ல என்பதில் முற்றுமுழுதான நம்பிக்கை கொண்டவர். அதிலும் மொழியாற்றல் என்பது பாடத்திட்டங்கள், பரீட்சைகள், ஒப்படைகள் என்பவற்றிற் கெல்லாம் அப்பால் சுய ஈடுபாட்டோடு உள்வாங்கப்படுவதோடன்றி பலமான பாவனைத் திறனும் கொண்டதாய் அமையும் போதுதான் புலமையை எட்டுகின்றது என்பதில் அசையாத நம்பிக்கை கொண்டு அதையே மாணவர்கள் மத்தியில் உறுதிபடக் கூறிநின்றதோடு,

அவர்கள் அதைக் கடைப்பிடிக்கக்கூடிய வழிமுறைகளையும் தெளிவாக விளக்கி நின்றவர். ''சாந்தி மிஸ் பரீட்சகராயிருந்தால் மாணவர்கள் நடுங்குகிறார்கள்'' என்றவொரு போலியான செய்தி மாணவர் மத்தியில் உலாவியதுண்டு. இதன் உண்மைக் காரணம் என்னவென்றால் அவரது மதிப்பீடு துலாக்கோல் போன்றது என்பதே. அது எந்தப் பக்கமும் எக்காரணம் கொண்டும் சாய்ந்து விடாது என்பதே. ஒரேயொரு புள்ளியாயினும் அது தேவையற்றதெனில் சாந்தி மிஸ் போடுவதுமில்லை. அதே வேளையில் தேவையானதில் ஒரு புள்ளியைக் கூட குறைத்ததுமில்லை. மாணவர்கள் பாதிக்கப்பட்டுவிடாமல் அவர்களுடைய தொடர்மதிப்பீட்டுப் புள்ளிகள் சரியாகப் போடப்படுவதில் மிகுந்த அக்கறையுடையவராக இருந்து, அது எத்தனை ஆண்டு காலமாயினும் கோப்புகளைக் கவனமாக ஆராய்ந்து சரிபார்த்து வழங்குவதில் தன்னையே வருத்திக்கொண்டார் என்பதை அவரோடு பரீட்சகர்களாக கடமையாற்றியவர்கள் நன்கறிவார்கள்.



Charming wife of.... R.T. Vigna Raja High Court Judge Jaffna.

களனி பல்கலைக்கழகத்தின் ஆங்கில மொழிப் பட்டதாரியான இவர் மொழி பெயர்ப்பியல், இதழியல் என்பவற்றையும் கற்றுத் தேறியவர். ஆங்கில மொழி கற்பித்தலில் பட்டப்படிப்பின் டிப்ளோமாவையும் பூர்த்தி செய்திருந்த திருமதி விக்னராஜா அவர்கள் உத்தியோக வாழ்க்கையில் சிறந்த ஒரு விரிவுரையாளராக இருந்த அதேவேளை குடும்ப வாழ்க்கையில் வள்ளுவர் கண்ட வாசுகி போல் தலை சிறந்த குடும்பப் பெண்மணியாகத் திகழ்ந்தவர். சமூகத் தில் மிகவும் பொறுப்பு வாய்ந்த ஒரு பதவியாகிய மேல் நீதி மன்ற நீதிபதியின் மனைவியாகி தன் கணவரின் சாதனைகளுக்கெல்லாம் தக்க பின்புலம் அமைத்ததோடல்லாமல் இக்கட்டான காலகட்டங்களில் எல்லாம் கண்ணை இமை காப்பது போல் தன் துணைவரின் நலனையும், பிள்ளைச் செல்வங்களின் வாழ்க்கையையும் கருத்தூன்றிக் கவனித்தார். ஆய்வு பட்டங்களை மேற்கொள்ளும் அத்தனை திறமைகளையும் தன்னகத்தே கொண்டிருந்த போதும், தன் குடும்பத்தினரை ஒரு கணமேனும் பிரிந்து செல்ல விரும்பாத அவருடைய தாய் மை உள்ளம் உயர் கல்வியை நாடவில்லை. ஆனால் அண்மையில் ஆங்கிலத்தை இரண் டாம் மொழியாகக் கற்பித்தல் என்ற நெறி யின் முதுகலைமாணி கற்கைநெறியில் (M.A.in. TESL) வெற்றிகரமாகச் சித்தி பெற்று அதற்குரிய ஆய்வினை மேற்கொள்ளவிருந்த காலப்பகுதியில் அமரராகிவிட்டார் என்பது துறைசார்ந்த ஓர் பேரிழப்பாகும்.

அமரர் சாந்திகுமாரி விக்னராஜா அவர்கள் தமது வாழ்க்கைக் காலத்தில் கடமைகளையும் கடவுளையும் ஒரு கணமேனும் மறந்தாரில்லை. உள்ளூர நோய்வாய்ப்பட்டிருந்த போதும் , எந்நேரமும் மலர்ந்த முகத்துடன், ஒரு நிமிடமும் தாமதிக்காது விரிவுரைகளுக்கு சமுகமளித்த தன்மையினால் அங்கிருந்த எமக்கு உச்சக்கட்டத்தை அடைந்த நோயின் உக்கிர தன்மையை உணர முடியாது போய்விட்டது. அமரர் அவர்கள் ஆண்டவர் மீது அளவு கடந்த நேசம் கொண்டவர். அவருடைய வார்த்தைகளில் கூறுவதானால் ''ஆண்டவர் எங்களோடு கூட இருக்கிறார் அவரே எங்கள் காரியங்கள் யாவற்றையும் நடத்தி முடிக்கின்றார்'' என்பதாகும்.

திருமதி விக்னராஜா அவர்களது மிக உயர்வான பண்பொன்று மற்றவர்களின் துன்பத்தைக் கண்டு கழிவிரக்கம் கொண்டு அவர்களுக்காக இறைவனிடம் பிரார்த்திப்பதாகவும். பல்கலைக்கழகத்திலே அவருடைய விரிவுரைகள் அற்றபொழுதுகள் ஏனையோருக்கு பிரார்த்தனை புரிவதில் கழிந்திருக்கின்றது. மாணவர்களாயினும் சரி, விரிவுரையாளர்களாயினும் சரி இவருடன் பகிர்ந்துகொள்ளும் துயரங்கள் அடுத்த கணமே பிரார்த்தனை வடிவில் ஆண்டவரிடம் தீர்வுக்காய் முன்வைக்கப்படும். இதற்காகவே இவரைத் தேடி வந்து ஆறுதலடைந்தோர் பலர்.

எத்தனையோ மாணவர்களுக்கு ஒரு தாயின் நிலையில் நின்று பல அறிவுரைகூறி ஆளாக்கியிருக்கிறார் என்பது பலர் அறியாத உண்மை. கொள்கைகள் வேறுபட்டோராயினும், மாற்றுக் கருத்துக்களைக் கொண்டோராயினும் கூட 'சாந்தி மிஸ்' இன் நல்ல மனதைப் புரிந்து வைத்திருந்தார்கள்.

அன்பு, உண்மை, நேர்மை என்பவையே அவரது அணிகலன்கள். தான் சரியொன்று நினைப்பதைத் துணிந்துகூறிவிடுவதே அவரது சிறப்பியல்பு. அதனால் தான் அவரது வாழ்க்கைப் பயணம் பிறருக்கு எப்போதும் பயனுள்ளதாகவே இருந்து வந்துள்ளது.

தனக்கென வாழாப் பிறர்க்குரியோர் ஆண்டவரிடத்தில் சீக்கிரம் அழைக்கப்படுகிறார்கள் என்று கூறுவார்கள். அதனால் தானோ என்னவோ தன்னை மிகவும் நேசித்த ஓர் உயிரை தன்னருகில் ஆறுதல்கொடுக்க இறைவன் எண்ணினார் போலும். ஆனால் ஆங்கிலமொழித் துறைக்கும், யாழ். பல்கலைக்கழத்திற்கும், ஏன் யாழ்ப்பாண சமூகம் முழுவதற்கும் இவரது இழப்பு ஈடு செய்ய முடியாததொன்றாகும்.

அவரது இழப்பின் வலியை உணர்கின்ற ஆங்கிலத்துறை ''வேறென நீயிருந்தாய் அதில் நாம் வீழ்ந்துவிடாதிருந்தோம்'' என்ற பாடல் வரிகளின் கருத்தாழத்தை எண்ணிப் பார்த்து ஏக்கமடைகிறது.

**திருமதி.க.சிவாஜி**
விரிவுரையாளர்,
ஆங்கிலமொழிக் கற்பித்தல் அலகு,
யாழ்.பல்கலைக்கழகம்.

# அரச சொத்து துஷ்பிரயோகத்தில் ஆளும் கட்சி ஈடுபட்டு வருகிறது

## பாக்கியசோதி சரவணமுத்து

(கொழும்பு)

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அதிகளவில் அரச சொத்து துஷ்பிரயோகத்தில் ஈடுபட்டுவருவதாக மாற்றுக் கொள்கைகளுக்கான கேந்திர நிலையத்தின் தலைவர் பாக்கியசோதி சரவணமுத்து தெரிவித்துள்ளார்.

இதற்கமைய அரச ஊடகங்கள் மிகவும் மோசமான முறையில் தேர்தல் சட்டங்களை மீறிச் செயற்பட்டு வருவதாகவும் அரசாங்க அதிகாரிகள், கட்டடங்கள், வாகனங்கள் உள்ளிட்ட அரச சொத்துக்கள் துஷ்பிரயோகம் செய்யப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் மற்றும் லேக் ஹவுஸ் ஊடக நிறுவனம் ஆகியன அரச சொத்துக்களை துஷ்பிரயோகம் செய்வதாகவும் இவ்வாறு பொது சொத்துக்களை தனிப்பட்ட அரசியல் கட்சிகளின் தேவைகளுக்கு பயன்படுத்தப்பட வேண்டும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும் 17 ஆவது திருத்தச் சட்டமூலம் அமுல்படுத்தப்படும் வரையில் சுயாதீனமான முறையில் தேர்தல்களை நடத்துவதில் சிக்கல் நிலை தொடரும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (2-4)

# ஜனாதிபதி தேர்தலில் இடம்பெயர் மக்கள் வாக்களிக்க முடியாத நிலை ஏற்படக்கூடும்

## சண்டே லீடர் தெரிவிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் இடம்பெயர் மக்கள் வாக்களிப்பதற்கு முடியாத நிலை உருவாகக் கூடுமென சண்டேலீடர் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இடம்பெயர்ந்த மக்களில் 27 இலட்சத்து 71 ஆயிரம் பேர் வாக்களிக்கத் தகுதி பெற்றுள்ள போதிலும், இதுவரையில் 13ஆயிரத்து 700 பேர் மட்டுமே வாக்களிப்பிற்காக தங்களைப் பதிவுசெய்து கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வாக்காளர் அட்டைகளை வழங்குவது தொடர்பிலோ வாக்காளர்கள் கொத்தணி வாக்களிப்பு நிலையங்களுக்குத் தேவையான போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்திக்கொடுப்பது தொடர்பிலோ கவனம் செலுத்தப்படவில்லை என கபே அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

மேலும் தற்போது ஆயிரக்கணக்கான இடம்பெயர் மக்கள் மீள்குடியேற்றப்பட்டுள்ளதாகவும், மீள்குடியேற்றப்பட்டவர்களது வாக்காளர் அட்டைகளும் இடம்பெயர் முகாம்களுக்கே அனுப்பி வைக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (2-4)

# கணவரின் சடலத்துக்கு அருகே கதறிய பிரபாகரன் தாய்

# “தம்பி உயிரோடு இருக்கிறார்...கனடாவில் என்னை சந்திப்பார்!”

**பிரபாகரனின் தந்தை வேலுப்பிள்ளையின் இறுதிச் சடங்கில் கலந்துகொண்டு திரும்பிய விடுதலைச் சிறுத்தைகள் தலைவர் திருமாவளவனின் பேட்டி தொடர்கிறது....**

**பிரபாகரன் தயாரிடம் வேறு என்ன பேசினீர்கள்?**

“வவுனியாவுக்கு அழைத்து வரப்பட்ட பார்வதி அம்மாளிடம் அண்ணனை (பிரபாகரனை) பார்த்து எவ்வளவு நாளாச்சு?” எனக் கேட்டேன். “ரெண்டு கிழமையாச்சு” என்றார். அவர் ரெண்டு வாரம் என்பதைத்தான் அவர் ரெண்டு கிழமை எனச் சொன்னார். போர் முடிந்து எட்டு மாதங்களாக இராணுவ முகாமிலிருந்த பார்வதி அம்மாள் ரெண்டு கிழமைக்கு முன்பு பார்த்ததாகச் சொன்னதிலிருந்தே அவரது நிலைமை எனக்குப் புரிந்தது. நினைவுத் தடுமாற்றத்தில் அவ்வாறு பேசுகிறாரோ என்று என்னை சமாதானப் படுத்திக் கொண்டேன்.

ஆனால் அவருக்கு நினைவாற்றல் மிகச் சரியாக இருப்பதை அவருடைய அடுத்தடுத் பேச்சிலிருந்து உணர்ந்தேன். ‘‘பேரப்பிள்ளைகளை சந்திச்சீங்களா... மருமகள் மதிவதனியை பார்த்தீங்களா?” எனக் கேட்டபோது, ‘‘ம்... சந்திச்சேன்...” என்று மட்டும் சொன்னார். பேரப்பிள்ளைகள் சார்ள்ஸ் அன்ரனி, பாலச்சந்திரன், துவாரகா ஆகியோரின் பெயர்களை வரிசையாக உச்சரித்தார். “யுத்தம் நடந்து கொண்டிருந்த போது எங்கே இருந்தீங்க ?” எனக் கேட்டேன் என்னை நிமிர்ந்து பார்த்த அம்மா “பெரிய யுத்தத்தைப் பத்தித் தானே கேக்கீறீங்க ... அப்ப நான் இந்தியாவில் இருந்தேன்” என்றார். இதற்கு முன்பு நடந்த 1980 ஆம் வருடத்திய யுத்தத்தைப் பற்றித்தான் சொல்கிறாரோ என எனக்குத் தோன்றியது. “ஐயா வேலுப்பிள்ளைக்கு உடம்பு சரியில்லாம இருந்துச்சா...” எனக் கேட்டேன். “இல்லை நல்லாத்தான் இருந்தாங்க. எனக்குத்தான் உடம்பு சரியில்லை!” என்று வலது கையை தூக்கிக் காட்டினார். அவரது வலது கையில் விரல்கள் மடங்கி இருந்தன. பக்கவாதத்தால் பாதிக்கப்பட்டதைத் தான் அவ்வாறு காட்டினார்.

அடுத்து “இந்தியாவுக்கு வர்றீங்களா? அல்லது கனடாவுக்கு போறீங்களா?” என்று கேட்டதற்கு “எண்ட ஐயாகிட்ட கேட்டுச் சொல்றேன்...” என்றார். அந்த வார்த்தைகளை அவர் திரும்பத் திரும்பச் சொன்னதால் மறுபடியும் அவரது சுயநினைவை அறிந்து கொள்வதற்காக ஒரு கேள்வியைக் கேட்டேன். அப்போது அவர் சொன்ன பதில் எனக்கு அதிர்ச்சி. ‘‘கொஞ்ச நேரத்துக்கு முன்னால யாரோ ரெண்டு பேர் வந்தாங்க. ஐயா செத்துப் போயிட்டாங்கன்னு சொன்னாங்க நான் நம்பயில்ல...” என்று விழிகளை அகல விரித்து ஒரு சில நொடிகள் இமைகளை அசைக்காமல் என்னை வெறித்துப் பார்த்தபடியே சொன்னார். அதற்கு மேல் அவரிடத்தில் என்னால் எதுவும் பேசமுடியவில்லை.

**பிரபாகரன் தாயாரிடம் உங்கள் செல்பேசியை அளித்து யாருடனோ பேசச் செய்ததாக சில படங்கள் வைத்திருக்கிறீர்களே.. அவர் யாரோடு பேசினார்... என்ன பேசினார்?**

கணவர் இறந்த துக்கத்தில் இருந்த பார்வதி அம்மாளின் மனத்தைத்தேற்றும் விதமாக அவரது கவனத்தை திசை திருப்ப முயற்சித்தேன். “திருச்சிக்கு பக்கத்துல ராஜேந்திரன்னு உங்க சொந்தக்காரர் ஒருத்தர் இருக்காரே... அவரை உங்களுக்குத் தெரியுமா?” என்று கேட்டேன் “ம்... தெரியும்! டாக்டர் ராஜேந்திரன்தானே சொல்றீங்க?” என்று படுதெளிவாகக் கேட்டார். அவர் உங்க பங்காளி யாமே... உங்ககிட்ட பேச ஆசைப்படறாரு பேசுறீங்களா எனக் கேட்டேன். உடனே தலையாட்டினார். நான் ராஜேந்திரனோடு தொடர்புகொண்டு அம்மாவின் காதில் கைபேசியை வைத்தேன். அம்மா தனது இடது கையால் போனை வாங்கி அவரே பிடித்துக்கொண்டு பேசினார். அதுவரை அவரைத் தாங்கிப் பிடித்துக் கொண்டிருந்த நான் மெள்ள கைகளை எடுத்துக் கொண்டேன். அந்தமுனையில் பேசியவரை அடையாளம் கண்டுகொண்டு அவர் தெளிவாக பதில் அளித்தார்.

அப்போது அறைக்குள் வந்த எம்.பியான சிவாஜிலிங்கம் “நேரமாகிவிட்டது.... கிளம்புவோம்” என்று சொல்ல... நான் அம்மாவிடம் இருந்த தொலைபேசியை வாங்கி தொடர்பைத் துண்டித்தேன் ‘‘ஊருக்குப் போலாமா?” என்று கேட்டேன். “எங்க வல்வெட்டித் துறைக்குதானே...” என்று கேட்டார் . ஆமாம்... இப்ப நாம எங்கே இருக்கோம்னு தெரியுதாம்மா? என்றேன் அந்த இடம் வவுனியா என்பது அம்மாவுக்குதெரியவில்லை.

**ஏ-9 சாலை வழியாக கிளிநொச்சியைக் கடந்துதானே வல்வெட்டித்துறைக்கு போனீர்கள்? இப்போது அங்குள்ள நிலைமைகள் எப்படி...?**

வவுனியாவிலிருந்து வன்னிப் பகுதி ஆரம்பமாகிறது. அன்றைக்கு (ஜனவரி 9) ராஜ பக்ஷ வவுனியாவுக்குள் தேர்தல் பிரசாரம் செய்ய வர இருப்பதாக அறிந்தோம்.

அதனால் தானோ என்னவோ... அங்கு எங்கு திரும்பினாலும் இராணுவப் பொடியன்கள் துப்பாக்கிகளோடு திரிந்து கொண்டிருந்தனர். வீதிகளில் செல்லும் வண்டிகளை மறித்து சோதித்துக் கொண்டிருந்தனர். டெலோ இயக்கத்தம்பி ஒருவரோடு நான் பயணித்த இரு சக்கர வாகனத்தை போகும் போதும் வரும் போதும் மறித்து விசாரித்தனர். மெனிக்பாம் முகாமிலிருக்கும் மக்களும் வவுனியா முகாமிலிருக்கும் மக்களும் அனுமதி பெற்று வவுனியா கடை வீதிகளுக்கு வந்து போவது உண்டாம். அன்றைக்கு ஏராளமான மக்களை நகர வீதிகளில் பார்க்கமுடிந்தது. தமிழ் நாட்டில் இருப்பதைப் போல அங்கும் சுவரொட்டி, டிஜிட்டல் கலா சாரங்களை பல இடங்களிலும் காண முடிந்தது.

ராஜபக்ஷவின் படம் வரைந்த பெரிய பெரிய சுவரொட்டிகளும்டிஜிட்டல்களும் நிறைய வைக்கப்பட்டிருந்தன. அதைப் பார்த்து வவுனியாவில் ராஜ பக்ஷவின் ஆதிக்கமும், இராணுவத்தின் ஆதிக்கமும் கொடி கட்டிப் பறந்ததை கண்டு, அதிர்ச்சி அடைந்தேன். வவுனியா நகரத்தைக் கடந்து ஓமந்தை புளியங்குளம் வழியாக முறிகண்டி எனும் இடத்தை அடைந்தோம். அங்கு பிரபலமான பிள்ளையார் கோயில் ஒன்று உள்ளது. அங்கே தேநீர் அருந்துவதற்காக வண்டியை நிறுத்தினோம். அந்தப் பகுதியே அடையாளம் தெரியாத அளவுக்கு உருக்குலைந்து கிடந்தது. கட்டடங்கள் எல்லாம் இடிந்து தரைமட்டமாக்கப்பட்டிருந்தன. கோயில் மட்டும் எந்த பாதிப்பும் இல்லாமல் அப்படியே இருந்தது. ஆண்களும், பெண்களும், குழந்தைகளும் தேங்காய் உடைத்து கற்பூரம் கொளுத்தி சாமி கும்பிட்டபடி இருந்தார்கள். பிள்ளையாருக்கு முன்பாக ஆளாளுக்குப் போடும் கற்பூரக் கட்டிகள் தீப்பற்றி திகுதிகு வென எரிந்து கொண்டிருந்தன. வாழ் விழந்து நிற்கும் எங்கள் நெஞ்சமெல்லாம் இப்படித் தான் எரிந்து கொண்டிருக்கின்றன! என அங்கு வந்த தமிழ் மக்கள் சாட்சியம் அளிப்பதை போல அந்த கற்பூர நெருப்பு காட்சி அளித்தது.

நானும் அந்த நெருப்பை தொட்டுப் பார்த்தேன் அங்கே என்னை அடையாளம் கண்டு கொண்ட இளைஞர்களும், பெண்களும் என் கைகளைக் குலுக்கி “வல்வெட்டித்துறைக்கு போறீங்களா?” என்று கேட்டனர். “எங்களுக்காக இனி என்னதான் செய்யப் போறீங்க?” என்றவர்கள் கடைகளில் எழுதப்பட்ட சிங்கள எழுத்துக்களைக் காட்டி பார்த்தீர்களா... சிங்கள ஆதிக்கத்தை? என்று சுற்றுமுற்றும் பார்த்துக் கொண்டே பேசினார்கள். சிங்கள இராணுவத்தினர் யாராவது கவனிக்கிறார்களா என்ற அச்சத்துடன் பேசினார்கள். ஒரு சிலர் தம் செல்போன்களில் என்னோடு சேர்ந்து படம் எடுத்துக் கொண்டார்கள். வெறுமையும் விரக்தியும் அவர்களது கண்களில்! அங்கிருந்து சில நிமிடங்களில் எமது பயணத்தைத் தொடங்கினோம். கொஞ்ச தூரத்தில் கிளிநொச்சி வந்துவிட்டது. ஏ-9 சாலையில் இரு மருங்கிலும் இராணுவத்தின் ஆக்கிரமிப்புகளைக் கண்டு விவரிக்க முடியாத வேதனைகளுக்கு ஆளானேன்.

**புலிகளின் தலைநகராக விளங்கிய கிளிநொச்சி எப்படி இருக்கிறது?**

சிங்கள ஆக்கிரமிப்பால் முற்றிலுமாக உருக்குலைந்து கிடைந்தது அந்த உன்னத நகரம். 57, 58 இராணுவப் படையணிகளின் தலைமையிடங்கள் கிளிநொச்சியில் தான் அமைக் கப்பட்டிருக்கின்றன. (9ஆம் பக்கம் பார்க்க.)



பிரபாகரன் தாயாருடன்...



அஞ்சலி...






# கணவரின் சடலத்திற்கு அருகே....

*8ஆம் பக்கத் தொடர்ச்சி...*

புலிகளின் நிதித்துறை, நீதித்துறை, கல்வித்துறை, காவல்துறை போன்றவற்றின் தலைமை அலுவலகங்கள் எல்லாம் ஏ-9 சாலையில் இரு மருங்கிலும் இருந்தன.

இப்போது அதற்கான எந்த அடையாளமும் இல்லை. ஏராளமான கட்டடங்கள் நெறுக்கப்பட்டிருந்தன. எங்கு பார்த்தாலும் சிங்கள எழுத்துக்களாலான அறிவிப்புப் பலகைகள், பதாகைகள்... கொழும்பு நகரத்தில் கூட சிங்களம், தமிழ், ஆங்கிலம் என்று மூன்று மொழிகளிலும் அறிவிப்புகளைக் காணமுடியும்.

ஆனால் கிளிநொச்சி முழுவதும் சிங்கள மயமாக்கப்பட்டு விட்டது. பெட்டிக்கடைகள், தேநீர் கடைகள், சிற்றுண்டி விடுதிகள், பெற்றோல், டீசல் பங்குகள் எல்லாமே இராணுவத்தினரால் நடத்தப்படுகிறது. தமிழும் தமிழனும் ஆட்சி செய்த அந்த மண்ணில், இப்போது சிங்களமும் சிங்கள இராணுவமும் ஆதிக்கம் செய்வதைப் பார்த்த போது, இவற்றை எல்லாம் எப்படி, எப்போது மீட்க முடியும் என்று எண்ணி எனக்கு பெரும் மூச்சு தான் வந்தது. வண்டியை மெள்ள ஓட்டும்படி கேட்டுக்கொண்டு கிளிநொச்சியில் இரு புறங்களையும் மாறி மாறி பார்த்துக் கொண்டே போய் பரந்தன் சந்தி எனும் இடத்தில் நின்றோம்.

''மதிய உணவு ஏதாவது சாப்பிடலாம்'' என்று செல்வம் அடைக்கலநாதன் ஒரு கடைக்கு அழைத்துப் போனார். இராணுவத்தில் உள்ள சிங்களப் பொடியன்கள்தான் அந்த கடைகளில் வேலை பார்த்துக் கொண்டிருந்தனர். அந்தக் கடைக்கு முன்னால் மட்டும் சிங்களத்திலும் தமிழிலும் எழுதப்பட்டிருந்தது. அந்தப் தமிழைப் படித்ததும் எனக்கு சிரிப்புதான் வந்தது. ''சோறு சாப்பிடுங்க'' என்று எழுத நினைத்து ''சோரு சாப்புங்க'' என்று தமிழையும் கொலை செய்து வைத்திருந்தார்கள்.

அந்தச் சந்தியில் ஒரு பீடம் இடிக்கப் பட்டிருந்தது. அந்த இடத்தைப் போய்ப் பார்த்தோம். பீடத்தை அவர்களால் முழுமையாக அகற்ற முடியவில்லை. ஆனால் அது அடையாளம் தெரியாத அளவு தகர்க்கப்பட்டிருந்தது. அங்கு நின்று கொண்டிருந்த சிங்களப் பொடியனிடம் இது ஏன் இடிக்கப்பட்டுள்ளது என்று கேட்டேன். அதற்கு அவர்கள் சிங்களத்தில் சொன்னது விளங்கவில்லை. அப்போது என்னோடு வந்த சிங்களம் தெரிந்த தமிழ் நண்பரிடம் அவரை விசாரிக்கச் சொன்னேன். இது புலிகள் கட்டிய ஒரு நினைவிடம் என்றும் அதை இராணுவம் இடித்து விட்டது என்றும் அந்த சிங்களப் பொடியன் சொன்னான். அந்தளவுக்கு அங்கே தமிழர்கள் வாழ்ந்ததாகவோ, புலிகள் இருந்ததாகவோ எந்த ஓர் அடையாளமும் இல்லாத அளவுக்கு வெறித்தனமாக அனைத்தையும் சிதைத்துள்ளனர்.

**விடுதலைப்புலிகளின் அனைத்து வரலாற்றுச் சிறப்புகளும் அடியோடு அழிக்கப் பட்டு விட்டதா?**

ஆமாம். நாங்கள் ஆனையிறவுக்குப் போனபோது அந்த அழிவை வலுவாக உணர முடிந்தது. புலிகளின் சாதனைகளுக்கு அடையாளமாக சிங்கள இராணுவத்திடம் கைப்பற்றிய பீரங்கி ஒன்று ஆனையிறவுக்கு சற்று முன்னதாகவே பொதுமக்களின் பார்வைக்கு ஏற்கெனவே புலிகளால் வைக்கப்பட்டிருந்தது. அந்த இடம் வந்ததும் வண்டியை நிறுத்தி இறங்கிப் போய்ப்பார்த்தோம். பீரங்கி, பீடத்தில் இருந்து தரையில் இறக்கப்பட்டிருந்தது. அங்கே வருவோர் போவோர் எல்லாம் நின்று படமெடுத்துக் கொண்டிருந்தனர். நாங்களும் படம் பிடித்துக்கொண்டோம்.

பின்னர் அங்கிருந்து நகர்ந்து ஆனையிறவைத் தொட்டோம். புலிகளின் விடுதலைப் போர் வரலாற்றில் ஆனையிறவு மீட்சி என்பது இமாலய சாதனை. சாலையில் இரு மருங்கிலும் கடல்நீர் சூழ்ந்துள்ளது. அந்த மாலைப் பொழுதில் அந்தப் பகுதி அப்படி ஒரு கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. அதை என்னால் ரசிக்க முடியவில்லை.

ஏனென்றால் ஆனையிறவின் ஒரு முனையில் மிகப் பிரமாண்டமாக பூமியில் பல கைகள் இலங்கையை தாங்கிப் பிடிப்பதைப் போல ஒரு மாபெரும் நினைவுச் சின்னம் எழுப்பப்பட்டிருந்தது. அதைப் பார்க்கப் பார்க்க எனக்கு அடிவயிறெல்லாம் பற்றி எரிந்தது. அந்த நினைவுச் சின்னத்தை தாங்கிப் பிடிக்கும் கைகள் இந்தியாவின் கைகளாக குறிப்பாக காங்கிரஸின் கைகளாக எனக்குத் தெரிந்தன.

அந்த நினைவுச் சின்னத்தையும் குறிப்பாக இலங்கையை தாங்கிப்பிடிக்கும் அந்தக் கைகளையும் உடைத்தெறியும் நாள் வராதா ? என்ற வேதனை என்னைத் திணறடித்தது.

கொடிகாமம் கடந்து சாவகச்சேரிக்கு முன்னதாக நெல்லியடி வழியாக பருத்தித்துறை சாலையைப் பிடித்து வல்வெட்டித்துறையை அடைந்தோம். ஏ-9 சாலை மட்டுமல்ல இந்தப் பாதையும் கூட அங்குலம் அங்குலமாக இராணுத்தினரின் ஆக்கிரமிப்புக்களையும் கெடுபிடிகளையும் காணமுடிந்தது. ஒட்டுமொத்தத்தில் புலிகள் நிறுவிய ஈழம் சிங்களமாயமாகவும் இராணுவ மயமாகவும் ஆக்கப்பட்டிருந்தது.

***புலிகளின் தற்போதைய நிலை... பொட்டு அம்மான் சர்ச்சை குறித்த கேள்விகளுக்கு திருமாவளவனின் பதில் அடுத்த இதழில்...***


யாழ்ப்பாணம் நீதி நிர்வாக வலய
மேல் நீதிமன்ற நீதிபதி இ.த.விக்னராசா அவர்களின்
வசீகரமான வாழ்க்கைத் துணைவி
திருமதி சாந்திகுமாரி விக்னராசா அவர்களின்
குடும்பத்தினர் தொகுத்த

**சவால்கள் சாதனைகள் சாந்தி**

நினைவேடு வைபவ ரீதியான வெளியீடு
யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபம்
திங்கட்கிழமை 18.01.2010 பிற்பகல் 3.00 மணி

**நிகழ்வொழுங்கு**

1. 03.00 பி.ப — பிரமுகர்கள் வருகை
2. 03.15 பி.ப — பிரதம விருந்தினர் வருகை
3. 03.15 பி.ப-03.18 பி.ப — விளக்கேற்றல்
4. 03.18 பி.ப-03.20 பி.ப — அஞ்சலி
5. 03.20 பி.ப- 03.30 பி.ப — வரவேற்புரை- உயர்திரு.க.நீலகண்டன் (குடும்ப உறுப்பினர்) (கௌரவ பொதுச் செயலாளர், அகில இலங்கை இந்து மாமன்றம்)
6. 03.30 பி.ப- 03.50 பி.ப — ஆசியுரை-
   (1) ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் இரண்டாவது குருமகா சன்னிதானம், நல்லை ஆதீனம்
   (2) அதிவண. பேராயர் கலாநிதி தோமஸ் சவுந்தரநாயகம் அவர்கள்
   (3) வண. மிகாயடுரே ஸ்ரீ விமல தேரர் நாக விகாரை, யாழ்ப்பாணம்.
   (4) மௌலிவி. ஐ.பாஹீர் முஹம்மதியா ஜம் ஆ பள்ளிவாசல்
7. 03.50 பி.ப-04.00 பி.ப — தலைமையுரை - பேராசிரியர். நா.சண்முகலிங்கன் (துணைவேந்தர், யாழ்ப்பாண பல்கலைக்கழகம்)
8. 04.00 பி.ப- 04.30 பி.ப — புகழஞ்சலியுரை-
   (1) கௌரவ.சொ.தியாகேந்திரன் அவர்கள் (மேன்முறையீட்டு மேல்நீதிமன்ற நீதிபதி
   (2) உயர்திரு. க.கணேஷ் அவர்கள் (அரசாங்க அதிபர்)
   (3) உயர்திரு. எஸ்.சுந்தரேஸ்வரன் அவர்கள் (யாழ். பல்கலைக்கழக ஆங்கிலத்துறைத் தலைவர்)
   (4) உயர்திரு. நொயல் எ.விமலேந்திரன் அவர்கள் (அதிபர், யாழ்ப்பாணக் கல்லூரி)
   (5) செல்வி .சாந்தா அபிமன்னசிங்கம் P.C. அவர்கள் (யாழ். சட்டத்தரணிகள் சங்க தலைவி)
   (6) மூளாயூர்.செ.சிவசுப்பிரமணியம் அவர்கள் (இளைப்பாறிய தொலைத்தொடர்பு அதிகாரி)
9. 04.30 பி.ப-04.50 பி.ப — அறிமுகவுரை-
   (1) தமிழில்- செஞ்சொற்செல்வர் ஆறுதிருமுருகன் அவர்கள் (ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான தலைவரும் ஸ்கந்தவரோதய கல்லூரி அதிபரும்)
   (2) ஆங்கிலத்தில்- திருமதி. சிறானி மில்ஸ் அவர்கள் (அதிபர், உடுவில் மகளிர் கல்லூரி)
10. 04.50 பி.ப-05.00 பி.ப — முதன்மைப் பிரதி பெற்று நயப்புரை- வண. கலாநிதி. யஸ்ரின் ஞானபிரகாசம் அவர்கள் (குடும்ப உறவினர்)
11. 05.00 பி.ப- 05.15 பி.ப — பிரதம விருந்தினர் உரை- மாண்புமிகு நீதியரசர் க.ஸ்ரீபவன் அவர்கள் (உயர்நீதிமன்ற நீதியரசர்)
12. 05.15 பி.ப-05.30 பி.ப — நன்றியுரை- தமிழ்- திரு.விக்னராஜா சவீந்திரா
    ஆங்கிலத்தில்- திரு.விக்னராஜாசஞ்சேந்திரா (சாந்தியின் புதல்வர்கள்)


# வடக்கு கிழக்கில் ஒரு பகுதியை தமிழ் மக்களுக்கு வழங்க பொன்சேகா இணங்கியுள்ளார் எம்.கே. சிவாஜிலிங்கம்

வடக்கு கிழக்கில் ஒரு பகுதியை தமிழ் மக்களுக்கு ஒப்படைக்க ஜெனரல் சரத் பொன்சேகா இணக்கம் தெரிவித்துள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளு மன்ற உறுப்பினரும் சுயாதீன ஜனாதிபதி வேட்பாளருமான எம்.கே. சிவாஜிலிங்கம் தெரி வித்துள்ளதாக செய்திகள் தெரிவித்துள்ளன.

இதற்கமைய வடக்கு கிழக்கை மூன்றாக பிரித்து மூன்று இன சமூகங்களுக்கும் தனித் தனி அலகுகளை வழங்குவதற்கு ஜென ரல் சரத்பொன்சேகா தீர்மானித்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மேலும் வடக்கு கிழக்கு மாகாணங்களில் பூரண அதிகாரப் பரவலாக்கல் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் அதனை பிரதான வேட் பாளர்கள் மேற்கொள்ளமாட்டார்கள் என வும் இதன் காரணமாகவே தாம் இடது சாரி முன்னணியின் தலைவர் விக்ரமபாகு கருணாரட்னவுடன் இணைந்து தேர்தலில் போட்டியிடுவதாக சிவாஜிலிங்கம் குறிப்பிட்டுள்ளதாக தெரிகிறது. (2-4)



# அரசாங்கத்தின் ஊடக சுதந்திரம் பற்றி எதிரணியினர் பேசுவது கேலிக்குரியது

## அமைச்சர் லக்ஸ்மன் யாப்பா தெரிவிப்பு

(கொழும்பு)

லங்காதீப பத்திரிகையின் ஊடகவியலாளர் தயாசீலி லியனகோயை இராஜினாமா செய்வதற்கு அழுத்தம் கொடுத்த ரணிலும் எதிர்க்கட்சியினரும் அரசாங்கத்தின் ஊடக சுதந்திரம் பற்றி பேசுவது கேலிக்குரியது என தகவல் ஊடகத்துறை அமைச்சர் லக்ஸ்மன் யாப்பா அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

20 வருடங்களுக்கு மேற்பட்ட சிறந்த அனுபவம் பெற்ற சிரேஷ்ட ஊடகவியலாளர் ஒருவரை எதிரணியினர் அச்சுறுத்தியுள்ள னர். அதற்கான ஆதாரங்கள் கிடைத்துள்ளன.


வெளியான செய்தியில் ஏதேனும் தவறுகள் இருப்பின் அவற்றை திருத்திக் கொள்வதற்கு பல மாற்று வழிகள் உள்ளன. அவற்றைக் கையாள்வதனை விடுத்து அச்சுறுத்தும் முறையை பின்பற்றுவது ஊடகத்துறைக்கே செய்யும் அவமரியாதை எனவும் அமைச்சர் தெரிவித்தார். ஊடகவியலாளர் தயாசீலி தற்போது எங்கு இருக்கிறார் என்றே யாருக்கும் தெரியாது.

அவருக்கு விடுத்த அச்சுறுத்தல் காரணமாக தனது இராஜினாமா கடிதத்தை அவர் வரவேற்பறையிலேயே கொடுத்துவிட்டுச் சென்றுள்ளார். இதுவரையில் யாரும் அவரைத் தொடர்பு கொள்ள முடியவில்லை. நிலைமை இப்படி இருக்க இதற்குக் காரணமான சம்பந்தன் எம்பியோ ரணில் விக்கிரமசிங்கவோ இது குறித்து வாயே திறக்காமல் உள்ளனர்.

மேலும் சிறையில் வைக்கப்பட்டிருந்த ஊடகவிய்லாளர் திஸ்ஸ நாயகத்தைக் கூட இந்த அரசாங்கம் பிணையில் விடுவித்துள்ளது. ஊடகவியலாளர்களை வழி நடத்தத் தெரியாத இவர்கள் ஊடக சுதந்திரம் பற்றி பேசுவது எந்த வகையில் நியாயமாகும் எனவும் அமைச்சர் கேள்வி எழுப்பியுள்ளார். (2-4)

# நான் உயிருடன் இருக்கிறேன்

# தலிபான் தலைவர் மசூத் அறிவிப்பு



(பெஷாவர்)

கடந்த ஆண்டு (2009) ஆகஸ்டு மாதம் பாகிஸ்தானில் ஆப்கானிஸ்தான் எல்லையில் உள்ள வசீரிஸ்தான் பகுதியில் அமெரிக்கா ஆளில்லா விமானம் மூலம் ஏவுகணை வீசி அதிரடி தாக்குதல் நடத்தியது. அதில் அப்போதைய தலிபான்களின் தலைவர் பைதுல்லா மசூத் கொல்லப்பட்டார்.

இதையடுத்து ஹகிமுல்லா மசூத் புதிய தலைவராகப் பொறுப்பேற்றார். இந்த நிலையில் இவரையும் ஏவுகணை வீசி அழிக்க அமெரிக்க இராணுவம் தீவிரமாக உள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை வசீரிஸ்தானின் வடமேற்கு மலை பகுதியில் அமெரிக்கா ஆளில்லா விமானம் மூலம் ஏவுகணை வீசியது. இதில் 15 தலிபான் தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர். அவர்களில் தலிபான்களின் தலைவர் ஹகிமுல்லா மசூத்தும் ஒருவர் என்று அறிவிக்கப்பட்டது.

இது அப் பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. ஆனால் இதை தலிபான்கள் மறுத்தனர்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் பத்திரிகை மற்றும் ஊடக அலுவலகங்களுக்கு ஒரு ஓடியோ கேசட் தலிபான்களால் அனுப்பப்பட்டது. ஹகிமுல்லா மசூத்தின் பேச்சு பதிவு செய்யப்பட்டிருந்தது. அதில் நான் இன்னும் உயிருடன் இருக்கிறேன். ஏவுகணை வீச்சில் சாகவில்லை. அவ்வப்போது இதுபோன்று பொய்யான பிரசுரங்கள் செய்யப்படுகின்றன. என்னை அழிப்பதன்மூலம் தெற்கு வசீரிஸ்தான் தலிபான் தீவிரவாதிகளை அழித்துவிடலாம் என கருதுகிறார்கள். இரு ஒருபோதும் நடக்காது என்று அவர் பேசியிருந்தார். (2-4)

# போப் ஆண்டவரை கொல்ல முயன்றவர்

# 30 ஆண்டுகளின் பின் விடுதலையாகிறார்

(அங்காரா)


துருக்கியைச் சேர்ந்தவர் மெக்மெட் அலி அக்ஹா (வயது 52). இவர் கடந்த 1981 ஆம் ஆண்டு போப் ஆண்டவராக இருந்த 2ஆவது ஜோன்பாலை கொலை செய்ய முயன்றார்.

இது தொடர்பாக அவரைத் துருக்கி பொலிஸார் கைது செய்தனர். இவர் அங்காரா அருகேயுள்ள சிறையில் பலத்த பாதுகாப்புடன் அடைத்து வைக்கப்பட்டிருந்தார்.

இந்த நிலையில் 30 ஆண்டுகளுக்குப் பிறகு இன்று விடுதலை ஆகிறார். விடுதலை ஆனவுடன் வாடினில் உள்ள மறைந்த போப் ஆண்டவர் 2ஆவது ஜோன்பால் கல்லறைக்குச் சென்று பிரார்த்தனை செய்கிறார். மேலும் தற்போதைய போப் ஆண்டவர் 16 வது பெனடிக்கை சந்திக்கிறார்.

ஏனெனில் அங்காரா சிறையில் இருந்த இவரை கடந்த 1983 ஆம் ஆண்டு போப் ஆண்டவர் 2ஆவது ஜோன்பால் நேரில் சென்று பார்த்தார்.

அப்போது தன்னைக் கொலை செய்ய



முயன்ற இவரின் தவறுகளை மறந்துவிட்டதாகத் தெரிவித்தார்.

சிறையில் இருந்து விடுதலையானவுடன் அவர் திருமணம் செய்ய உள்ளார் என்று அவரது சட்டத்தரணி தெரிவித்தார்.

இதற்கிடையே இவரது சொந்த வாழ்க்கையை புத்தகமாகவும், சினிமாப் படமாகவும் தயாரிக்க பல வெளிநாட்டு நிறுவனங்கள் முடிவு செய்துள்ளன. இதற்காக ரூபா 45 கோடி பெறவும் அவர் திட்டமிட்டுள்ளதாகத் தெரிகிறது. (2-4)

# ஹெயிட்டிக்கு உலகவங்கி

# 100 மில்லியன் டொலர் நிதிஉதவி

ஹெய்ட்டி நாட்டில் ஏற்பட்ட நில நடுக்கத்திற்குப் பல்வேறு நாடுகள் உதவ முன்வந்துள்ளன. இந்நிலையில் அந் நாட்டுக்கு உலக வங்கியும் உதவ முன்வந்துள்ளது.

இதற்கமைய பூகம்பத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவவும், இடிந்த கட்டடங்களை புதுப்பிக்கவும் 100 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவி அளிக்க உலக வங்கி முடிவு செய்துள்ளது.

தற்போது ஹெய்ட்டியைத் தொடர்ந்து இந்தோனேஷியாவிலும் பயங்கர நில நடுக்கம் ஏற்பட்டது. இந்தோனேஷியாவின் பப்புவா மாகாணத்தில் இந்நிலநடுக்கம் ஏற்பட்டது. ரிக்டர் அளவுகோலில் இது 6.2 ஆகப் பதிவாகியுள்ளது.

எனினும் நிலநடுக்கத்தால் சுனாமி எச்சரிக்கை எதுவும் விடப்படவில்லை. மேலும் நில நடுக்கத்தால் ஏற்பட்ட சேதங்கள் குறித்து உடனடி தகவல் ஏதும் அறிவிக்கப்படவில்லை. (2-4)

# ஜாக்சன் வழக்கில் சிக்குகிறார் டாக்டர்



(லொஸ்ஏஞ்சல்ஸ்)

பொப் உலகில் முடிசூடா மன்னனாக திகழ்ந்த, மைக்கேல் ஜாக்சன் இறப்புக் குறித்த விசாரணை முடிந்துவிட்டதால், அவருக்கு சிகிச்சையளித்த டாக்டர் கன்ராட் முர்ரேக்கு எதிராக குற்ற வழக்குப் பதிவுசெய்யப்படலாம் என தகவல்கள் வெளியாகியுள்ளன.


இதுகுறித்து இணையத்தளம் ஒன்றில் வெளியாகியுள்ள செய்தியில் பிரபல பொப் பாடகர் மைக்கேல் ஜாக்சன் கடந்தாண்டு மாரடைப்பால் காலமானார். இவரது இறப்பிற்கான காரணம் குறித்து, பல்வேறு சர்ச்சைகள் எழுந்தன. இது தொடர்பாக, அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சல்ஸ் பொலிஸ் துறை நடத்திய விசாரணை, கடந்த மாதம் முடிவடைந்தது. இந்த விசாரணை அறிக்கை, ஒரு வாரத்தில் மாவட்ட அட்டர்னியிடம் சமர்ப்பிக்கப்படவுள்ளது. இவ்வாறு அந்த இணையத் தளத்தில் செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

இதுகுறித்து, சட்ட அமுலாக்கத்துறை வட்டாரங்கள் கூறுகையில், மைக்லேல் ஜாக்சன் இறப்புத் தொடர்பான விசாரணை முழுவதுமாக முடிவடைந்துவிட்டது. அவருக்கு சிகிச்சை அளித்த டாக்டரான கன்ராட் முர்ரேக்கு எதிராக, குற்ற வழக்குப் பதிவு செய்யப் போதுமான ஆதாரங்கள் உள்ளன என்றார். மேலும், அவர்கள் டாக்டர் கன்ராட் முர்ரேக்கு எதிராக, கவனக்குறைவால், எதிர்பாராமல் உயிரிழப்பு ஏற்பட்டதாக வழக்குப் பதிவு செய்யப்படலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (2-4)




# செவ்வாய் கிரகத்தில் மனிதன் குடியேறலாம்

## அமெரிக்க விஞ்ஞானிகள் தகவல்



(வோஷிங்டன்)

செவ்வாய்க் கிரகத்தில் மனிதன் வாழ முடியுமா? என்ற கேள்வி அனைவரது மனதிலும் எழுந்துள்ளது.

இதற்கான ஆய்வில் அமெரிக்காவின் நாசா விஞ்ஞானிகள் ஈடுபட்டுள்ளனர்.

இது போன்ற ஆய்வுகளை ஜப்பான் உள்ளிட்ட நாடுகளின் விஞ்ஞானிகளும் மேற்கொண்டுள்ளனர். இந்த நிலையில் செவ்வாய்க் கிரகத்தில் மனிதன் குடியேறி அங்கு வாழ முடியும். அதுவும் இந்த ஆண்டு இறுதிக்குள் அது நடைபெற வாய்ப்புள்ளது என்று அமெரிக்காவின் நாசா விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

அமெரிக்காவில் ஹுஸ்டனில் உள்ள நாசா ஜான்சன் விண்வெளி மையத்தின் விண்வெளி உயிரியல் துறையின் தலைமை விஞ்ஞானி டேவிட் மெனக்கேயின் தலைமையிலான குழுவினர் இதற்கான ஆய்வை மேற்கொண்டுள்ளனர்.

இவர்கள் சக்தி வாய்ந்த புதிய மைக்ரோஸ் கோப்புகள் மற்றும் உபகரணங்கள் மூலம் எரி நட்சத்திர கற்களை பரிசோதனை செய்தனர்.

மேலும் அங்குள்ள பாறைகளையும் சோதித்துப் பார்த்தனர். இதன்மூலம் செவ்வாய் கிரகத்தில் வாயுக்கள் இருப்பது தெரியவந்துள்ளது. எரி நட்சத்திரக் கற்களை சோதித்துப் பார்த்ததில் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக அங்கு ஐஸ்கட்டிகளால் ஆன குளிர்ந்த பாலைவனம் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

மேலும் பூமியில் விழுவதற்கு முன்பு 3 எரிநட்சத்திர கற்களும் 10 இலட்சம் ஆண்டுகள் சூரியனை சுற்றியபடியே இருந்துள்ளது. இதற்கிடையே செவ்வாய்க் கிரகத்தில் இருந்து எடுக்கப்பட்ட பாறையில் நுண்ணுயிர்கள் இருந்தது. எனவே அங்கு உயிர்கள் வாழ முடியும் என்று கருதப்படுகிறது. இதன்மூலம் செவ்வாய்க் கிரகத்தில் மனிதன் வாழ முடியும் என்று நாசா விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். (2-4)

## கூகிள் நிறுவனத்திற்கு எதிரான

# சீனாவின் அடக்கு முறைகளுக்கு அமெரிக்கா கடும் எதிர்ப்பு

Google™

உலக இணைய தேடுதள ஜாம்பவான்களாகக் கருதப்படும் கூகிள் நிறுவனத்திற்கு எதிராக சீனாவில் பிரயோகிக்கப்படும் அடக்குமுறைகளுக்கு அமெரிக்கா கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ளது.

கூகிள் நிறுவனத்திற்கு எதிராக சீனா மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் தொடர்பில் அமெரிக்க ராஜாங்கத் திணைக்களம் உத்தியோகபூர்வ எதிர்ப்பை வெளியிடத் தீர்மானித்துள்ளது.

இத்தகைய சீனாவில் நடவடிக்கைகள் தொடர்பில் அமெரிக்கா விளக்கம் கோரத் தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கமைய தமது இணையத்தளத்தின் மீது பிரயோகிக்கப்படும் தணிக்கைகள் மற்றும் ஹெக் நடவடிக்கைகளின் காரணமாக சீனாவில் இயங்குவதனை நிறுத்திக் கொள்ளப் போவதாக கூகிள் அறிவித்திருந்தது.

மற்றுமொரு இணையத்தள ஜாம்பவானான யாகூ நிறுவனத்தின் மீதும் சீனா வில் பல்வேறு தாக்குதல்கள் மேற்கொள்ளப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எவ்வாறெனினும் தமது நாட்டு சட்ட திட்டங் களுக்கு அமைவான முறையில் வெளிநாட்டு இணைய நிறுவனங்கள் தொழில் ஈடுபடத் தடையில்லை என சீனா அறிவித்துள்ளது.

மனித உரிமை விவகாரங்கள் தொடர்பிலான விடயங்கள் அதிகளவில் தணிக்கை செய்யப்படுவதாக கூகிள் அறிவித்துள்ளது. (2-4)

# இந்தியா பின்னாலிருந்து பொன்சேகாவுக்கு ஆதரவு வழங்கவில்லை

## ரணில்



(கொழும்பு)

வடக்கு-கிழக்கு இணைப்புத் தொடர்பாக, ஜெனரல் சரத் பொன்சேகாவுடன் இணக்கப்பாடு ஏற்பட்டதாக லங்காதீப செய்தி தாளுக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் ஆர். சம்பந்தன் ஒருபோதும் செவ்வி வழங்கவில்லையென ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

செய்தித்தாள் ஒன்றுக்கான செவ்வியின் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில், ஜெனரல் சரத் பொன்சேகாவை ஆர். சம்பந்தன் சந்தித்தபோது பொன்சேகா தாம் தயாரித்த பத்துக் கொள்கைகள் அடங்கிய ஆவணத்தை சம்பந்தனிடம் கையளித்துள்ளார். இதனைத் தவிர வேறு எந்த ஆவணங்களும் கையெழுத்திடப்படவில்லையென ரணில் விக்கிரமசிங்க தமது செவ்வியில் தெரிவித்துள்ளார்.

சம்பந்தனுக்கும் தமக்கும் இடையில் வடக்கு-கிழக்கு இணைப்புத் தொடர்பாகப் பேசப்பட்டபோதும் அது தொடர்பில் ஆவணம் எதுவும் கையெழுத்தாகவில்லை என்றும் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் வடக்கு-கிழக்கு தமிழர்கள் சரத் பொன்சேகாவுக்கே வாக்களிப்பார் எனத் தெரிவித்துள்ள ரணில் வடக்கு-கிழக்கிலுள்ள படையினரும் அவருக்கே வாக்களிப்பர் என நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

வடக்கு-கிழக்கில் இந்த அரசாங்கத்தினால் எவ்வித அபிவிருத்திகளும் மேற்கொள்ளப்படவில்லை. மட்டக்களப்பில் இடம்பெறும் சுனாமியின் பின்னரான அபிவிருத்தித் திட்டங்களையே அரசாங்கம் தமது அபிவிருத்தித் திட்டமாகக் காட்டுகிறது.

மேலும் மகிந்த ராஜபக்ஷவின் சுவரொட்டிகள் யாவும் பழைய சுவரொட்டிகளாகக் காணப்படுகின்றன. ஏனெனில் அவை அனைத்தும் தம்மை எதிர்த்து மகிந்தவை போர் வீரனாகக் காட்டும் வகையில் அச்சிடப்பட்டவையாகும் என தெரிவித்த ரணில் விக்கிரமசிங்க உண்மையான போர் வீரனைத் தாம் களத்தில் இறக்கிய பின்னர் அந்த பிரசாரம் தவிடுபொடியாகிவிட்டது எனக் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்வரும் 26ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற்றால் முதலாவதாக அரசியலமைப்பு சபை அமைக்கப்படும். இரண்டாவதாக அனைத்துக் கட்சிகளையும் உள்ளடக்கிய காபந்து அரசாங்கம் அமைக்கப்படும். மூன்றாவதாக நாடாளுமன்றம் கலைக்கப்படும் என்றும் ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டார். எனினும் காபந்து அரசாங்கத்தின் பிரதமர் யாராக இருக்கும் என்ற கேள்விக்கு அவர் பதிலளிக்கவில்லை.

தற்போது ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் குடும்பத்தின் மீது பல்வேறு ஊழல் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன. எனினும் சரத் பொன்சேகாவின் மீது எந்தக் குற்றச்சாட்டும் சுமத்தப்படவில்லை.

அவருடைய மருமகன் மீது யுத்தத்தின்போது தருவிக்கப்பட்டதாகக் கூறப்படும் கைனாகியூலர் மற்றும் மின்பிறப்பாக்கி போன்றவை தொடர்பில் குற்றச்சாட்டு எழுந்துள்ளது எனினும் அதனை ஜெனரல் பொன்சேகா மறைக்கப்போவதில்லை. அது தொடர்பில் அவர் உரிய நேரத்தில் கருத்துத் தெரிவிப்பார் என்றும் ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டார்.

அத்தோடு கிண்ணியாப் பாலம், பெந்தோட்டப் பாலம் என்பன தமது ஆட்சியின்போதே ஆரம்பிக்கப்பட்டன. இந்நிலையில் மகிந்த ராஜபக்ஷவினால் எந்த அபிவிருத்திப் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட என அவர் கேள்வி எழுப்பினார்.

இதேவேளை ஜெனரல் சரத் பொன்சேகாவுக்கு இந்தியா பின்னால் இருந்து ஆதரவளிப்பதாக வெளியான தகவலையும் ரணில் விக்கிரமசிங்க மறுத்துள்ளார். (2-4)

# குடும்பஸ்தர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரப் பகுதியில் துணி விற்பனையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த இரு இளைஞர்கள் சேர்ந்து குடும்பஸ்தர் ஒருவரை அடித்துப் படுகாயப்படுத்தியுள்ளனர்.

நேற்று முன்தினம் காலை இடம்பெற்ற இச்சம்பவத்தில் கொழும்பிலிருந்து வருகை தந்து யாழ்ப்பாணத்தில் வசிக்கும் 45 வயது மதிக்கத்தக்க குடும்பஸ்தரே தலையில் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (30)

# மேலும் சில ஜனாதிபதி வேட்பாளர்கள் போட்டியிலிருந்து விலகத்திட்டம்

(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடக் கட்டுப்பணம் செலுத்திய மேலும் சில வேட்பாளர்கள் போட்டியிலிருந்து விலகத் திட்டமிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த வேட்பாளர்கள் ஆளும் அல்லது எதிர்க்கட்சிக்கு ஆதரவு தெரிவித்து போட்டியிலிருந்து வாபஸ் பெற்றுக் கொள்ள உத்தேசித்துள்ளதாகக் குறிப்பிடப்படுகின்றது.

அண்மையில் இரண்டு வேட்பாளர்கள் போட்டியிலிருந்து விலகி ஆளும் மற்றும் எதிர்க்கட்சிகளுக்கு ஆதரவினைத் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

முன்னாள் பிரதியமைச்சர் எம். எம். முஸ்தபா, ஜெனரல் சரத் பொன்சேகாவிற்கும் சீலரட்ண தேரர், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கும் தமது ஆதரவினை வெளியிட்டுள்ளனர்.

இதேபோன்று மேலும் பல வேட்பாளர்கள் எதிர்வரும் நாட்களில் ஆளும் அல்லது எதிர்க்கட்சிகளுக்கு ஆதரவு தெரி வித்து தேர்தலிலிருந்து விலகிக் கொள்வார்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (2-4)

# ஜனாதிபதி தேர்தலின் பின்னர் அரசியல் சாசனத்தில் திருத்தங்கள்

## அரசாங்கம்

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் அரசியல் சாசனத்தில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படும் என அரசாங்கம் அறிவித்துள்ளது.

எதிர்க்கட்சிகள் இணக்கம் தெரிவித்தால் மிக முக்கியமான தீர்மானங்களைச் சட்டமாக்க முடியும் எனக் குறிப்பிடப்படுகின்றது.

இதற்கமைவாக அரசியல் சாசனத் திருத்தங்களுக்கு எதிர்க்கட்சிகள் ஒத்துழைப்பு வழங்கத் தவறினால் பாராளுமன்றம் கலைக்கப்படும் என ஊடக அமைச்சர் லக்ஸ்மன் யப்பா அபேவர்தன தெரிவித்துள்ளார்.


அடிமட்டத்திலிருந்து ஊழல் மோசடிகளைத் தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்தோடு அமைச்சர்கள் மக்களுக்குப் பதில் சொல்ல வேண்டிய வகையிலான திருத்தங்கள் உருவாக்கப்படும் என்றும் தற்போது 2 ஆயிரம் டொலர்களாகக் காணப்படும் தலா தேசிய வருமானத்தை எதிர்வரும் ஆறு வருடங்களுக்குள் ஆறாயிரம் அமெரிக்க டொலர்களாக உயர்த்த நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் ஜெனரல் சரத் பொன்சேகாவிற்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்டுள்ள இரசகிய ஒப்பந்தம் தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவித்துள்ளதோடு ஜெனரல் ஜனாதிபதியாக நியமிக்கப்பட்டால் பல முக்கிய அமைச்சுப் பொறுப்புக்களைத் தாமே வகித்துக் கொண்டு தனி ஆளாக நாட்டை ஆட்சி செய்ய முயற்சிப்பார் என ஊடக அமைச்சர் எச்சரிக்கை விடுத்துள்ளார். (2-6)

# ஒஸாமா பின்லேடனின் தற்போதைய மாதிரிப் படங்கள்

## அமெரிக்கா வெளியிட்டுள்ளது



சர்வதேச தீவிரவாத இயக்கமான அல் கொய்தா அமைப்பின் தலைவர் ஒஸாமா பின்லேடனின் தற்போதைய மாதிரிப் படங்களை அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் வெளியிட்டுள்ளது.

ஒஸாமா பின்லேடன் தற்போது 52 வயதை அடைந்திருப்பதாகவும் அதற்கு ஏற்ற வகையில் கணனி மூலம் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டு புதிய புகைப்படம் வெளியிடப்பட்டுள்ளது.

1998ஆம் ஆண்டில் எடுக்கப்பட்ட புகைப்படத்தை அடிப்படையாகக் கொண்டு கணனி மென்பொருட்களைப் பயன்படுத்தி இந்தப் புகைப்படம் தயாரிக்கப்பட்டுள்ளது.

வயது முதிர்ச்சியினால் முகம் மற்றும் தலைமயிர் ஆகியவற்றில் ஏற்படக்கூடிய மாற்றங்கள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டு புகைப்படம் வெளியிடப்பட்டுள்ளது.

நீண்ட தாடியுடன் மற்றும் குறைந்தளவு தாடியுடன் ஆகிய இரண்டு நிலைகளில் படம் தயாரிக்கப்பட்டுள்ளது.

தற்போது அமெரிக்காவினால் தேடப்பட்டு வரும் மிக முக்கியமான நபராக ஒஸாமா பின்லேடன் கருதப்படுகின்றார்.

செப்ரெம்பர் 11 உலக வர்த்தக மையம் மீதான தாக்குதல் உள்ளிட்ட பல்வேறு தீவிரவாத செயற்பாடுகளுடன் பின்லேடனுக்குத் தொடர்பு இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தான் எல்லைப் பகுதியில் பின்லேடன் பதுங்கியிருக்கக் கூடுமெனத் தெரிவிக்கப்படுகின்றது. (2-4)


அரியாலை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)

**பதவி வெற்றிடம்**

பதவி :- பொது முகாமையாளர்.
பதவி குறியீடு: -101/8

சம்பளத்திட்டம்:- 11200.00-14100.00 (66/06 சுற்றுநிருபப்படி)
140X 10 - 150X 10

வயது :- 18-45
பால் :- ஆண்/பெண்

**தகைமைகள்**

அ) கூட்டுறவுப் பணியாளர் 09 ஆவது சம்பளத்திட்டத்தில் முகாமை அல்லது மேற்பார்வை மட்டத்திலான பதவியில் 03 வருடத்திற்கு குறையாத அனுபவம் அல்லது 10 ஆவது சம்பளத்திட்டத்திலான பதவியில் 06 வருடத்திற்கு குறையாத அனுபவம்.

**அல்லது**

ஆ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைகழகம் ஒன்றில் பட்டத்துடன் அல்லது இணையான பட்டத்துடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக அல்லது தொழில் ஸ்தாபனம் ஒன்றில் முகாமை மட்டத்திலான பதவியில் 04 வருடத்திற்கு குறையாத அனுபவம்.

**அல்லது**

இ) கூட்டுறவுப்பணியாளர் தராதரப்பத்திரம் (உ/த சித்தி) அல்லது (க.பொ.த (உ/த) 03 பாடங்களில் சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக அல்லது தொழில் ஸ்தாபனம் ஒன்றில் முகாமை மட்டத்திலான பதிவியில் 06 வருடத்திற்கு குறையாத அனுபவம்.

குறிப்பு:-

1) விண்ணப்ப படிவங்களை சங்கத்தலைமை காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.
2) வயதெல்லை கூட்டுறவுச் சங்கப் புணியாளருக்கு விலக்களிக்கப்பட்டுள்ளது. கூட்டுறவுச் சங்க பணியாளர் தங்கள் விண்ணப்பங்களை தங்கள் சங்கங்கள் ஊடாக அனுப்புதல் வேண்டும்.
3) விண்ணப்பங்கள் யாவும் 03.02.2010ஆம் திகதிக்கு முன்னர் தலைவர், அரியாலை பனைதென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம், இலக்கம் 15 நடுத்தெரு லேன், அரியாலை என்ற முகவரிக்கு தபாலிலோ, நேரடியாகவோ சமர்ப்பிக்க வேண்டும்.

தலைவர்
18.01.2010

(C-4250) T.P.: 021 222 6336

# தை மாதப் பலன்கள்

## துலாம்

**சித்திரை 3, 4ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1, 2, 3 ஆம் பாதங்கள்**

**எதிர்காலச் சிந்தனையிலேயே எப்பொழுதும் மூழ்கி இருக்கும் துலாம் ராசி நேயர்களே!**

தை மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, தக்க விதத்தில் கிரகங்கள் சஞ்சரித்தாலும், ஏழரைச்சனி அல்லவா? இடம்பிடிக்கின்றது. எனவே உங்கள் கூட்டு முயற்சிகளில் மாற்றம் ஏற்படும். கூடுதல் விழிப்புணர்ச்சியோடு இருந்தாலும், விரயங்கள் அதிகரிக்கிறதே என்று நினைப்பீர்கள். குடும்பச் செலவுகள் கூடும். பணத் தேவைகள் அப்போதைக்கு அப்போது பூர்த்தியானாலும், மன நிம்மதி ஏற்படாது.

தனாதிபதி வக்ரம் பெற்றுவிட்டார். அதோடு, சுகாதிபதியும் வக்ரம் பெற்று சஞ்சரிக்கிறார். எனவே சுகக்கேடுகள், மருத்துவச் செலவுகள் உருவாகலாம். ஆகாரத்தில் கட்டுப்பாடு செலுத்தினால் ஆரோக்கியம் சீராக அமையும். அடுத்தவர் நலன் கருதி எடுத்த முயற்சிக்கு அலைச்சலுக்கேற்ற ஆதாயம் கிடைக்காது. சனீஸ்வர பகவான் வழிபாடும், முருகப்பெருமான் வழிபாடும் உங்கள் வாழ்க்கைப் பாதையைச் சீராக்கிக் கொடுக்கும்.

தனாதிபதி வக்ரம் பெறுவதால், வாங்கல் – கொடுக்கல்களில் கவனம் தேவை. வாங்கிய சொத்துக்களை விற்க நேரிடலாம். யாரிடமும் பொறுப்புக்களை ஒப்படைத்தால், அது மீண்டும் உங்களிடமே வந்து சேரலாம். இருந்தாலும், சனியின் ஆதிக்கம் வலுவடையும் இந்த நேரத்தில் மந்தன் வழிபாட்டை முறையாகச் செய்வதோடு, காகத்திற்கும் எள் கலந்த சோறு வைப்பது நல்லது.

ஜனவரி 15ஆம் திகதி மகரத்தில் சுக்ரன் சஞ்சரிக்கிறார். சுகாதிபதி சுகஸ்தானத்தில் சஞ்சரிக்கும் இந்த நேரத்தில் தொழில் வளம் மேலோங்கும். தொகை கேட்ட இடத்தில் இருந்து கிடைக்கும். வீடு கட்டிக் குடியேற வேண்டுமென்ற எண்ணம் மேலோங்கும். பாடுபட்டதற்கேற்ற பலன் கிடைக்கும் இந்த நேரத்தில் நண்பர்கள் நல்ல தகவல்களைக் கொண்டு வந்து சேர்ப்பர்.

பெப்ரவரி 2ஆம் திகதி மகர ராசியில் விரயாதிபதியான புதன் சஞ்சரிக்கப் போகிறார். இதன் விளைவாக மருத்துவச் செலவுகள் கூடும். பொருத்தம் பார்த்துச் செய்த திருமணத்தில்கூட வருத்தப்படத்தக்க சம்பவங்களைச் சந்திக்க நேரிடலாம். தந்தை வழி உறவினர்களிடம் அனுசரித்துச் செல்வது நல்லது. கால்நடை வளர்ப்பவர்கள் கூடுதல் கவனம் செலுத்தினால்தான் ஆதாயத்தைச் சந்திக்க இயலும்.

பெப்ரவரி 7ஆம் திகதி ராசிநாதன் சுக்ரன் கும்ப ராசியில் உள்ள குருவோடு இணைந்து சஞ்சரிக்கிறார். இதன் விளைவாக, பிள்ளைகளின் நலன் கருதி எடுத்த முயற்சி வெற்றிபெறும். அவர்களின் உத்தியோக வாய்ப்புக்களால் வேறு வருமானங்கள் உங்களுக்குக் கிடைக்கும். மாற்றுக் கருத்துடையோர் மனம் மாறுவர். மங்கல நிகழ்ச்சிகள் இல்லத்தில் நடைபெறுவதற்கான அறிகுறிகள் தோன்றும்.

இம்மாதம் நவக்கிரக வழிபாட்டை முறையாகச் செய்தால் நல்ல காரியங்கள் இல்லத்தில் நடைபெறும்.

## விருச்சிகம்

**விசாகம் 4ஆம் பாதம், அனுஷம், கேட்டை**

**வெற்றி ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு செயற்படும் விருச்சிக ராசி நேயர்களே!**

தை மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, தன ஸ்தானத்தில் நான்கு கிரகங்கள் பலம் பெற்று விளங்குவதால் வருமானம் திருப்தி தரும். வளர்ச்சிப் பாதையை நோக்கிச் செல்வீர்கள். பெருமைக்குரிய சம்பவங்கள் ஏராளமாக நடைபெறும். பிறருக்காகப் பாடுபட்டதற்கேற்ற பலன்களும் கிடைக்கும்.

குருவின் பார்வை தொழில் ஸ்தானத்தில் பதிவதால் தொழில் வளம் மேலோங்கும். புதிய ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டு மகிழ்வீர்கள். புத–சுக்ர யோகத்தால் எதிர்பாராத தனலாபம் கிடைக்கும். பூமியால் வருமானம் வந்து சேரலாம். புதிய சொத்துக்களை வாங்கிச் சேர்க்கும் வாய்ப்புக் கிட்டும். சூரிய பலத்தால் புதிய பொறுப்புக்களும், பதவிகளும் வந்து சேரும்.

ராசிநாதன் செவ்வாய் நீச்சம் பெறுவதாலும், இலாப ஸ்தானத்தில் சனி வக்ரம் பெறுவதாலும் எதையும் ஒருமுறைக்கு இருமுறை யோசித்துச் செய்தால் வெற்றி வாய்ப்புக்கள் வீடு தேடி வரும். கூட்டாளிகளிடம் மாதக்கடைசியில் கொஞ்சம் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது. வியாபாரத்தில் வரும் இலாபங்களை அப்போதைக்கு அப்போது பிரித்து எடுத்துக் கொள்வது திருப்தி தரும். ஆனைமுகப் பெருமான் வழிபாடும், அனுமன் வழிபாடும் வாழ்வை வளம்பெறச் செய்யும்.

ஜனவரி 15ஆம் திகதி மகர ராசியில் சுக்ரன் சஞ்சரிக்கிறார். இதன் விளைவாக, உடன் பிறப்புக்கள் உதவிக்கரம் நீட்டுவர். வழக்குகளில் வெற்றி கிடைக்கும். ஆடை, ஆபரணங்களை வாங்கிச் சேர்ப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள். அரசு வழியில் நீண்ட நாட்களாக எதிர்பார்த்த சலுகைகள் இப்பொழுது கிடைப்பதற்கான அறிகுறிகள் தோன்றும். விருந்து, விழாக்களில் கலந்து கொள்ள அழைப்புக்கள் வந்து சேரும். தொலைபேசி வழித் தகவல் மகிழ்ச்சி தரும். திருமண வாய்ப்புக்கள் தள்ளிப்போகின்றதே என்ற கவலை இனி அகலும். மனஸ்தாபங்கள் மாறி மகிழ்ச்சி அதிகரிக்கும் இந்த நேரத்தில் வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்வீர்கள்.

பெப்ரவரி 2ஆம் திகதி மகர ராசியில் புதன் சஞ்சரிக்கிறார். இலாபாதிபதியாகவும், அஷ்டமாதிபதியாகவும் புதன் விளங்குகிறார்.

**சிவல்புரி சிங்காரம்**

எட்டுக்கு அதிபதி மூன்றில் சஞ்சரிக்கும் பொழுது, திட்டமிடாது செய்யும் காரியங்களில் வெற்றி கிடைக்கும். திறமை மிக்கவர்கள் உங்களுக்கு ஒத்துழைப்பாக இருந்து காரியங்களை முடித்துக் கொடுக்க முன்வருவர். வரவேண்டிய பாக்கிகள் வசூலாகும்.

கும்ப ராசியில் பெப்ரவரி 7ஆம் திகதி முதல் சுக்ரன் சஞ்சரிக்கிறார். 7, 12இற்கு அதிபதியான சுக்ரன் நான்கில் சஞ்சரிக்கும் பொழுது, பயணங்கள் அதிகரிக்கும். வாகனங்கள் வாங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள். தாய்வழி உறவினர்களால் அனுகூலம் கிடைக்கும். குடும்பத்தில் சுப காரியப் பேச்சுக்கள் நல்ல முடிவிற்கு வரும். நண்பர்கள் நல்ல தகவல்களைக் கொண்டு வந்து சேர்ப்பர்.

இம்மாதம் விநாயகர் வழிபாடும், முருகர், வள்ளி, தெய்வானை வழிபாடும் வெற்றியை வழங்கும். (தொடரும்)

# வாக்குகளைப் பெற்றுக் கொள்வதற்கே வடக்கில் சுயாட்சி உறுதியளிப்பு

## ஊடக அமைச்சர்



(கொழும்பு)

எந்தவொரு காரணத்திற்காகவும் வடக்கில் சுயாட்சி நிறுவப்படமாட்டாது எனவும், நாட்டிற்கு பெற்றுக் கொடுக்கப்பட்ட சுதந்திரம், தேர்தல்களுக்காக காட்டிக் கொடுக்கப்படமாட்டாது எனவும் ஊடக அமைச்சர் லக்ஸ்மன் யாப்பா அபேவர்தன தெரிவித்துள்ளார்.

வாக்குகளைப் பெற்றுக் கொள்வதற்காக ஜெனரல் சரத் பொன்சேகா, வடக்கிற்கு சுயாட்சி அதிகாரங்களை வழங்குவதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு உறுதியளித்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் துரைரட்ணசிங்கம் மற்றும் சிவசக்தி ஆனந்தன் ஆகியோரின் கூற்றுக்களின் மூலம் இந்த இரகசிய ஒப்பந்தம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் இந்த ஒப்பந்தங்கள் தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தமிழீழ விடுதலைப் புலிகள் இந்த நாட்டு மக்களை மீண்டும் துன்புறுத்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஒருபோதும் இடமளிக்கமாட்டார் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்ட போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார். (2-6)

# தந்தைக்காக பல மில்லியன் ரூபா செலவிட்ட நாமல் ராஜபக்ஷ

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தல் பிரசாரங்களின் போது தமது தந்தையான மகிந்த ராஜபக்ஷவிற்காக 119 மில்லியன் ரூபாவை அவரது மூத்த மகனான நாமல் ராஜபக்ஷ செலவிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனை ஊழல்களுக்கு எதிரான ட்ரான்பேரன்ஸி இன்டர்நெசனல் நிறுவனத்தின் கீழ் இயங்கும் பொதுமக்கள் வளங்களைப் பாதுகாக்கும் நிகழ்ச்சித் திட்ட அமைப்பு தெரிவித்துள்ளது.

ஜனாதிபதியின் மகன் கொண்டு நடத்தும் இளைஞர்களுக்கான நாளை (தாருண்ய ஹெட்டக்) அமைப்பின் மூலம் தொலைக் காட்சிகளுக்கு 4 ஆயிரத்து 616 தடவைகளும் வானொலிகளுக்கு 2 ஆயிரத்து 245 தடவைகளும் பல்வேறு துறைகளில் உள்ள பிரபலங்களின் குரல்களில் விளம்பரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இதற்காக செலவாகியுள்ள தொகை பல மில்லியன் ரூபாவாகும் என்றும் பொது மக்களின் வளங்களைப் பாதுகாக்கும் அமைப்பு குறிப்பிட்டுள்ளது. (2-4)

# எனது கணவரின் கொலை தொடர்பான குற்றச்சாட்டுக்களுக்கு பதிலளிக்கவேண்டும்

## ஜனாதிபதிக்கு லசந்தவின் மனைவி கடிதம்

சண்டே லீடர் பத்திரிகையின் ஸ்தாபக ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்கவின் கொலை தொடர்பில் மூடிமறைப்பை மேற்கொள்ளவில்லை என்பதை வெளிப்படுத்த வேண்டும் என லசந்த விக்கிரமதுங்கவின் மனைவியான சோனாலி விக்கிரமதுங்க ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு சவால் விடுத்துள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அண்மையில் தாம் இந்தக் கொலை விடயத்தில் எந்த மூடிமறைப்பையும் மேற்கொள்ளவில்லை என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்திருந்தார்.

இதற்குப் பதிலளிக்கும் வகையிலேயே சோனாலி ஜனாதிபதிக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளதாகத் தெரிகிறது.

அதில் எனது கணவர் உங்களது நண்பர் (மகிந்த ராஜபக்ஷ விக்கிரமதுங்கவை தனது நண்பர் என்றே குறிப்பிடுவார்) பட்டப்பகலில் கொலை செய்யப்பட்டு ஒரு வருடம் ஆகியுள்ளது.

இந்த நிலையில் இந்தக் கொலையில் சம்பந்தப்பட்ட எந்த விடயங்களும் முன்வைக்கப்படவில்லை எனக் குறிப்பிட்ட அவர் விசாரணைகள் வெளிப்படையாக நடத்தப்படாது மூடிமறைப்புக்கள் மேற்கொள்ளப்படுவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

எனவே ஜனாதிபதியாகிய நீங்கள் உங்களின் பெயரில் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டு தொடர்பில் தெளிவுபடுத்த வேண்டும் என சோனாலி தமது கடிதத்தில் தெரிவித்துள்ளதாகத் தெரிகிறது. (2-4)

# அடிக்கல் நாட்டு வைபவம்

யாழ். கொக்குவில் தெற்கு பிடாரி அம்மன் கோவில் கலை கலாசார மண்டபத்திற்கான அடிக்கல் நாட்டும் வைபவம் நேற்று முன்தினம் காலை 11.05 மணிக்கு இடம்பெற்றது.

இவ்வைபவத்தில் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு கலை கலாசார மண்டபத்திற்கான அடிக்கல்லை நாட்டிவைத்தார்.

மேற்படி கோவிலில் இடம்பெற்ற விசேட வழிபாடுகளின் பின்னர் அடிக்கல் நாட்டும் வைபவம் இடம்பெற்றது.

பிடாரி அம்மன் கோவில் நிதியைக் கொண்டு இம்மண்டபத்தின் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளதுடன் இம்மண்டபத்தை முழுமையாகக் கட்டி முடிப்பதற்கு பத்து மில்லியன் ரூபா நிதி செலவாகுமெனத் திட்ட மதிப்பீடு செய்யப்பட்டுள்ள நிலையில் இதற்கான ஏனைய நிதி உதவிகளை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடமிருந்து எதிர்பார்க்கப்படுவதாக கோவில் நிர்வாகத் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில் இங்கு கருத்துத் தெரிவித்த அமைச்சர் முழுமையான ஒத்துழைப்பையும் உதவிகளையும் வழங்கத் தான் தயார் எனத் தெரிவித்துள்ளதாகத் தெரிகிறது. (2-6)

நாய் தன் இனத்தை வெறுக்கும் அந்த இனவெறுப்பை–அது மனிதர்களிடம் கற்றுக் கொண்டது. –ஸ்வெயின்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## இராமர் இருக்கும் இடம் அயோத்திபோல சம்பந்தன் இருக்கும் இடமே தமிழ் கூட்டமைப்பு

ஜனாதிபதித் தேர்தல் தமிழ் அரசியல்வாதிகளின் பச்சோந்திதனத்தை வெளிப்படுத்தி உள்ளது.

வன்னி யுத்தம் முடிந்த கையோடு ஜனாதிபதித் தேர்தலும் வந்தமையால் எந்தப் புற்றில் எந்தப் பாம்பு என்பதை அறிய முடிந்ததில் தமிழ் மக்கள் புண்ணியம் செய்தவர்கள் என்றே கூற வேண்டும்.

வன்னி யுத்தத்தில் தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட பேரவலத்தின் ரணங்கள் சற்றேனும் ஆறுவதற்கு முன்னதாக தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அடிக்கும் குத்துக்கரணங்கள் இப்படியும் மனிதர்களா? என்று எண்ணத் தோன்றுகின்றது.

எதுவாயினும் பொதுத் தேர்தல் என்ற தீர்ப்பு பொது மக்களிடம் இருக்கும் வரை தடம்புரண்டவர்கள் அரசியல் நீரோட்டத்தில் கரையொதுங்கி முகத்திரை கிழிக்கப்பட்டு முகவரி இழப்பர் என்று சர்வநிச்சயம்.

அரசியல் என்பதை அழுக்கடையாக மாற்றுபவர்கள் அதிலிருந்து பிழைக்க முடியாது என்பது அனுபவத்தின் பட்டறிவு.

அரசியலில் மட்டுமல்ல; எவ்விடத்திலும் நேர்மையே நிலைத்து நிற்கும்.

இப்போதுகூட ஜனாதிபதித் தேர்தல் பிரசாரங்களில் நேர்மையீனங்களும், ஊழல் குற்றச்சாட்டுக்களும் தலைவிரித்தாடுகின்றன.

இதற்கெல்லாம் அடிப்படைக் காரணம் கண்மண் தெரியாமல் பொது மக்களின் சொத்துக்களை கபளீகரம் செய்யும் கயமைத்தனமாகும்.

எனவே அரசியலில் முதலில் நேர்மைத்தனத்தைக் கடைப்பிடிக்க வேண்டும். நேர்மை, நீதி, பக்கம் சாராமை என்ற இயல்புகளுக்கு மக்களும் இறைவனும் நிச்சயம் உதவி செய்வர்.

இங்கு அரசியல் நேர்மை என்பது சிறுபான்மை மக்களின் அரசியல் தலைமைகளுக்கு மிகமிக அவசியமானதாகும்.

சிறுபான்மை மக்களின் அரசியல் தலைமைகள் பச்சோந்தித்தனமாக நடந்து கொள்ளுமாயின் அதனால் ஏற்படும் விளைவுகள் பேரழிவுகளாகவும், கொலைகளாகவுமே அமையும்.

சந்தர்ப்பவசமாக கிடைத்த பதவிகளைத் தொடர்ந்து காப்பாற்ற நினைப்பதில் எந்தத் தவறும் இல்லை. அதற்காக தன் இனத்தை விற்று பிழைப்பு நடத்த முற்படுவது மகாபாவம்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஜெனரல் சரத் பொன்சேகாவை ஆதரிப்பதென அறிவித்துள்ளது. யாரும் எவரையும் ஆதரிக்கலாம்.

ஆனால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒரு பகுதியினர் ஜெனரல் சரத் பொன்சேகாவையும் இன்னொரு பகுதியினர் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவையும் ஆதரிப்பதான அறிவிப்புகள் அபத்தமானவை.

அது கூட்டமைப்பில் திட்டமிட்டு பிளவை ஏற்படுத்துவதுடன் உண்மையான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எது என்ற குழப்பத்தையும் ஏற்படுத்துவதற்கான சூழ்ச்சியாகும்.

எதுவாயினும், இராமர் இருக்கும் இடம் அயோத்தி போல, இரா.சம்பந்தன் இருக்குமிடமே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற உறுதிப்பாடு தமிழ் மக்களிடம் உண்டென்ற உண்மை உணரப்படவேண்டியதொன்றாகும்.

# இணையத்தளமூடாக தீவிரமடைந்துள்ள தேர்தல் பிரசார நடவடிக்கைகள்

## டாக்டர் சந்தன கமகே தெரிவிப்பு

(கொழும்பு)

கடந்த காலங்களைப் போன்றல்லாது இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் இணையத்தின் ஊடான தேர்தல் பிரச்சார நடவடிக்கைகள் தீவிரமடைந்துள்ளதாக மொறட்டுவ பல்கலைக்கழகத்தின் கணனி விஞ்ஞானபீட சிரேஸ்ட விரிவுரையாளர் டாக்டர் சந்தன கமகே தெரிவித்துள்ளார்.

டிஜிட்டல் ஆயுதங்களைக் கொண்டு சைபர் வீதியில் ஒருவருக்கு ஒருவர் சேறு பூசும் நடவடிக்கைகள் இம்முறை தீவிரமாக முடக்கி விட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதற்கமைய இணைய தளங்களை ஹெக் செய்தல், போலியான தகவல்களை வெளியிடல் மின்அஞ்சல் மோசடி என முறையற்ற தேர்தல் பிரச்சார நடவடிக்கைகள் பல பரிமாணங்களில் இம்முறை இடம்பெற்று வருவதாகவும்,

கடந்த கால தேர்தல்களின் போது தமது பிரச்சாரத்தை வலியுறுத்தும் வகையிலான மின் அஞ்சல்கள் மட்டுமே இணையத்தில் வலம் வந்ததாகவும் தெரிவித்தார்.

மேலும் இலங்கையில் அநேகமான இணைய மற்றும் வலைப்பூக்கள் ஏதாவது ஒரு பக்கச் சார்பானதாக காணப்படுவதாகவும் இதனால் 2007 ஆண்டு இலங்கையில் அறிமுகப் படுத்தப்பட்ட கணனிக் குற்றச் செயல் சட்டம் முழுமையாக அமுல்படுத்தப்பட வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை எதிர்க்கட்சிகளுக்கு அவதூறு ஏற்படுத்தும் நோக்கில் அரசாங்கம் பல மில்லியன் ரூபாக்களை இணையத்தில் செலவிடுவதாக ஜே.வி.பி. பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

இணைய தளங்கள் ஹெக் செய்யப்படுதல், போலியான மின் அஞ்சல்கள் அனுப்பி வைக்கப்படுவதல் உள்ளிட்ட பல்வேறு வழிகளில் எதிர்க்கட்சிகள் மீது அழுத்தம் பிரயோகிக்கப்படுவதாகத் குறிப்பிட்டுள்ளதோடு இணையத்தளங்களில் வெளியாகும் செய்திகள் மற்றும் தகவல்கள் தொடர்பில் எதிர்க்கட்சி ஆதரவாளர்கள் விழிப்புடன் இருக்க வேண்டுமெனவும் அவர் கேரிக்கை விடுத்துள்ளார்.

மேலும் எதிர்க்கட்சிகளின் பொது ஜனாதிபதி வேட்பாளர் சரத் பொன்சேகாவுடன் தொடர்புடைய பெயர்களிலேயே மோசடியான இணைய தளங்கள் இயங்கி வருவதாகவும் அவற்றுக்கும் தமக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இலங்கை அரசாங்கத்திற்கு எதிராக உள் நாட்டிலும் வெளிநாட்டிலும் பல்வேறு சேறு பூசும் இணைய தளங்கள் இயங்கி வருவதாக ஊடக அமைச்சர் லக்ஸ்மன் யாப்பா அபேவர்தன சுட்டிக்காட்டியுள்ளார். பெரும் எண்ணிக்கையிலான தகவல்கள் போலியானவை எனவும் சேறு பூசும் நோக்கில் உருவாக்கப்பட்டவை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதற்கமைய அரசாங்கம் மிக வெற்றிகரமாக தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளை இணையமூடாக முன்னெடுத்து வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (2-4)

# இலங்கைத் தமிழர் விடயத்தில் கருணாநிதி நாடகமாடுகிறார்

## பத்திரிகையாளர் சோ தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கைப் பிரச்சினையில் தமிழக முதல்வர் கருணாநிதி நாடகமாடுகிறார். அந்த நாடகத்தின் ஒரு பகுதியாகவே உண்ணாவிரதம் மேற்கொண்டார் என்று பத்திரிகையாளர் சோ கூறினார்.

சென்னையில் நடைபெற்ற துக்ளக் பத்திரிகையின் ஆண்டுக் கூட்டத்தில் அவர் மேலும் பேசியதாவது,

இலங்கைப் பிரச்சினையை தமிழகத்தில் உள்ள சில தலைவர்கள் திசை திருப்புகிறார்கள்.முதல் அமைச்சர் கருணாநிதியும் தன் பங்குக்கு நன்கு நாடகமாடுகிறார்.

இலங்கையில் போரை நிறுத்தவேண்டும் என்று வலியுறுத்தி திடீரென உண்ணாவிரதம் இருக்கப் போவதாகச் சொன்னார். ஆனால் அந்த உண்ணாவிரதம் சில மணி நேரம் கூட நீடிக்கவில்லை.

மத்திய அமைச்சர் மம்தா பானர்ஜி முன்பு இருபது நாட்களுக்கு மேல் தனது கோரிக்கைகள் சிலவற்றை வலியுறுத்தி உண்ணாவிரதம் இருந்தார்.தனித் தெலுங்கானா மாநிலம் கேட்டு சந்திரசேகரராவ் அண்மையில் பதினொரு நாட்கள் உண்ணாவிரதம் இருந்தார்.

இவற்றுக்கெல்லாம் தான் உண்ணாவிரதம் என்று பெயர்.

ஆனால் காலையில் வீட்டில் சாப்பிட்டு திடீரென உண்ணாவிரதம் இருக்கப் போவதாக அறிவித்தார் கருணாநிதி. இலங்கையில் உடனடியாகப் போரை நிறுத்தவேண்டும் என்பதற்காகவே உண்ணாவிரதம் என்றும் அறிவித்தார். தமிழர்களுக்காக தன் உயிரைப் பலிகொடுக்கத் தயாராகி விட்டதாகவும் சொன்னார்.

ஆனால் இலங்கையில் போர் நிறுத்தம் குறித்து எந்த அறிவிப்பும் வெளியாகவில்லை. ராஜபக்ஷ எந்த வாக்குறுதியும் அளிக்கவில்லை.இந் நிலையில் மத்திய அமைச்சர் ப.சிதம்பரம் கருணாநிதியுடன் பேசினாராம் இலங்கையில் போர் நிறுத்தம் அமுலுக்கு வந்திருப்பதாக சிதம்பரம் கூறியதை ஏற்று உண்ணாவிரதத்தைக் கைவிடுவதாக கருணாநிதி அறிவித்தார்.

பாவம் அதற்குமேல் பசியைப் பொறுக்கமுடியவில்லை போலிருக்கிறது.இப்படித்தான் தமிழகத் தலைவர்கள் பலர் இலங்கைப் பிரச்சினையில் நாடகமாடி வருகிறார்கள் என்று சோ பேசினார். (2-4)

## டெங்கு நோய் தொடர்பான பயிற்சிக் கருத்தரங்கும் தடுப்பு நடவடிக்கைகளும்

(யாழ்ப்பாணம்)

சுகாதார அமைச்சினால் டெங்கு நோய் சம்பந்தமான சட்ட நடவடிக்கை பயிற்சி கருத்தரங்கு ஒன்று இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு யாழ் .பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் இடம்பெறவுள்ளது.

இப்பயிற்சி நெறியின் பிற்பாடு யாழ் .மாவட்ட பகுதியிலுள்ள சகல வீடுகள் , நிலையங்கள் போன்ற இடங்களில் பொது சுகாதார பரிசோதகர்களால் பரிசோதனை மேற்கொள்ளப்படவுள்ளது.

இதன் போது துப்பரவு பணிகள் திருப்திகரமாக காணப்படும் பகுதிகளுக்கு பச்சை நிறத்திலான துண்டுப்பிரசுரம் ஒட்டப்படும் எனவும் டெங்கு பரம்பல் அதிகரிக்கும் இடங்கள் காணப்படின் சிவப்பு நிறத்திலான துண்டுப் பிரசுரம் ஒட்டப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் சுற்றுச்சூழலை சுத்தம் செய்யாது இருப்பவர்கள் மிக குறுகிய காலத்தில் இதனை நிவர்த்தி செய்யாது இருப்பின் அவர்களுக்குகெதிராக சட்ட நடவடிக்கையும் மேற்கொள்ள வுள்ளதாக யாழ். மாநகரட்சி பிரதம பொது சுகாதார பரிசோதகர் க.ஆ. ஜீவநாதன் தெரிவித்துள்ளார். (2-30)

## சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்



### கல்வியும் சமுதாயமும்

நாம் ஏன் உலகிற்கு நன்மை செய்ய வேண்டும்? மேலோட்டமாகப் பார்த்தால் உலகிற்கு நன்மை செய்வதாகத் தோன்றும். ஆனால் உலகிற்கு நன்மை செய்வதனால் , உண்மையில் நமக்கு நாமேதான் உதவி செய்து கொள்கிறோம்.


உயர்ந்த பீடத்தில் நின்று உனது கையில் ஐந்து காசுகளை எடுத்துக்கொண்டு , 'ஏ பிச்சைக்காரா! இதை வாங்கிக் கொள்' என்று நீ சொல்லாதே. மாறாக ,அவனுக்கு கொடுப்பதால் உனக்கு நீயே உதவி புரிந்து கொள்ள முடிந்ததை நினைத்து , அந்த ஏழை அங்கு இருந்தற்காக அவனிடம் நீ பாக்கியசாலியே தவிர பெறுபவன் அல்ல. இந்த உலகில் உன்னுடைய தர்ம சிந்தனையையும் இரக்க மனப்பான்மையும் பயன்படுத்த வாய்ப்புக் கிடைத்திருப்பதற்காக நீ நன்றியுள்ளவனாக இரு. இதன் மூலம் தூய்மையும் பரிபூரணத்தன்மையும் உன்னை வந்தடையும்.

### பனி மூட்டத்தினால்

# உத்தர பிரதேசத்தில் மீண்டும் ரயில் விபத்து

உத்தரபிரதேசத்தில் கடும் பனி மூட்டம் காரணமாக நேற்று முன்தினம் மீண்டும் ரயில் விபத்து ஏற்பட்டது. ரயில்வே ஸ்டேஷனில் நின்று கொண்டிருந்த ஷ்ரம் சக்தி எக்ஸ்பிரஸ் மீது கான்பூர் நோக்கிச் சென்ற காலிந்தி எக்ஸ்பிரஸ் ரயில் மோதியதால் மூன்று பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். 15 பேர் படுகாயம் அடைந்தனர். இந்த விபத்து குறித்து விசாரணை நடத்த ரயில்வே அமைச்சகம் உத்தரவிட்டுள்ளது.

தற்போது உத்தரபிரதேச உள்ளிட்ட வட மாநிலங்களில் கடந்த சில வாரங் களாக கடும்



பனி மூட்டம் உள்ளது. இத னால் விமானம் மற்றும் ரயில் போக் குவரத்து பாதிக்கப்படுகிறது.

கடந்த 2ஆம் திகதி உ.பி.யில் மட்டும் கடும் பனி மூட்டம் காரணமாக அடுத் தடுத்து மூன்று ரயில் விபத்துக்கள் ஏற் பட்டன. இந்த மூன்று விபத்துமே பனி மூட்டத்தால் சிக்னல் சரியாக தெரியாத பிரச்சினையால் நேர்ந்தவை நேற்று முன்தினம் மீண்டும் அதுபோல் ஒரு விபத்து ஏற்பட்டது. உத்தரபிரதேச ஆக்ரா அருகே துன்டலா என்ற இடம் உள்ளது. இங்கு டில்லி யில் இருந்து கான்பூர் செல்லும் ஷ்ரம் சக்தி எக்ஸ் பிரஸ் நின்று கொண்டிருந்தது. அப்போது அந்த பகுதியில் கடும் பனி மூட்டம் இருந்தது.

இந்த நேரத்தில் பிவானியில் இருந்து கான்பூர் செல்லும் காலிந்தி எக்ஸ்பிரஸ் ரயில் அதே பாதையில் வந்தது. கடும் பனி மூட்டம் காரணமாக காலிந்தி எக்ஸ்பிரஸ் ரயில் ட்ரைவருக்கு சிக்னல் சரியாக தெரியவில்லை என கூறப்படுகிறது. இதனால் அந்த ரயில் ஷ்ரம் சக்தி எக்ஸ்பிரஸ் ரயில் மீது பலமாக மோதியது. ஷ்ரம் சக்தி எக்ஸ்பிரஸ் ரயிலின் இரண்டு பெட்டிகள் கடுமையாக சேதமடைந்தன. இந்த விபத்தில் 3 பயணிகள் பரிதாபமாக பலியாயினர். 15 பேர் படுகாயமடைந்தனர். சம்பவ இடத்திற்கு மருத்துவக் குழுவும் மீட்புக் குழுவும் விரைந்தன. காயமடைந்தவர்கள் அருகில் உள்ள மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். சேதமடைந்த பெட்டிகளில் இருந்து மற்ற பயணிகள் பாதுகாப்பாக மீட்டகப்பட்டனர்.

இவ்விபத்து பற்றி வடக்கு மத்திய ரயில்வே செய்தி தொடர்பாளர் வாஜ்பாய் கூறுகையில் முதற் கட்ட விசாரணையில் பனி மூட்டம் காரணமாகவே இந்த விபத்து நடந்துள்ளது தெரியவந் துள்ளது. இருந்தாலும் ரயில்வே பாதுகாப்பு ஆணையாளர் தலைமையில் விபத்து குறித்து விரிவா னகன விசாரணை நடத்த உத்தரவிடப்பட்டுள்ளது என்றார். (2-4)

# 75 வயது முதியவர்கள் வாகனம் ஓட்டக் கூடாது

### இந்தியாவில் புதிய சட்டம்

இந்தியாவில் ஒவ்வொரு ஆண்டும் சாலை விபத்துக்களில் மட்டும் ஒரு இலட்சத்து 14 ஆயிரம் பேர் உயிர் இழக்கின்றனர். உலகில் எந்த நாட்டிலும் இது போன்ற மோசமான சூழ்நிலை இல்லை.

எனவே சாலை விபத்துக்களை தடுக்க இந்திய மத்திய அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுக்கவுள்ளது. புதிய சட்ட விதிகளையும் உருவாக்கவுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இப்போது யார் வேண்டுமானாலும் நேரடியாக விண்ணப்பித்து சாரதி அனுமதிப் பத்திரம் பெறும் விதிமுறைகள் உள்ளன. இனி அங்கீகாரம் பெற்ற சாரதி பயிற்சி பள்ளி களில் படித்து அதன் மூலமே விண்ணப்பிக்க முடியும் என்றும் 16 வயது உடையவர்களுக்கு இப்போது மொபட் ஓட்ட அனுமதி வழங்கப்படுகிறது. இனி 18 வயதுக்கு மேல் தான் இந்த அனுமதி கிடைக்கும்.



மேலும் வாகனம் ஓட்ட வயது உச்சவரம்பு இல்லாமல் இருந்தது. இனி 75 வயதுக்கு மேல் வாகனம் ஒட்ட தடை விதிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.(2-4)

### இந்திய குடியரசு தினத்தில்

# தீவிரவாதிகள் நாசவேலைக்கு சதி!

## இந்திய உளவுத்துறை எச்சரிக்கை

(கொச்சி)

பாகிஸ்தான் தீவிரவாதிகள் இந்தியாவில் நாசவேலைக்குத் திட்டமிட்டுள்ளதால் பொலிசார் உஷார் நிலையில் உள்ளனர். காஷ்மீரில் சமீபகாலமாக தீவிரவாதிகள் ஊடுருவல் அதிகரித்துள்ளது.

இந்த நிலையில் பஞ்சாப் மாநில எல்லையில் இந்தியாவுக்குள் ஊடுருவ முயன்ற பாகிஸ்தான் தீவிரவாதி பாதுகாப்புப் படையினரால் உயிரோடு கைது செய்யப்பட்டார்.

அவனிடம் விசாரணை நடத்தியதில் இந்திய இராணுவ இரகசியங்களை நோட்டமிட வந்ததாகவும் தன்னைப் போல் மேலும் சில தீவிரவாதிகள் இந்தியாவுக்குள் நாசவேலைத் திட்டத்துடன் ஊடுருவி இருப்பதாக தெரிவித்ததாகத் தெரிகிறது. இதையடுத்து நாடு முழுவதும் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளது.

இதற்கிடையே எதிர்வரும் 26ஆம் திகதி நடைபெறும் இந்திய குடியரசு தின விழாவைச் சீர்குலைக்கும் வகையில் நாசவேலையில் ஈடுபட தீவிரவாதிகள் திட்டமிட்டு இருப்பதாக உளவுத்துறை எச்சரிக்கை விடுத்துள்ளது. தீவிரவாதிகள் விமானத்தைக் கடத்தி அதன் மூலம் தாக்குதல் நடத்தலாம் என்று தகவல் கிடைத்துள்ளது. இதையடுத்து நாடு முழுவதும் விமான நிலையங்களில் கூடுதல் கண்காணிப்பும் கடுமையான பாதுகாப்பும் போடப்பட்டுள்ளது.

விமானப் பயணிகளும் அவர்கள் கொண்டு வரும் பொருட்களும் தீவிர சோதனைக்குப் பின்னரே அனுமதிக்கப்படுகின்றது.

இது தொடர்பாக கொச்சி, சென்னை, ஐதராபாத், பெங்களூர் உட்பட அனைத்து விமான நிலையங்களுக்கும் மத்திய அரசு உத்தரவு பிறப்பித்துள்ளதாக கொச்சி விமான நிலைய இயக்குனர் ஏ.சி. நாயர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், ஜனவரி 26ஆம் திகதி குடியரசு தினத்தையொட்டி நாட்டிலுள்ள அனைத்து விமான நிலையங்களுக்கும் தீவிரவாதிகளின் அச்சுறுத்தல் அதிகரித்துள்ளது. இதனால் பாதுகாப்புப் பலப்படுத்த உத்தரவிடப்பட்டுள்ளது.

விமான நிலைய நுழைவாயிலில் பார்வையாளர்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. 31ஆம் திகதி வரை இந்தத் தடை உத்தரவு அமுலில் இருக்கும். விமான நிலையத்துக்கு உள்ளே வரும் வாகனங்களை முழுமையாக சோதனையிடவும் ஒவ்வொரு இடத்திலும் பல கட்ட சோதனையில் ஈடுபடுமாறும் உத்தரவிடப்பட்டுள்ளது.

பயணிகளின் அனைத்துப் பொருட்களும் ஸ்கேனர் கருவி மூலம் சோதனையிடப்படுகின்றது. பாதுகாப்பு நடவடிக்கையில் கெடுபிடி அதிகம் இருக்கும். இவ்வாறு அவர் கூறினார். (2-4)

# பழங்காலச் சின்னங்களை காப்பதற்காக நவீன தொழில்நுட்பம் பயன்படுத்தப்படும்

## -இந்திய பிரதமர் தெரிவிப்பு-

(டில்லி)

பழங்கால நினைவு சின்னங்களை பாதுகாக்க நவீன தொழில் நுட்பம் பயன்படுத்தப்படும் என்று பிரதமர் மன்மோகன் சிங் கூறியுள்ளார். கொல்கத்தா நகரில் மௌலானா அபுல் கலாம் ஆசாத் கல்வி கழகம் சார்பில் அமைக்கப்பட இருக்கும் விஞ்ஞான நகரத்துக்கு அடிக்கல் நாட்டி அவர் பேசியதாவது,

இந்தியாவில் ஏராளமான பழங்கால நினைவு சின்னங்கள் இருக்கின்றன. அவை காலப்போக்கில் சேதம் அடைகின்றன. ஏராளமான நினைவு சின்னங்கள் அழிந்து




வருகின்றன. அவற்றை பாதுகாத்து உலக தரத்துக்கு கொண்டு வர வேண்டியது அவசியம்.

நவீன தொழில் நுட்பத்தை பயன்படுத்தி பழங்கால நினைவு சின்னங்களை பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்படும். அவற்றை நிர்வாகம் செய்யவும் நவீன தொழில் நுட்பங்கள் பயன்படுத்தப்படும். இதற்கு தேவையான நிதி வசதிகளை மத்திய அரசு



அளிக்கும்.

தொல்லியல் அகழ்வாராய்ச்சி துறைக்கு 8 நகரங்களில் நிர்வாக அலுவலகங்கள் உள்ளன. அவற்றுக்கு சிறந்த நிர்வாக அதிகாரிகள் விரைவில் நியமிக்கப்படுவார்கள். இந்த நியமனத்தில் விதிமுறைகள் தளர்த்தப்படும். இந்த துறை நடத்தும் அகழ்வாராய்ச்சி மற்றும் ஆய்வுப்பணிகளுக்கு தற்போது இருக்கும் கட்டுப்பாடுகள் தளர்த்தப்படும்.

நிர்வாகம் செய்வதில் தன்னாட்சி சுதந்திரம் அளிப்பது பற்றி பரிசீலிக்கப்படும் என்றாலும் அரசாங்கம் இதன் நடவடிக்கைகள் செயல்பாடுகளை கண்காணித்து வரும்.

அத்தோடு இங்கிலாந்தில் உள்ள பழங்கால பொருட்களை கொண்ட காட்சிசாலைக்கு இணையாக இந்தியாவில் இல்லை. அது போன்ற காட்சி சாலைகள் இங்கும் உருவாக்க வேண்டும். இவற்றில் பழங்கால பொருட்கள், பழங்கால ஓவியங்கள், பழங்கால எழுத்துக்கள் போன்றவற்றை காட்சிப்படுத்தலாம்.

மேலும் இந்தியாவில் உள்ள இதிகாசங்கள், வரலாற்று புத்தகங்கள் மற்ற மொழிகளிலும் மொழி பெயர்க்கப்படவேண்டும். சீனமொழி , அராபிய மொழி, பிரெஞ்சு மொழி போன்றவற்றில் மொழி பெயர்க்க நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

இவற்றுக்காக அகழ்வாராய்ச்சி துறைக்கு ரூ.90 கோடியை மத்திய அரசு ஒதுக்கி இருக்கிறது. இவ்வாறு மன்மோகன்சிங் பேசினார். 2-4)

# மீண்டும் தீவிரமாகிறது தனித்தெலுங்கானா போராட்டம்

(ஐதராபாத்)

ஆந்திர மாநிலத்தில் இடம்பெற்று இருக்கும் தெலுங்கானா பகுதியை தனி மாநிலமாக அறிவிக்க வேண்டும் என்று தெலுங்கானா ராஷ்டிர சமிதி கட்சியின் தலைவர் சந்திரசேகர ராவ் காலவரையற்ற உண்ணாவிரதம் மேற்கொண்டதன் விளைவாக தனி தெலுங்கானா மாநிலம் உருவாக்க தேவையான நடவடிக்கையை மேற்கொள்ளும் என்று மத்திய அரசு அறிவித்தது.

இந்த அறிவிப்பை தொடர்ந்து ஆந்திராவை உடைத்து தனி தெலுங்கானா மாநிலம் அமைக்க கூடாது என்று ராயலசீமா பகுதி மக்களும் கடற்கரை பகுதி மக்களும் போராட்டம் நடத்த தொடங்கினார்கள்.


இந்த நிலையில் மத்திய உள்துறை மந்திரி ப.சிதம்பரம் ஆந்திர மாநிலத்தை சேர்ந்த சர்வகட்சி தலைவர்களை டெல்லிக்கு அழைத்து கடந்த 5ஆம் திகதி பேச்சு நடத்தினார். இந்த கூட்டத்தில் உறுதியான எந்த முடிவும் எடுக்கப்படவில்லை.



இதைத் தொடர்ந்து சற்று தணிந்து இருந்த தெலுங்கானா போராட்டம் இப்போது மீண்டும் தீவிரம் ஆக தொடங்கி விட்டது. நேற்று முன்தினம் தனித்தெலுங்கானா அமைப்பதை மத்திய அரசு உடனே உறுதிப்படுத்த வேண்டும் என்று கோரி ஐதராபாத்தில் தெலுங்கானா போராட்ட குழு சார்பில் தொடர் உண்ணாவிரதம் தொடங்கப்பட்டது.


அங்குள்ள இந்திரா பூங்காவில் தொடங்கிய இந்த உண்ணாவிரத போராட்டத்தில் காங்கிரஸ் தலைவர்கள் ஆர் தாமோதர் ரெட்டி, பி.மோகன் ரெட்டி, தெலுங்கு தேசம் கட்சி தலைவர்கள் எஸ்.வேணு கோபாலாச்சாரி, எல்.ராமண்ணா, தெலுங்கானா ராஷ்டிர சமிதி தலைவர் கே.ஈஸ்வர் பிரஜா , ராஜ்ஜியம் கட்சி எம். எல். ஏ.மகேஷ்வர் ரெட்டி, பாரதீய ஜனதா எம். எல்.ஏ.லட்சுமி நாரா யணா உட்பட போராட்டக்குழு தலைவர்கள் கலந்து கொண்டனர். இது பற்றி போராட்டக்குழு ஒருங்கிணைப் பாளர் எம்.கோதண்டராம் நிருபர்களிடம் கூறி யதாவது,

எங்கள் உண்ணாவிரத போராட்டம் வரும் 28ஆம் திகதி வரை நடைபெறும். அதற்குள் மத்திய அரசு தனித்தெலுங்கானா பற்றி உறுதியான அறிவிப்பை அறிவிக்க வேண்டும். இல்லை என்றால் 29 ஆம் திகதி தெலுங்கானா பகுதியில் உள்ள அனைத்து எம்.எல்.ஏ.க்கள் மற்றும் எம்.பி.க்கள் தங்கள் ராஜினாமா கடிதங்களை அவரவர் கட்சி தலைவர்களிடம் ஏற்றுக்கொள்ளும்படி வற்புறுத்துவார்கள்.

அதன்பின் மிகப் பெரிய போராட்டம் நடைபெறும். இந்த போராட்டம் த்னித் தெலுங்கானா மாநிலம் உருவாக நடைபெறும் கடைசி போராட்டமாக அமையும். இவ்வாறு கோதண்டராம் கூறியுள்ளார். (2-4)



வன்னியிலிருந்து இடம் பெயர்ந்து நலன்புரி முகாமிலிருந்து வந்த பாடசாலை மாணவர்களுக்கு துவிச்சக்கர வண்டிகள் வழங்கும் நிகழ்வு நேற்றுக்காலை சென் ஜோன்ஸ் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது. இதில் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா மாலை அணிவித்து வரவேற்கப் படுவதனையும் ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி மற்றும் அமைச்சர் ஆகியோர் முறையே பாட சாலை மற்றும் தேசியக் கொடி ஏற்றுவதையும் ஆளுநரின் பிராந்திய ஆணையாளர் திருமதி சிவ லிங்கம் மங்கல விளக்கேற்றுவதையும் மேலுள்ள படங்களிலும் மாணவி ஒரு வருக்கு துவிச்சக்கர வண்டி கையளிகப்படுவதையும் , ஆளுநர் உரையாற்றுவதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களில் ஒரு தொகுதியினரையும் மற்றைய படங்களில் காணலாம்.



# ஹுசைன், ஹசன் பந்துவீச்சில் இந்திய அணி தடுமாற்றம்

## டெண்டுல்கர் புதிய சாதனை

(சிட்டாக்கொங்)

சஹாடாட் ஹுசைன்–ஹசன் ஜோடி யின் துல்லியமான பந்துவீச்சிற்கு ஈடுகொடுக்க முடியாது இந்திய அணி நேற்றைய முதல்நாள் ஆட்ட நேர முடிவில் அதன் முதலாவது இன்னிங்ஸில் 8 விக்கெட்டுக்களை இழந்து 213 ஓட்டங்களை எடுத்து தடுமாறி வருகின்றது.

பங்களாதேஷிற்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இந்திய அணி 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுகின்றது.

இதில் முதலாவது டெஸ்ட் போட்டி நேற்று சிட்டாக்கொங்கிங் ஆரம்பமானது. இப் போட்டியில் இந்திய அணித்தலைவர் தோனிக்கு ஓய்வு வழங்கப்பட்டு தினேஷ் கார்த்திக் அணியில் சேர்த்துக் கொள்ளப்பட்டதுடன் வீரேந்திர சேவாக்குக்கு அணித் தலைமை பொறுப்பு வழங்கப்பட்டது.

இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பங்களாதேஷ் அணித்தலைவர் சகிப் அல் ஹசன் முதலில் களத்தடுப்பை தீர்மானித்தார்.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணிக்கு காம்பீர்–சேவாக் ஜோடி சிறப்பான ஆரம்பத்தை வழங்கினர்.

இதில் அணித்தலைவர் சேவாக் 45 பந்துகளில் அரைச்சதத்தைப் பூர்த்திசெய்து அசத்தினார்.

எனினும் வீரேந்திர சேவாக் 51 பந்துகளில் (9 பவுண்டரிகள் அடங்கலாக) 52 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து ராகுல் டிராவிட் களமிறங்க மறுமுனையில் காம்பீர் 23 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க இந்திய அணி 15.2 ஓவர்களில் 79 ஓட்டங்களை எடுத்து அடுத்தடுத்து 2 விக்கெட்டுக்களையிழந்தது.

தொடர்ந்து டெண்டுல்கர் களமிறங்கி நிதானமாகத் துடுப்பெடுத்தாட மறுமுனையில் டிராவிட் 4 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

அடுத்து களமிறங்கிய லக்ஸ்மன் 7, யுவ ராஜ் சிங் 12, ஓட்டங்களுடனும் முரளி கார்த்திக் பூச்சியத்துடனும் ஆட்டமிழக்க இந்திய அணி 39.3 ஓவர்களில் 150 ஓட்டங்களை எடுத்து 6 விக்கெட்டுக்களையிழந்து திணறியது.

அடுத்து மிர்ஷா களமிறங்க மறுமுனையில் நம்பிக்கையுடன் துடுப்பெடுத்தாடிய டெண்டுல்கர். அரைச்சதத்தை பூர்த்தி செய்தார்.

இந் நிலையில் இந்திய அணி நேற்றைய முதல் நாள் ஆட்டநேர முடிவில் அதன் முதலாவது இன்னிங்ஸில் 8 விக்கெட்டுக்களை இழந்து 213 ஓட்டங்களை எடுத்தது.

இதில் சச்சின் டெண்டுல்கர் 76 ஓட்டங்களையும் இஷாந்த் சர்மா ஒரு ஓட்டத்தையும் ஆட்டமிழக்காமல் எடுத்தனர்.

பந்துவீச்சில் சசாடாட், ஹுசைன், அணித் தலைவர் சகிப் அல் ஹசன் ஆகியோர் தலா 4 விக்கெட்டுக்களை வீழ்த்தினர். இப்போட்டியில் இரண்டாம் நாள் ஆட்டம் இன்றாகும்.

### சச்சின் புதிய சாதனை

இப் போட்டியில் சச்சின் டெண்டுல்கர் 30 ஓட்டங்களை எடுத்த போது டெஸ்ட் கிரிக்கெட் அரங்கில் 13 ஆயிரம் ஓட்டங்களை கடந்த முதலாவது வீரராக புதிய சாதனை படைத்தார்.

# தென்னாபிரிக்கா இன்னிங்ஸினால் வென்று சொந்த மண்ணில் கௌரவமடைந்தது

(ஜோகனஸ்பேர்க்)


முன்னணி வீரர்கள் ஏமாற்றமளிக்க இங்கிலாந்து அணி இரண்டாவது இன்னிங்ஸில் 169 ஓட்டங்களை மாத்திரமெடுத்து சகல விக்கெட்டுக்களையுமிழந்து இன்னிங்ஸ் மற்றும் 74 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது.

இவ் வெற்றியின் மூலம் தென்னாபிரிக்க அணி டெஸ்ட் தொடரை 1:1 என்ற கணக்கில் சமன் செய்து சொந்த மண்ணில் கௌரவமடைந்தது.

தென்னாபிரிக்காவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இங்கிலாந்து அணி 4 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடியது.

இதில் முதல் மூன்று டெஸ்ட் போட்டிகளில் இரண்டாவது போட்டியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து அணி தொடரில் 1:0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றது.

இந் நிலையில் நான்காவதும் இறுதியுமான டெஸ்ட் கடந்த 14 ஆம் திகதி ஜோகனஸ்பேர்க்கில் ஆரம்பமானது.



இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி முதல் இன்னிங்ஸில் 180 ஓட்டங்களை எடுத்து சகல விக்கெட்டுக்களையுமிழந்தது.

தொடர்ந்து தனது முதலாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி 7 விக்கெட்டுக்களை இழந்து 423 ஓட்டங்களை எடுத்து ஆட்டத்தை இடைநிறுத்தியது.

இந்நிலையில் 243 ஓட்டங்கள் வித்தியாசத்தில் பின்னிலையிலிருந்த இங்கிலாந்து அணி தனது இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடி 169 ஓட்டங்களை மாத்திரமெடுத்து சகல விக்கெட்டுக்களையுமிழந்து இன்னிங்ஸ் மற்றும் 74 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது.

இவ் வெற்றியின் மூலம் தென்னாபிக்க அணி 4 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை 1:1 என்ற கணக்கில் சமன் செய்தது.

இப் போட்டியில் முதல் இன்னிங்ஸில் 3 விக்கெட்டுக்களையும் இரண்டாவது இன்னிங்ஸில் 4 விக்கெட்டுக்களையும் வீழ்த்தி தென்னாபிரிக்க அணியின் வெற்றிக்கு வழியமைத்த மோர்கல் ஆட்டநாயகனாகத் தெரிவானதுடன் தொடர் நாயகன் விருதை மார்க் பௌச்சர் பெற்றார்.

## யாழிலிருந்து...

இடத்திலேயே உயிரிழந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

படுகாயமடைந்த 8பேரும் உடனடியாக வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

உயிரிழந்த மற்றும் படுகாய மடைந்தவர்களின் விபரங்களை வவுனியா வைத்தியசாலையுடன் தொடர்பு கொண்டு பெறமுற்பட்ட போதும் வைத்தியசாலை வட்டாரங்கள் விபரங்களைத்தர மறுத்துவிட்டன. (ச)

## தமிழகத்திலுள்ள...

ஒரு வாழ்க்கையைப் பெற்றுக் கொடுக்கும் வகையில் அவர்கள் மீள அழைக்கப்படுவர்.

தமிழகத்திலிலுள்ள இலங்கை அகதிகளை இந்திய, தமிழக அரசுகள் சிறப்பான முறையில் பராமரிப்பதற்கு அவர்களுக்கு நன்றியைத் தெரிவிக்க வேண்டும்.

பல்வேறு சூழ்நிலையின் பொருட்டு கடல் கடந்து தமது உயிரைப் பாதுகாப்பதற்கு சென்ற இத் தமிழ் அகதிகள் மீளவும் தமது சொந்த இடங் களில் மீளக்குடியமர்த்தப்படுவார்கள் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ச–3)

# வன்முறை, போர்க் குற்றங்களில்...

அயர்லாந்து தலைநகரான டப்ளினில் நிரந்தர மக்கள் நீதிமன்றத்தில் இலங்கை அரசுக்கு எதிரான போர்க் குற்ற விசாரணைகள் நேற்று முன்தினமும் நேற்றும் நடைபெற்றிருந்தது.

விசாரணைகளின் முடிபில் மாலை 2 மணியளவில் பொதுமக்கள் முன்னிலையில் தமது முதற்கட்ட அறிக்கையை அவர்கள் வெளியிட்டுள்ளனர்.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கண்கண்ட சாட்சியங்கள் குறிப்ப்ாக போரின் இறுதி வாரத்தில் இலங்கை இராணுவத்தினர் முல்லைத்தீவில் பாதுகாப்பு வலயத்திலிருந்தவர்கள் மீது மேற்கொண்ட ஷெல் வீச்சின்போது 20 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் கொல்லப்பட்ட நிலையில் அங்கிருந்து தப்பி வந்தவர்கள் மற்றும் போர்க் குற்றம் தொடர்பான ஆவணங்கள் என்பவற்றின் அடிப்படையிலேயே இவ் விசாரணை நடத்தப்பட்டது.

ஆரம்ப கட்ட விசாரணைகளின் ஊடாக அது பின்வரும் 4 முடிபுகளை வந்தடைந்துள்ளது.

❖ இலங்கை அரசாங்கம் போர்க் குற்றங்களை மேற்கொண்டுள்ளது.

❖ இலங்கை அரசாங்கம் மனிதாயத்திற்கு எதிரான குற்றங்களில் ஈடுபட்டுள்ளது.

❖ இனப்படுகொலை தொடர்பில் மேலதிக விசாரணைகள் நடத்தப்பட வேண்டும்.

❖ சமாதான பேச்சுவார்த்தைகள் முறிவடைந்ததற்கு சர்வதேச சமூகமும் குறிப்பாக ஐக்கிய ராச்சியம்; ஐக்கிய அமெரிக்கா என்பன பொறுப்பேற்க வேண்டும்.

இதனைத் தொடர்ந்து இலங்கை சமாதானத்திற்கான ஐரிஸ் போரம் இதனை வரவேற்று பின்வரும் ஐந்து கோரிக்கைகளை முன்வைத்துள்ளது.

❖ இலங்கை அரசாங்கத்திற்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையேயான போரில் இறுதிக் கட்டத்தில் இடம்பெற்ற போர்க் குற்றங்கள் மற்றும் மனிதாயத்திற்கு எதிராக இழைக்கப்பட்ட குற்றங்கள் தொடர்பில் இலங்கை அரசாங்கமும் ஐ.நாவும் பூரண விசாரணை நடத்த வேண்டும்.

❖ இரகசியமான வதை முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 11 ஆயிரம் பேரையும் விடுவிப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும்.

❖ அப்பாவி மக்களுக்கு எதிரான சட்டபூர்வமற்ற கொலைகள், பாலியல் வன்முறைகள் மற்றும் தண்ணீரையும் உணவையும் சாதாரண மக்களுக்கு எதிராகப் பாவித்தல் போன்றவற்றை நிறுத்த வேண்டும்.

❖ வேறுபட்ட அபிப்பிராயங்களுக்கு வன்முறை மூலம் தீர்வு காணுதலை இலங்கை அரசாங்கம் நிறுத்த வேண்டும்.

❖ இலங்கையின் எல்லா மக்களுக்குமான மனித உரிமைகளை உறுதிப்படுத்துவதோடு தமிழ்மக்களுடைய முழுமையான பங்கு பற்றுதலுடன் கூடிய ஒரு நிரந்தரமான தீர்வை நீண்ட காலமாக புரையோடிப் போயிருக்கும் இனப்பிரச்சினைக்கு இலங்கை அரசாங்கம் முன்வைக்க வேண்டும்.

இதேவேளை இலங்கை அரசும் அதன் பண்டகளும் துணைப் படைகளும் தமிழ் பொதுமக்கள் மீது போர்க் குற்றங்கள் மற்றும் முக்கியமான மனித உரிமை மீறல்களை இழைத்தமை குறித்துப் பல முக்கியமான ஆவணங்கள் டப்ளின் விசாரணைக்குழுவினால் முன்வைக்கப்பட்டுள்ளது.

சர்வதேச சட்டங்களின் கீழ் இக் குற்றங்களுக்குக் காரணமானவர்கள் இனங்காணப்பட்டு அவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும் எனவும் அதில் கேட்டுக் கொண்டுள்ளது.

டப்ளின் விசாரணைக்குழு சுமத்தியுள்ள குற்றச்சாட்டுக்களை இலங்கை அரசு நிராகரித்துள்ளது.

இதேவேளை இலங்கை போர்க் குற்றங்கள் தொடர்பாக விசாரணைகள் நடத்திய நியாயசபை குழுவின் குற்றச்சாட்டை இலங்கை அரச அதிகாரிகள் நிராகரித்துள்ளனர். (ச-5)


வெளிவந்துவிட்டது தரம் 11ற்கான
வணிகமும் கணக்கீட்டுக் கல்வியும்

உள்ளடக்கம்
※ முழுமையான பாடத்திட்டம்
※ பயிற்சி வினாவுடன் கூடிய விடைகள்
※ விடய ஆய்விற்கான விளக்கம்
※ கடந்தகால பரீட்சை வினாக்களுடன் விடைகள் 2008 & 2009 (Tamil & Eng)

ஆசிரியர் :-J . தமிழ்அழகன்
(B.Com (Acc.Spl), H.N.Dip in Acc)
அனைத்து புத்தகசாலையிலும் புதிய வெளியீடு 2010 என கேட்டுவேண்டவும்.
(369)



எட்டு ஆண்டுகள் பின் கிட்டிய வெற்றி
கண்டு கொட்டியது மகிழ்மழை




2009 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து இன்று யாழிந்து அன்னையின் மடி சேரும் நல்லூர் மங்கையர்க ரசியின் குழந்தைகள் நித்தியானந்தன் துங்கீசன், துரைஜயா விதுர்சன் ஆகியோரை வாழ்த்தும் நாம், எம்மோடு தொடர்ந்திருந்து அடுத்த வெற்றிக்காய் காத்திருக்கும் வெட்டுப் புள்ளியை அண்மித்த தமிழழகன் விதுர்சன் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற ஜெ.ஸ்ரீவத்சன், ச.சஸ்ரீபா, ஜெ.சாயிக்குமரன், இ.கிருஷாந் ஆகியோரையும், அயராது உழைத்த ஆசிரியை திருமதி லலிதா சற்குணராஜா அவர்களையும் பாராட்டி வாழ்த்துகிறோம்.



நல்லூர் மங்கையர்க்கரசி
வித்தியாலயக் குடும்பம்
Nallur Mankayarkarasi Vidyalayam
(C-4247)



## சாரதி தேவை

TURNEY பிஸ்கட் யாழ். மாவட்ட விநியோகஸ்த நிறுவனத்துக்கு சிறு பாரவூர்தி செலுத்த சாரதி தேவை. அரச சாரதி அனுமதி பத்திரத்துடன் கீழ்க் காணப்படும் TURNEY பிஸ்கட் விநியோக நிறுவன முகவரியுடன் இன்று காலை 8.00 மணி -10.00 வரைக்குள் தொடர்பு கொள்ளவும். சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும். (யாழ். மாநகர சபை எல்லைக்குள் வசிப்பவர் விரும்பத்தக்கது)

இல. 24/A சேர்பொன் இராமநாதன் வீதி,
யாழ்ப்பாணம்.

T.P.: 077 4609620, 021 3207009
(C-4251)


# தபால் மூல வாக்களிப்...

முன்னணியின் தலைவர் மனோ கணேசன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

ஜெனரல் சரத் பொன்சேகா தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது,

எமது வெற்றி தற்போது உறுதி செய்யப்பட்டுள்ளது. ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு இடம்பெற்ற தபால் மூல வாக்களிப்பில் எனக்கு 90 வீதமானோர் வாக்களித்துள்ளனர்.

10 வீதத்தை மாத்திரமே ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பெற்றுள்ளதாக தகவல் தெரிவிக்கின்றன. இந்த நிலையில் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் எனக்கு 80 வீதமானவர்கள் வாக்களிப்பார்களானால் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தனது கட்டுப் பணத்தினையும் இழக்க நேரிடும்.

எனவே இந்த நாட்டிலுள்ள முக்கிய கட்சிகள் என்னை ஆதரிக்க முன்வந்துள்ளன.

நான் வெற்றி பெறுவதன் மூலம் இந்த நாட்டில் சர்வாதிகார ஜனாதிபதி முறையை ஒழித்து ஜனநாயகத்தினை நிலை நிறுத்துவேன்.

அத்துடன் என்னால் வழங்கப்பட்ட சகல வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுப்பேன் என்றார். (ச-5)

# துப்பாக்கி...

பாதுகாப்புக்கு வழங்கப்பட்ட கைத்துப்பாக்கியே தவறுதலாக வெடித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்ற போதும் அதற்கான காரணங்கள் தெரிவிக்கப்படவில்லை. (ச-3,5)

# மரண அறிவித்தல்கள்

## ஆறுமுகம் நடராசா



மண்டைதீவைப் பிறப்பிடமாகவும், திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த ஆறுமுகம் நடராசா 2010.01.17ஆம் திகதி நேற்று இறைவனடி சேர்ந்து விட்டார்.

அன்னார் காலம்சென்ற ஆறுமுகம் ஆச்சிக்குட்டி தம்பதிகளின் அன்பு மகனும், நகுலாம்பிகையின் அன்புக் கணவரும், மோகனராஜ் (உதவி அஞ்சல் அதிபர், அஞ்சல் அலுவலகம் மானிப்பாய்), கந்தலீலா (ஆசிரியர் புனித அந்தோனியார் கல்லூரி, ஊர்காவற்றுறை) ஆகியோரின் பாசமிகு தந்தையும், பிறேமாவின் அன்பு மாமனாரும், காலம் சென்றவர்களான பொன்னம்பலம், செல்லையா, ஐயாத்துரை, சிவசம்பு மற்றும் புவனேஸ்வரிதேவி ஆகியோரின் சகோதரனுமாவார்.


அன்னாரின் இறுதிக் கிரியைகள் 18.01.2010 இன்று திங்கட்கிழமை காலை 10 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக திருநெல்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்
குடும்பத்தினர்
205, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி.

கஜன் கொமினிகேஷன்,
திருநெல்வேலி.
(365)

## வேதக்குட்டிக்குருக்கள் தியாகராஜசர்மா



(பிரதமகுரு-
ஆவரங்கால் கன்னாரை அம்மன் தேவஸ்தானம்,
அச்சுவேலி மீனாட்சி அம்மன் தேவஸ்தானம்,
தோப்பு போதிப்பிள்ளையார் தேவஸ்தானம்,
மந்துவில் கேலத்து அம்மன் தேவஸ்தானம்)

ஆவரங்கால் சிவன்கோவிலடியைச் சேர்ந்த வேதக்குட்டிக்குருக்கள் தியாகராஜசர்மா அவர்கள் நேற்று (17.01.2010) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேதக்குட்டிக்குருக்கள்-புவனேஸ்வரி அம்மா தம்பதிகளின் மகனும் காலஞ்சென்றவர்களான பரமசாமிக்குருக்கள்-ஆனந்தம்மா தம்பதிகளின் அன்பு மருகனும் கோகிலராணியின் அன்புக் கணவரும், மனோரஞ்சினி (ஆசிரியை, யாழ்/இந்துக்கல்லூரி), கிருபாகரன், ஜனரஞ்சினி ஆகியோரின் அன்பு தகப்பனாரும், லோகேஸ்வரசர்மாவின் (நுணாவில், கந்தசுவாசி (வைரவர்) தேவஸ்தானம்) அன்பு மாமனாரும், சங்கவனின் அன்புப் பேரனும் நடராஜக்குருக்கள், சரண்யபுரீஸ்வரக்குருக்கள், பர்வதபர்த்தினி அம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.01.2010) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் இடம்பெற்று மாலை 4.30 மணியளவில் பூதவுடல் தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
ச.லோகேஸ்வரசர்மா (மருமகன்)
கிருபாகரசர்மா (மகன்)

ஆவரங்கால்,
புத்தூர்.
(368)


JEYANTHA INDUSTRIAL PARK (PVT) LTD
SCHOOL ROAD, KATCOVALAM, POINT PEDRO
PHONE : 021 567 1025

கோலாகலத் திறப்பு விழா...

## கற்கோவளம் ஐஸ் தொழிற்சாலை

யாழ்ப்பாண கடற் தொழிலாளர்களினதும்
கடலுணவு வியாபாரிகளினதும் நன்மை கருதி,

இன்று (18.01.2010) காலை 9.45 மணிக்கு திறந்து வைக்கப்படும்.

தலைவர்:
திரு.கணபதிப்பிள்ளை பாலசுப்பிரமணியம்
(முகாமையாளர், யூனியன் வங்கி, யாழ்ப்பாணம்.
(முன்னாள் உதவிப் பொது முகாமையாளர், இலங்கை வங்கி)

பிரதம விருந்தினர்:
திரு.சிவசரவணபவன் சுந்தரேஸ்வரன்
(முகாமையாளர், ஹட்டன் நஷனல் வங்கி. சுன்னாகம்)

அனைவரையும் அன்போடு அழைக்கின்றோம்
(344)

தலைமை நிறைவேற்று அதிகாரி, பணிப்பாளர் சபையினர் மற்றும் தொழிலாளர்கள்
ஜெயந்தா கைத்தொழில் பூங்கா (தனியார்) வரையறுக்கப்பட்டது
கம்பனி பதிவு இலக்கம் PV 68439

பாடசாலை வீதி, கற்கோவளம்,
பருத்தித்துறை.
தொலை பேசி: 021 567 1025


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 18.01.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.